பதினாறு பக்கங்கள் — விலை ரூபா நான்கு

சிறந்த முறையில்
வீடியோ படம் பிடித்திட
வீடியோ
விஹோன்ஸ்
353C, மணிக்கூட்டு வீதி,
வெலிங்டன் சந்தி

# வார முரசொலி

For Quality
Video Filming
VIDEO
VIHONS
353C, Clock Tower Rd
Wellington Junction

முரசு 3 — ஒலி 241 — ஞாயிற்றுக்கிழமை 10 - 9 - 1989 — ஆவணி 25 — ஸபா 09

★ புதன்கிழமை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறும்

# சர்வகட்சி மாநாடு ஒரு ஏமாற்று; நாட்களை கடத்தும் அரசின் முயற்சி

## பதவியைக்காக்க ஜனாதிபதி முயல்வதாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கண்டனம்

(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதி நடத்தவுள்ள சர்வகட்சி மாநாடு ஒரு அரசியல் ஏமாற்று என்றும், ஜனாதிபதி தனது பதவியைக் காக்கவும் நாட்களைக் கடத்தவும் இதனை ஒரு தற்காலிக சந்தர்ப்பமாகப் பாவிக்க முயல்வதாக எதிர்க்கட்சி உறுப்பினர் சிலர் குற்றம்சாட்டியுள்ளனர்.

ஜனாதிபதி பிரேமதாஸ நேற்று முன்தினம் இரவு இலங்கை எதிர்க்கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான குழுவொன்றை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்து நாட்டின் தற்போதைய நிலைகுறித்து உரையாடினார். ஸ்ரீ.ல.சு.க, ஐ.சோ.மு, ஈ பி ஆர்.எல்.எப், ம ஐ மு ஆகியவற்றின்

— 16 ஆம் பக்கம் பார்க்க

## இருவாரத்தில் மின்சாரம் பெற யாழ். வந்த அமைச்சர் முடிவு

யாழ். குடாநாட்டின் மின்சாரப்பிரச்சினை குறித்து ஆராய்வதற்காக மின்சக்தி எரிபொருள் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

கட்டிட நிர்மாணத்துறை பிரதியமைச்சர், மின்சார சபை அதிகாரிகள், லங்கா சிமெந்து நிறுவன அதிகாரிகள் சகிதம் காங்கேசன் சிமெந்து நிறுவன 'காஸ்ரேர் பைன்' ஜெனரேட்டரை அமைச்சர் பார்வையிட்டார்.

இக்குழுவில் ஈரோஸ் எம். பிக்கள் திரு. பரராசசிங்கம், திரு.

—16 ஆம் பக்கம் பார்க்க

## வன்னி மாவட்ட மடுக்கந்தவில் புதிய இலங்கை ராணுவ முகாம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் மடுக்கந்த என்னுமிடத்தில் இலங்கை ராணுவம் புதிய முகாம் ஒன்றினை அமைத்துள்ளது. கடந்த இரண்டு மாத காலமாக இம்முகாம் இங்கு இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை இந்திய சமாதான ஒப்பந்தப் பிரகாரம் இலங்கைப்படையினர் புதிய முகாம்களை வடகிழக்கில் அமைக்க முடியாது என்றும் மடுக்கந்தசமநலசேவைக்கட்டிடத்தில் இம் முகாம் அமைக்கப்பட்டிருப்பதாக தமக்கு தகவல் கிடைத்திருப்பதாக வவுனியா மாவட்ட அரசியல் இணைப்பாளர் திரு ப பரா

— 16 ஆம் பக்கம் பார்க்க

## வன்செயலில் காயமடைந்த சகல ஊழியருக்கும் நஷ்டஈடு

அரசாங்க சேவையிலுள்ள ஆசிரியராயினும் அல்லது ஏனைய அரச ஊழியராயினும், கடமையில் ஈடுபட்டுக் கொண்டோ அல்லது கடமையில் ஈடுபடாமல் இருக்கும் போதோ, வன்செயல் காரணமாகவோ அல்லது பயங்கரவாத நடவடிக்கைகளினாலோ மரணமடைந்திருந்தால் அல்லது காயமுற்றிருந்தால், அவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் என்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கோரிக்கையை அரசு ஏற்றுள்ளது என சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதாக

— 16 ஆம் பக்கம் பார்க்க

## திருமலை நேர்முகப்பரீட்சையில் தெரிவான 400 பேருக்கு அடுத்த மாதம் ஆசிரிய நியமனம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் வடக்கு கிழக்கு மாகாண அரசின் கல்வி அமைச்சால் நடாத்தப்பட்ட ஆரம்ப வகுப்பு ஆசிரியர்களுக்கான நேர்முகப்பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு இம்மாத நடுப்பகுதியில் இருந்து நியமனம் வழங்கப்படவுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மத்திய அரசின் கல்விச் சேவை ஆணைக்குழுவினால் 1987 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட போட்டிப்பரீட்சைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு இதுவரையும் நியமனம் கிடைக்காதிருந்த சுமார் நானூறுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் வடக்கு-கிழக்குப்

— 16 ஆம் பக்கம் பார்க்க

## அமைதிப்படை விலகல் இந்திய முடிவில் முரண்பாடு

(புதுடில்லி)

அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன பெல்கிரேட்டில் இந்தியப்பிரதமர் ராஜிவ் சமர்ப்பித்த முடிவுகளை நேற்று ஜனாதிபதி பிரேமதாஸவிடம் ஒப்படைத்தார் இந்தியாவின் முடிவுகளில் உள்ள ஒரு சில முரண்பாடுகள் குறித்து இந்தியாவிடம் தொடர்புகொள்ள முயற்சிக்கப்படும் என அவர் பின்னர் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில்

## 144 விவசாய உத்தியோகத்தர் கிராம சேவகராக நியமனம்

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த 144 விவசாய உத்தியோகத்தர்களுக்கு கிராம சேவை அலுவலர்களுக்கான நியமனக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. யாழ். செயலகத்திற்கே இக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

விவசாய உத்தியோகத்தர்களையும், விவசாய விரிவாக்க

→ 16 ஆம் பக்கம் பார்க்க

## சர்வகட்சி மாநாட்டில் கூட்டணி கலந்து கொள்ளும்

எதிர்வரும் 13-ம் திகதி புதன் கிழமை ஜனாதிபதி ஆர். பிரேமதாஸவினால் கூட்டப்படவுள்ள சர்வகட்சி மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி பங்கு பற்ற முடிவு செய்துள்ளது.

கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம், திரு. வி.

— 16 ஆம்பக்கம் பார்க்க

## புலோலியில் அசம்பாவிதம் மூவர் சுடப்பட்டு மரணம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை, புலோலிப் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற மோதலையடுத்து பொது மக்கள் இருவர் பலியாகினர். ஷெல் குண்டு வெடிப்பால் சில வீடுகள் சேதமடைந்தன. சிலர் காயமடைந்துள்ளனர்.

புலோலி தெற்கு பல்லப்பையைச் சேர்ந்த சுகாதாரத் திணைக்கள இளைப்பாறிய உத்தியோகத்தர் சுப்பிரமணியம்

— 16 ஆம் பக்கம் பார்க்க

## ஈட்டி, வாள், வேல் கொண்டு 12 முஸ்லிம்கள் படுகொலை

(புதுடில்லி)

இந்திய அஸ்ஸாம் மாநிலத்தில் போடோ கிளர்ச்சிவாதிகள் ஈட்டி, வாள், வேல் சகிதம் சென்று முஸ்லிம் கிராமம் ஒன்றைத்தாக்கி பன்னிரண்டு முஸ்லிம்களைக் கொன்றனர்.

போடோ கிளர்ச்சியை முடிவுக்கு கொண்டுவருவதாக அஸ்ஸாம் மாநில அரசு

— 16 ஆம் பக்கம் பார்க்க

தெல்லிப்பழை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
இன்று சப்பறத் திருவிழா
நாளை தேர் உற்சவம்

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வெளிநாட்டு மூக்குக்கண்ணாடிகளை (Reading glasses only) வைத்திய நிபுணர்களின் சிபார்சின் பிரகாரம் பெற்றுக்கொள்ளவும், குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளவும் நாடவேண்டிய இடம் பென்ஸி ஹவுஸ், 68, பெரியகடை, யாழ்ப்பாணம். 09123

சொப்பர் சைக்கிள் நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. மூன்று கியர், பாஸ்கற், பெல், பூட்டு ஆகியவற்றுடன் ரூபா 1500, விலாசம்: இராசையா, 22, சந்தான மாதா கோவில் றோட், பாண்டியன் தாழ்வு, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் 09111

### சேவை

ஜெனரேட்டரின் உதவியுடன் சகல விதமான பற்றரிகளும் 24 மணி நேரத்திற்குள் 'சார்ஜ்' (Charge) செய்து கொடுக்கப்படும். மெடிக்கல் ஹோல், இல. 224, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 09128

## கல்வி

G. C. E. (O/L) ல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கு 22வருட அநுபவமுள்ள ஆசிரியரினால் 2 மாதத்திற்குள் விசேடசித்திக்குக்கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. 09061

## நன்றியறிந்த காணிக்கை



யேசுவின் திரு இருதயமே எங்கள் மேல் இரக்கமாயிரும். யேசுவின் ஐந்துதிருக்காயத்தின் அருளாலும் அன்னை வேளாங்கண்ணி ஆரோக்கியமாதா, சகாயமாதா, செபமாலைமாதா அடைக்கலமாதா, புனித சூசையப்பர், புனித அன்னம்மாள், புனித அந்தோனியார், பியோ ஆண்டவர் இன்னும் புனிதர்கள் அருளாலும் தாயையும் குழந்தையையும் சத்திரசிகிச்சையிலிருந்து காப்பாற்றியதற்காக நன்றி அறிந்த தோத்திரம். இது போல் எல்லா ஆபத்திலிருந்தும் வியாதி வருத்தம் துன்பத்திலிருந்து காப்பாற்றி இக்குடும்பம் சமாதானமாய் ஒற்றுமையாய் வாழ இறைவனை ப்பிரார்த்திக்கின்றேன்.

மனமார்ந்த நன்றி 09133



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## பதவி வெற்றிடங்கள்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் என்னால்பெற்றுக் கொள்ளப்படும்.

1. மருத்துவப் பேராசிரியர்.
2. உடலமைப்பியல் பேராசிரியர்
3. கல்வியியல் பேராசிரியர்
4. உடற்குறை அறுவை மருத்துவத்தில் அறக்கொடைத்தவிசு
5. நோயியல் / ஒட்டுண்ணியியல் / நுண்ணுயிரியல் உடற்றொழிலியல் / மகப்பேற்றியலும், மாதர் நோயியலும் / குழந்தை மருத்துவம் / அறுவை மருத்துவம் / சமூக மருத்துவம் / சட்ட மருத்துவம் ஆகியவற்றில் விரிவுரையாளர் / சிரேட்ட விரிவுரையாளர் தரம் II
6. உடற்றொழியியலில் உதவி விரிவுரையாளர் / தற்காலிகஉதவிவிரிவுரையாளர்
7. உயிரிரசாயனவியலில் / உடலமைப்பியலில் / தற்காலிக உதவி விரிவுரையாளர்
8. இரசாயனவியலில் உதவி விரிவுரையாளர் / சிரேட்டவிரிவுரையாளர் தரம் II
9. உதவிநூலகர் தரம் II
10. அரபு மொழியியலிலும் இஸ்லாமிய நாகரிகத்திலும் உதவி விரிவுரையாளர் / சிரேட்ட விரிவுரையாளர் தரம் II
11. பௌதிகவியலில்தற்காலிக செய்முறை காட்டுநர்.

**சம்பள அளவுத்திட்டம்:** பேராசிரியர் தரம் II: ரூபா 12,200 - 6×300 -14,000 (மாதமொன்றுக்கு). சிரேட்ட விரிவுரையாளர் தரம் II: ரூபா 8000 - 5×250 - 9250 (மாதமொன்றுக்கு). விரிவுரையாளர் (மருத்துவம்): ரூபா 4500 - 10× 200 - 6500 மாதமொன்றுக்கு) (மருத்துவபீட விரிவுரையாளரொருவர் முதலாவது நியமனத்தின் போது ரூபா 4500/- சம்பளத்திற்கு இரண்டு படிகள் அதிகமாக அதாவது மேற்குறித்த சம்பள அளவுத்திட்டத்தில் 4900/- ரூபாவில் வைக்கப்படுவர்.)

உதவி விரிவுரையாளர்: ரூபா 3900/-மாதமொன்றுக்கு (நிலையானது) ஆண்டொன்றுக்கு. உதவி நூலகர் தரம் II: ரூபா 3900/ மாதமொன்றுக்கு (நிலையானது) ஆண்டொன்றுக்கு. பௌதிகவியலில் தற்காலிக செய்முறை காட்டுநர் ரூபா 3250/- மாதமொன்றுக்குப்பேராசிரியர் பதவிகளுக்கும் அறக்கொடைத் தவிசுகளுக்கும் விண்ணப்பமுடிவு திகதி 1989 நவம்பர் 15 ஆம் தேதியாகும். ஏனைய பதவிகளுக்கு முடிவு திகதி 1989 ஒக்டோபர் 4 ஆம் திகதியாகும்.

இவ்வலுவலகத்தில் பெறக்கூடிய விண்ணப்பப் படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படவேண்டும். பேராசிரியர் பதவிக்கும் அறக்கொடைத்தவிசுக்கும் விண்ணப்பப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு ரூபா 1.50முத்திரையொட்டப்பட்ட 23×10 ச. மீ அளவுடைய தபால் உறையும் அனுப்பப்படல் வேண்டும்.

அரசாங்கத்திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் என்பனவற்றின் விண்ணப்பதாரிகள் அவற்றின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்

தெரிவுசெய்யப்பட்ட அபேட்சகரின் சிறப்புத்தகைமைகளையும்/ அல்லது அனுபவத்தையும் கவனத்திற்கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படலாம்.

குறிப்பு:- பேராசிரியர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் கவனிக்கப்படும்

பிரதிப் பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.
1989. 09. 01
09131


# இந்த வாரம் உங்கள் பலன்

## யாழ்சோதிடர். ச. அரியநாயகம்

### 10 -09-1989 — 16-09-1989

**மேடம்** பிதாவழியுதவி, வாகனசுகம், பெரியோராசி, உத்தமருறவு, வெளியூர் பிரயாணம், மனை பூமிச்சேர்க்கை, சகோதர,வழியுதவி, பணப்புழக்கம், வெளியூர் போனவர்கள் வருகை, புதுத்தொழில், வணிகர்கள் இலாபம்.

**இடபம்** உடல்ரோகம், பணவிரயம், மனக்கிலேசம், பெரியோருதவி, வாகனசுகம், வணிகர்கள் கடல்தொழில் செய்வோர், இலாபம், மாமன் வழியுதவி, தேடியவர் வருகை, புதுத்தொழில், கல்வியால் நன்மை, காதலர் ஒன்றுசேருவர்.

**மிதுனம்** சுகஜீவியம், விவாக நிச்சயம், வணிகர்கள், கடல்தொழில் செய்வோர் இலாபம், உத்தியோக உயர்வு, பிரிந்த காதலர் ஒன்று சேருவர், வெளியூர் போனவர்கள் வருகை, வாகன மாற்றம், மனையலங்காரம்.

**கடகம்;** சத்துருபீடை, மாதாவழியுதவி, மாமன் வழியுதவி, வாக்கு வசீகரம், உயர் பதவி மூலம் இடப்பிரிவு, திடீர்ப்பிரயாணம், தேடியவர் வருகை, இளைய சகோதரவழியுதவி, வெளியூர்ச் செய்தியால் நன்மை, மகப்பேறு, லக்சுமி கடாட்சம்.

**சிங்கம்** புத்திர மகிழ்ச்சி, புண்ணிய வழிபாடு, புதுத்தொழில், புகழ்தேடி வரும், பூர்வீகசொத்துக் கிடைக்கும், வாகனசுகம், வணிகர்கள் கடல்தொழில் செய்வோர் இலாபம், உயர் பதவி, விவாக நிச்சயம், பணப்புழக்கம், பெரியோருதவி, புதுத் தொழில் முயற்சி.

**கன்னி** மாதா வழி பகை, வாகன மாற்றம், விவாகத் தடை, வீண் செலவு, கலைஞர் கௌரவம், பிரிந்தவர் ஒன்று சேருவர், வாக்கு வசீகரம், வணிகர்கள் கடல் தொழில் வைத்தியத் தொழில் செய்வோர் இலாபம், வெளியூர் செய்தியால் நன்மை.

**துலாம்** பெரியோர் வருகை புண்ணிய வழிபாடு புகழ் தேடி வரும், வாகனசுகம், வணிகர்கள் கடல் தொழில் வைத்தியத் தொழில் செய்வோர் இலாபம், வெளியூர் பிரயாண நிச்சயம், மனையில்சுபகாரியம், பணப்புழக்கம், லக்சுமி கடாட்சம் இளைய சகோதர வழியுதவி.

**விருச்சிகம்** வாக்கு வசீகரம், கல்வியால்தொழில், உயர் பதவி, பெரியோராசி, இராஜ மரியாதை, வாகனசுகம், இளைய சகோதர வழியுதவி, புகழ்தேடி வரும், தெய்வ ஆசி, தேடியவர் வருகை, வாகன சுகம், வணிகர்கள் கடல் தொழில் செய்வோர் இலாபம்

**தனுசு** பெண்களால் பகை, வாகன மாற்றம், விவாகத் தடை, மனச்சஞ்சலம், பண முடை, தேடியவர் வருகை, தடைப்பட்ட பணம் கிடைக்கும், பிரிந்தவர் ஒன்று சேருவர், பிதாவழியுதவி, வெளியூர் போனவர் வருகை, களஸ்திர வழியுதவி, புதுத்தொழில்.

**மகரம்** சுகஜீவியம், தேடியவர் வருகை, வாகன சுகம், வணிகர்கள் கடல்தொழில் செய்வோர் இலாபம், உயர் பதவி, மூலம் இடமாற்றம், மாதாவழியுதவி, புகழ் தேடி வரும், புண்ணிய வழிபாடு

**கும்பம்** வாகன இலாபம், வணிகர்கள் கடல் தொழில் செய்வோர் இலாபம், பெரியோராசி, புகழ் தேடிவரும், வெளியூர் போனவர்கள் வருகை, கலைஞர்கள் கௌரவிக்கப்படல், பிரிந்த காதலர் ஒன்று சேருவார்கள், புதுத் தொழில்.

**மீனம்** உயர் பதவி, வாக்கு வசீகரம் மனமகிழ்ச்சி, விவாக நிச்சயம், வணிகர்கள் கடல் தொழில் செய்வோர் இலாபம், வெளியூர் போனவர் வருகை, லக்சுமிகடாட்சம், புதுத்தொழில், புதுமனைச் சேர்க்கை, மூதாதையர் சொத்து கிடைக்கும்

## ஆதீனத்தில் யோகாசனப்போட்டி

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் எதிர்வரும் 16-ம் திகதி சனிக்கிழமை யோகாசனப்போட்டியும் பரிசளிப்பு வைபவமும் இடம்பெறவுள்ளது.

சாந்தியோக நிலையத்தினரால் நடாத்தப்படும் இந்த நிகழ்ச்சி 17-ம்திகதியும் இடம் பெறவுள்ளது. இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் மங்கல இசை மங்களவிளக்கேற்றல் சிறப்புச்சொற்பொழிவுகள் என்பன இடம் பெறவுள்ளன.

போட்டியில் வெற்றி பெற்றோருக்கு ஆதீன இரண்டாவது குருமகா சந்நிதானம் சிவதர்மவள்ளல் க. கனகராசா ஆகியோர் பரிசில்கள் வழங்குவார்கள்.

## அம்பாறையில் அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் இவ்வருடம் புகையிலைச் செய்கை அமோகவிளைச்சலைக் கொடுத்துள்ளதாக விவசாயத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

சாதாரணமாக ஒரு ஏக்கர் விஸ்தீரணத்தில் புகையிலைச் செய்கையில் ஈடுபட்ட ஒரு விவசாயி செலவுகள் போக 40 ஆயிரம் ரூபாவரை இலாபம் பெற்றிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இப்புகையிலை சுருட்டு உற்பத்திக்குப் பாவிக்கப்படுவதால் சுருட்டு உற்பத்தியும் அதிகரிக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது

## விண்ணப்பப்படிவம் விநியோகம்

(தாளையடி)

புனர் வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் ஒன்றிணைக்கப்பட்ட நிவாரணத் திட்டத்தின்கீழ் வீடுகள் திரும்ப அமைபபதற்கான, திருத்துவதற்கான நன்கொடைகள், வழங்குவதற்கான விண்ணப்பப் படிவங்கள் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் கிராம சேவையாளர்களூடாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

ஒன்றிணைக்கப்பட்ட நிவாரணத் திட்டப் படிவத்தில் வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளது, அல்லது ஒரு பகுதி பாதிக்கப்பட்டுள்ளது எனப் பதிவு செய்தவர்களுக்கு மட்டுமே விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படுகின்றது.


விற்பனையாகிறது
Work Out Physics 'A' Level
ஆசிரியர்
R. சத்தியசீலன் B.Sc

CLASSES IN ENGLISH
TYPING
SCHOOL OF BUSINESS ADMINISTRATION
16, 3 RD. CROSS ST.
JAFFNA.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## தேவை

யாழ் நகரிலுள்ள புளக் தயாரிக்கும் நிறுவனமொன்றிற்கு ஓர் அனுபவமுள்ள ஆட்டிஸ் (Artist) தேவைப்படுகிறது. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு:

Art Graphics
53/1, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்
09136

திருப் பாற்கடல்

# நூற்றாண்டுகாணும் இதழின்

# 38 ஆண்டு ஆசிரியர்

சபரி கண்ணப்பன்


70 ஆண்டுகளுக்கு முன்னொருநாள்...

இந்துக்கல்லூரி வளவின் தென்மேற்கு மூலை; ஞானசேகரம் மண்டபம். அங்கேதான் சைவப்பிரகாச அச்சியந்திரசாலை அப்போது இயங்கியது (இன்றுள்ள இடத்தில் சிதம்பரநாதச் செட்டியார் முயற்சியால் 1928-ம் ஆண்டு கார்த்திகை விளக்கீட்டுத் தினத்தன்றே அச்சுயந்திரம் குடிபுகுந்தது)

கல்லூரி இடைவேளைப்போது அங்கு படித்த மாணவன் ஒருவன் அச்சுவேலைப் பிரிவுக்குப் போவான் அச்சு யந்திர வேலை நுணுக்கங்களைப் புரிந்துகொள்ள வேண்டும் என்ற வேணவா அவனுக்கு

இந்த மாணவன் பன்றிக்கோட்டுப் பிள்ளையார் வீதி இல்லமொன்றிலே தான் தங்கினான். இந்துக்கல்லூரி ஆசிரியர் பண்டிதர் ம வே. திருஞானசம்பந்தர் இல்லமும் அருகிலேதான் இருந்தது காலையும் மாலையும் அவர் தரிசனம் கிடைக்கத் தவறுவதில்லை. நகைச்சுவை அவருடன் கூடப்பிறந்தது கையில் சதா இந்துசாதனம் இதழ் இருக்கும். அப்போது அவர் இந்து சாதனம் தமிழ்ப்பதிப்பின் ஆசிரியர். இந்த மாணவனைப் பார்த்துத் தம்பி இனி எதைப்பற்றி எழுத? என்று கேட்பார். மாணவன் சொல்வதைப் பரிவுடன் கேட்பார் மாணவனோ அடுத்தவார இதழில்தான் சொன்ன கருத்துக்கள்இடம் பெற்றிருக்கின்றனவா? என்றுகாண்பதிற் குறியாயிருப்பான். இப்படித்தொடங்கிய அச்சுத்தொழில் பத்திரிகைத்துறை ஆர்வம் அந்த மாணவன் அதே இந்து சாதனம் இதழின் ஆசிரியனாகவே ஆகும்வாய்பைத்தந்தது. அந்த வாய்ப்பும் இந்து சாதனம் மணிவிழாக் கொண்டாடி மலர் வெளியிடும் சந்தர்ப்பத்தில் (1951) வாய்த்த தென்றால் அவனுடைய அதிர்ஷ்டமே தனித்துவமானது என்று சொல்லத் தோன்றுகிறது. அதுமட்டுமல்ல இந்து சாதனம் தனது நூறாவது ஆண்டைக் கடந்து நூற்றொராவதுஆண்டில் அடியெடுத்து வைக்கும் இவ்வேளையிலும் (1989.09.11) அந்த மாணவனே ஆசிரியன். இவ்வாண்டிறுதியில் நூற்றாண்டு மலரை வெளியிடப் போவதுந் தானே என்பது தெய்வசித்தமல்லாமல் வேறென்ன? என்று பெருமகிழ்வுடன் கேட்கும் அந்த மாணவன் வேறு யாருமல்லன். 'ஆர். என்' என்று பெருமதிப்போடும் அபிமானத்தோடும் போற்றப்படும் திரு நம. சிவப்பிரகாசம் அவர்களே.

இந்துசாதனம் நூற்றொராவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இவ்வேளையில் திரு நம சிவப்பிரகாசம் அவர்களை அவர்களது இல்லத்திற் சந்திக்கிறோம். அதிகாலையில் எழுந்து நீராடித் தாய முனிபுங்கவர் போன்று காட்சி தரும் அவரைக் காணும் போதே புல்லரிக்கிறது. ஒரு தடவை தமது நீண்ட தாடியைக் கைகளால் நீவி விடுகிறார். கைகுவித்து வணங்கி 'வாருங்கள்!' என்று வாய் நிறைய வரவேற்கிறார் வந்த காரியத்தைச் சொல்கிறோம். அப்படியா? என்றவர் முகம் மலருகின்றது. ஒருகணம் மேலே நோக்குகிறார். பின்னர் கடல்மடை திறந்தது போல் சொல்லிக் கொண்டே போகிறார். நூற்றாண்டைத் தாண்டி விட்ட இந்துசாதனம் பற்றி இவ்வளவு உரிமையோடும் உறுதியோடும் கூறக்கூடியவர் வேறு ஆர் என்னை விட்டால் இருக்கிறார்கள் என்று சொல்வது போல் இருக்கிறது அவர் சொல்லிக்கொண்டுபோகும் பாணி. உண்மை தானே அது.



அமெரிக்கக் கல்விச் சங்கத்தின் அதிதியாக இந்துசாதனம் இதழ் சார்பில் சுற்றுலா மேற்கொண்ட (1954) இதழாசிரியர்நம. சிவப்பிரகாசம்(இடப்புறத்தில் அமர்ந்திருப்பவர்) பென்ஸில்வேனியா பிற்ஸ்பேர்க் கூறியர் அச்சகத்தின் நிதிப்பிரிவினருடன் உரையாடுகிறார்.

1841-ல் உதயதாரகைப் பத்திரிகை தொடங்கியது. இதுதான் இலங்கையில் வெளிவந்த முதலாவது தமிழிதழ் இந்த இதழின் ஆசிரியர்களாக விளங்கியவர்களில் மூவர் குறிப்பிடத்தகுந்தவர்கள். கரோல் விசுவநாதபிள்ளை, ஆணல்ட் சதாசிவம்பிள்ளை, ரெயிலர் துரையப்பாபிள்ளை என்பவர்களே அவர்கள். பின்னர் (1876) சத்தியவேத பாதுகாவலன் என்ற இதழ் வெளிவந்தது இங்கே குறிப்பிட்ட இதழ்கள் இரண்டும் கிறிஸ்துவர்களால் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகின்றன இப்படிச் சைவ சமயத்தோருக்கும் இதழ் வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. நாவலரின் சீடர்கள் உருவாக்கிய சைவப்பிரகாச சமாஜம் 1880-ல் உதயபானு என்ற இதழைத் தோற்றுவித்தது நீண்டநாள் இந்த இதழ் நிலைக்கவில்லை. பின்னர் 1889-ல் இந்து சாதனம் ஆரம்பிக்கப்பட்டது சைவக் கொள்கை விளக்க மறுமலர்ச்சி ஏடாக இன்று வரை அது தொடர்ந்து பணியாற்றுகிறது. நூற்றாண்டைக் கண்டு விட்ட இந்த இதழ் இவ்வாண்டிறுதியில் நூற்றாண்டு மலராகவும் மலர்ந்து மணம் வீசப்போகிறது.

சமயப் பத்திரிகையான இந்துசாதனம் தமிழில் அப்போது புதுத்துறையாக அறிமுகமான நாவல் இலக்கியப் பிரிவையும் வளர்க்க ம.வே. திருஞானசம்பந்தர் காலத்தில் துணை நின்றது. அவர் எழுதிய உலகம் பலவிதக் கதைகள் சிறப்பானவை. அவற்றில் கோபாலநேசரத்தினம் மதமாற்றத்தை எதிர்த்து எழுந்தகதை. தனிநூலாகவும் பின்னர் அது வெளிவந்தது இந்து சாதனத்தின் பணிகளில் இதுவும் குறிப்பிடத்தக்கதொன்று என்று இடைவெட்டிக் கூறித் தொடர்கிறார் ஆர். என்.

இந்து சாதனத்தின் ஸ்தாபக ஆசிரியர் தம்பு கைலாசபிள்ளை (நாவலர் தமையனார் மகன்). இவரைத் தொடர்ந்து, பொ. கார்த்திகேய பிள்ளை, ம. வே. திருஞானசம்பந்தர், நம.சிவப்பிரகாசம்,மு மயில்வாகனம் என்போர் ஆசிரியர்களாக மிளிர்ந்தனர். மீண்டும் நம சிவப்பிரகாசம் அவர்களே இப்போது ஆசிரியராக அமர்ந்திருக்கிறார்கள்.

ஆங்கிலப் பதிப்பின் முதலாவது ஆசிரியர் T செல்லப்பாபிள்ளை இவர் திருவங்கூர் நீதிபதியாக விளங்கியவர். பின்னர் கௌரவ A. சபாபதிப் பிள்ளை, அ. கதிரவேலு, M. S. இளையதம்பி, M S. இராசரத்தினம், M. சபாரத்தினசிங்கி, ஷேக்ஸ்பியர் நாகலிங்கம், A. V. குணசிங்கம், T முத்துச் சாமிப்பிள்ளை என்போர் ஆசிரியர்களாகப் பணிபுரிந்தனர் இப்போது ஆங்கிலப் பதிப்பின் ஆசிரியராகவும் நம சிவப்பிரகாசமவர்களே விளங்குகிறார்கள்.

தமிழ்ப் பதிப்பில் வித்துவான் க கி. நடராஜன், கு. சிற்சபேசன், தெல்லியூர் நடராசா, சரசாலை ச. தியாகராசா என்போர் துணையாசிரியர்களாகத் பணிபுரிந்திருக்கிறார்கள்.

சிவகுருநாதன், T. A. துரையப்பாபிள்ளை, மு. கதிரவேலு என்போர் ஆங்கிலப் பதிப்பின் துணையாசிரியர்களாகத் திகழ்ந்தனர்.

நம.சிவப்பிரகாசம் அவர்களின் தந்தையார் மல்லை நமசிவாயப் புலவர், தமையனார் சிவசம்பு சிங்கை நகரில் வாழ்ந்தவர் அங்கிருந்தே சந்தா செலுத்தி இந்துசாதனம் தம்பிக்கும் தந்தைக்கும் கிடைக்க வழி செய்தார். பின்னர் தமிழ் நாட்டில் sir. P. தியாகராஜ செட்டியார் 'ஜஸ்ரிஸ்' கட்சிசார்பில் பிரசார ஏடு ஒன்றைத் தொடங்கிய போது அதன் முகாமையாளராக சிவசம்பு பணிபுரிந்தார். தம்பியை ஒரு விடுமுறையின்போது தமிழ் நாட்டுக்கும் அழைத்தார் அங்கேதான் இவர் எழுதிய முதற்கவிதை லோகோபகாரியில் வெளிவந்தது.

ஆங்கில மோகத்தில் ஆழ்ந்திருந்த சிவப்பிரகாசமவர்கள் ஆரம்பத்தில் எழுதியதெல்லாம் ஆங்கிலத்தில்தான். டெயிலிநியூஸ், யங்லங்கா முதலிய ஆங்கில ஏடுகளில் ஆர். என் அவர்களின் ஆரம்பகாலப் படைப்புக்கள் இடம்பெற்றன தொழிற்சங்கவாதி A. E. குணசிங்காவின் ஏடான யங்லங்காவில் அதிகம் எழுதியதுண்டு.

1922-ல்பரமேஸ்வரக் கல்லூரியில் பயிலும்போது பாமேஸ்வரம் என்று கல்லூரி இதழ் வெளியிடக் கல்லூரி நிர்வாகம் எண்ணியது. முதல் இதழின் ஆசிரியர் மாணவரான ஆர் என் தான். இந்த அநுபவங்களும் அவரிடம் இயல்பாகவே அமைந்திருந்த பத்திரிகைத்துறை ஆர்வமும் அவரை இந்து சாதனத்துக்கு இழுத்துக் கொண்டு வந்துவிட்டதில் வியப்பில்லை.

இந்துசாதன ஆங்கில இதழுக்கு ஆசிரியராக இருந்தவர் சபாரத்தின சிங்கி; இந்துக்கல்லூரியில்

(14-ம் பக்கம் பார்க்க)

காவடிச்சிந்து

## தஞ்சமென்று வந்தவர் முன் தோன்றுவாய் !

பொங்கு கங்கை திங்கள் தும்பை
பொன்பொ லிந்த கொன்றை நஞ்சு
என்றிவை உவந்து வந்து சூடுவான் – எங்கள்
சங்க ரன்பொன் அம்ப லம்நின் றாடுவான்–
அவன்
சாமம் ஓதுவன் நாமம் ஆயிரன்
சோம சேகரன் வாம பாகமும்
நெஞ்ச மும்இ டம்பி டித்த கன்னியே – மலை
நீலி என்று சொல்லு வதும் உன்னையே!

சங்கு கொம்பு ஜண்டை பம்பை
பொங்க அன்று செங்க ளங்கொள்
சண்டை என்று வந்து வெம்போர் ஆடினான்–
அன்று
சந்ந தங்கொண் டேது ணிந்து சாடினான்–
அந்த
மேதி யாகிய பாத காசுரன்
ஏது மேசெய்கி லாது வீழவும்
சிங்க மொன்றில் நின்ற துர்க்கா தேவியே –
உன்னை
நம்பி வந்தேன் உன்பெ யர்கள் கூவியே!
குங்கு மம்தி மிர்ந்த கொங்கை
செங்க ரும்பு தங்கும் அங்கை
கொண்ட றங்கள் நன்கி யற்றும் கூடலாய்–
என்
சந்த மொன்று செந்த மிழ்ப்பண்
பாடலாய்! – அகல்
ஞாலம் ஏழுமன் பால னாவிடும்
கோல வாள்விழி நீலியே சிவன்
நஞ்சை யுண்ட கண்டம் அங்கை தீண்டினாய்–உனைத்
தஞ்ச மென்று வந்த வர்முன் தோன்றுவாய்

பண்பு கொண்ட சிந்தை யன்பர்
முந்தி வந்து நெஞ்சு நைந்துன்
தன்ப தங்கள் கும்பி டுந்தண் தெல்லியூர்க்-கண்(டு)
என்ப வங்கள் சிந்தி டும்பொன் வல்லியே! – அங்கு
பாடு பாடல்கள் சூடு மாலைகள்
ஆடு காவடி கோடி கோடியென்(று)
எங்க ணும்சென் றன்பர் சொல்லக் கேட்கலாம்–
அருள்
பொங்கு கின்ற வண்ணம் நேரிற் பார்க்கலாம்!

— சோ. ப




# மழை வெள்ளம்

திடீரென்று முகில்கள் 'வந்தன' திரண்டனவானம் கறுத்தது. எங்கும் இருள் சூழ்ந்தது. மழை முகிலைக் கண்ட மயில்கள் தோகை விரித்து நடனமாடின. மக்கள் மத்தியில் பெரு மகிழ்ச்சி. மழை பொழியப் போவதை எண்ணி மனம் மகிழ்ச்சியில் மூழ்குகிறது.

இடி முழக்கம் காதை செவிடாக்குவது போல் அதிர்ந்தது. மின்னல்கள் இடையிடையே வந்து கண்களை பறித்தன. காற்று விறுடன் வீசியது. வானுக்கும் பூமிக்கும் இடையே வெள்ளிக்கம்பிகளைத் தொடுத்துள்ளது போன்று மழைத்துளிகள் முத்துமுத்தாகத் தவழ்ந்து வந்து விழுந்தன. மழை பெலக்க ஆரம்பித்தது. மழை விடாது தொடர்ந்தும் பொழிந்த வண்ணமேயிருந்தது.

வற்றிய கிணறுகள் படிப்படியாக நிரம்ப ஆரம்பித்தன தெருவில் இருந்தசிறிய பள்ளங்களும் தெருவோரங்களில் இருந்த சிறு குளங்களும் நிரம்பின. சிறிது நேரத்தில் தெருவே தெரியாமல் வெள்ளம் மூடியது. வயல்களும்வீடுகளும்,வேறு பல கட்டடங்களும் வெள்ளத்தில் மிதந்தன. வீடுகள் யாவும் படகு வீடுபோன்று காட்சியளித்தன.

மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கிய மக்கள் மழை வெள்ளத்தில் மூழ்கத் தொடங்கினர். மழை தொடர்ந்து விடாது பொழிந்தது.மயில்கள் கூட மழையை வெறுத்தன. எங்கும் ஒரே வெள்ளக் காடாக இருந்தது. மடை திறந்தது போல வெள்ளம் பாய்ந்து ஓடியது.அனைத்து மிருகங்களும் மழையில் நனைந்து கூனிக் குறுகி இருந்தன. மக்கள் மத்தியில் இனிமேல் மழையும் வேண்டாம் வெள்ளமும் வேண்டாம் என்ற கூக்குரலும் கூச்சலும் எழுந்தன. மக்களின் கூக்குரலையும் கூச்சலையும் கேளாது மழை தொடர்ந்து பெய்தபடியே இருந்தது. வெள்ளம் பெருகியவண்ணமேயிருந்தது.

ஷோபனா சர்மா

அங். இல-230

# புகையிரத ஓட்டம்

இலங்கையிலே புகையிரதம்
எப்போ தோடத் தொடங்கியது?
நலங்கொள் நண்பீர் கூறுமென
நந்தா சொல்வாள் கேட்டிடுவீர்

ஆயிரத்தெண் ணூற்றுடனே
ஆறுபத்துநான் காம் வருடம்
அநேகர் ஏறும் புகையிரதம்
ஆரம்பித்த தோடிடவே

வட பகுதிப் புகையிரதம்
மக்கள் மகிழ வந்த தெப்போ?
மாண்புடனே கூறுமென
மலர் விழியாள் கூறல் கேளும்

ஆயிரத்துத் தொளாயிரத்தோ
டணைந்த இரண்டாம் ஆண்டினிலே
ஆரம்பித்த தென அறிவீர்
அரிய வடபகு திச் சேவை

அப்போ திருந்த அதிபதி யார்?
அறைவீர் நண்பீர் என்றிடலும்
செப்பமான சேர் வெஸ்ற் றிச்வே
என்றாள் சாந்தி இனிதறிந்தோம்

-கௌசிதகி - சண்முகநாதன்

# உங்களுக்குத் தெரியுமா?

★ உலகிலேயே மிகவும் அழகு வாய்ந்த தூண்கள் கிரேக்க நாட்டில் உள்ள கொரந்தியன் தூண்கள் தான். மத்திய தரைக் கடல் பகுதியில் உள்ள அகந்தஸ் செடியின் ஊசி இலைகளைப்போல் இத் தூண்களின் மேற்பகுதி மிக நுட்பத்துடன் அழகாகச் செதுக்கப்பட்டு உள்ளது.

★ ஆபிரிக்காவின் தங்கனிக்கா பகுதியில் ''கொண்டோவா'' என்ற பழங்குடியினர் வசிக்கிறார்கள். இவர்கள் மந்திர வித்தை செய்து குடும்பம் நடாத்துகிறார்கள். நான்கைந்து பேர் சேர்ந்து எரியும் தீப்பந்தங்களை இவர்களின் மேல் வைத்தாற் கூட நெருப்பு இவர்கள் உடலைப் பொசுக்குவதில்லை. உடலை நெருப்பு எரிக்காமல் இருக்க சிலவகை மருந்துச் சாறுகளை உடலில் பூசிக் கொள்கின்றனர்.

★ உலகின் மிகப் பெரிய வெந்நீர் ஊற்று 37 ஏக்கர் பரப்பளவில் கோஸ்டா ரிக்காவின் போறாஸ் எரிமலையில் அமைந்திருக்கின்றது. இதிலிருந்து கிளம்பும் நீராவியின் உருவம் 360 அடிக்கு பளிங்குத் தூண் போல் காட்சிதருகின்றது.

★ எட்டுக் கைகளையுடைய ஆக்டபஸ் எனும் கடல்வாழ் உயிரினம் தான் செல்லும் இடத்திற்கு ஏற்றபடி நிறத்தை மாற்றும் தன்மையை உடையது. சிவப்பு நிறத்திலிருந்து பழுப்பு, மஞ்சள், சாம்பல், நீலம், பச்சை ஆகிய நிறங்களுக்கு ஆங்காங்கே மாற்றிக்கொள்ளும்.

★ ஆஸ்திரேலியாவில் சிட்னி அருகே 'மக்வேரி கலங்கரை விளக்கம்' என்ற பெயரில் ஒரு கலங்கரை விளக்கம் உண்டு. இதற்குப் படம் வரைந்து கொடுத்த ஜார்ஜ் கிரீன்வே என்பவர் ஆயுள்தண்டனை பெற்ற கைதியாக இருந்தவர். கைதியின் அருமையான வரைபடத்தைப் பாராட்டும் முகமாக இதன் கட்டடப்பணி ஆரம்பமான (1818 ம் ஆண்டு) தினத்தன்று இவர் விடுதலை செய்யப்பட்டார்.

தெல்லியூர் ரமணன்

# முரசொலி பூந்தோட்டம்
## அங்கத்தவர் பத்திரம்

முழுப்பெயர்:- ............................................

வயது:- ............................................

பாடசாலையின் பெயர்:- ............................................

கல்விகற்கும் வகுப்பு: ............................................

வீட்டு முகவரி: ............................................

கையொப்பம்: ............................................

மேலுள்ள விவரங்கள் சரியானவை என்று உறுதி கூறுகின்றேன்.

.................... ....................

திகதி பெற்றோர் / வகுப்பாசிரியர் கையொப்பம்

(பதினான்கு வயதுக்குட்பட்டவர்கள் மாத்திரம் உறுப்பினராகலாம். மூன்று பத்திரங்களை ஒன்றாக நிரப்பி அனுப்ப வேண்டும்.)

# பறந்தான் மனிதன்

லியனார்டோ டா வின்சி என்ற இத்தாலியர் கி. பி 1500ஆம் ஆண்டில் பறவைகளைப் போல் பறப்பதற்குச் சாதனம் ஒன்றைக் கற்பனை செய்து அதைப் படமாக வரைந்து காண்பித்தார். அண்ணளவாக 1650 ஆம் ஆண்டளவில் பிரான்ஸிஸ் லானா என்பவர் வேறொரு விதமான கற்பனை செய்தார். அதன்படி செம்பினால் செய்த நான்கு பந்துகளைப் படகு ஒன்றில் கட்டிப் பறக்கவிட முயன்றார். இம் முயற்சி வெற்றியடையவில்லை.

காற்றை விட இலேசான வாயுவைப் பயன்படுத்தி ஆகாயத்தில் மிதக்கப் பல பேர் முயற்சி செய்தார்கள். பிரான்ஸ் தேசத்தில் ஜோசெப் மான்கால்பியே, ஸ்டீபன் மான்கால்பியே என்ற இருசகோதரர்கள் இருந்தார்கள். அவர்களும் இம்முயற்சியிலேயே ஈடுபட்டனர். அவர்கள் 1783 இல் காகித பலூன் செய்து அதற்குள் புகையைச் செலுத்தி அதை வானத்தில் மிதக்கவிட்டனர். அதற்குள் புகையையும் செலுத்திக் காற்றையும் இலேசாக்கியதால் அப் பலூன் 1000 அடி உயரம் மேலே சென்று 10 நிமிடம் வரை அப்படியே நின்று பின் கீழிறங்கியது. இம் மாதிரிபலூன் ஒன்றில் ஜீன் ரோஜியே என்ற பிரெஞ்சு நாட்டவர் மேலே பறந்தார். இது 1783 அக்டோபர் 15 இல் நிகழ்ந்தது. இவர் மறுபடியும் நவம்பர் 21 இல் பறந்தார்.

ஹான்ஸ் பெர்லின் என்பவர் ஜேர்மனியிலிருந்து 1897 மைல் தூரம் தரையின்மேல் பறந்து ரஷ்யாவிலுள்ள யூரல் மலைப் பக்கமாகச்சென்றார். பிளார்ஷ்டு என்பவர் 1784 இல் பாரிஸ் நகரத்தில் பறந்து காண்பித்தார். பின் இவர் இங்கிலாந்து சென்று 1785 ஜனவரி ஏழாந் திகதி பகல் ஒருமணியளவில் அங்கிருந்து தமது விமானத்தில் ஓர் அமெரிக்க நண்பருடன் தன் தாய்நாட்டிற்குப் பயணம் செய்தார். இதன் நினைவாக இவர் இறங்கிய இடத்தில் ஓர் ஞாபகச் சின்னத்தை மக்கள் ஏற்படுத்தியுள்ளனர்.

1852 இல் ஹென்ரி கிப்பர்டு என்பவர் நீராவி இயந்திரம் ஒன்றை [illegible] வடிவ பலூனில் வைத்து அதன் உதவியால் காற்றை எதிர்த்து சிறிது தூரம் சென்றார். ஆல்பர்ட்டோ சான்டோஸ் டூமாண்ட் என்பவர் நீராவி இந்திரத்திற்குப் பதிலா பெட்ரோல் இயந்திரத்தை உபயோகித்தார். அதில் அவர் 1901 அக்டோபர் 19ஆம் திகதியன்று பறந்து காட்டினார்.

மனிதன் பருந்து, கழுகு போன்ற செட்டைகளை அடிக்காமல் நெடுநேரம் பறக்கும் பறவைகளை அவதானித்து கிளைடர்கள் (சறுக்குவிமானங்கள்) செய்யத் தொடங்கினான். 1855 இல் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த கேப்டன் லாபரி என்பவர் முதன் முதலாக கிளைடரில் பறந்தார். இதன் பின் ஆட்டோ லீலியந்தா, ஆக்டோவ் ஷனூட், ஸ்டிரிங் பெல்லோ, லாங்கி போன்றோர் 19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் பறந்தனர்.

அமெரிக்க தேசத்தைச் சேர்ந்த ஆர்வில் ரைட், வில்பர்ரைட் என்னும் இரு சகோதரர்கள் கிளைடர் கட்டுவதில் சிறுவயதிலேயே ஆசை கொண்டனர். 1902 இல் இவர்களது கிளைடர் சிறந்த முறையில் பறந்தது. பெட்ரோல் இயந்திரத்தைப் பயன்படுத்தி மனிதனையும் சுமந்து செல்ல விமானம் ஒன்றைத் தயாரித்தனர். 1903 டிசம்பர் 17 ஆம் திகதி இதில் 3 தடவை பறந்து காட்டினர். இவ்வாறே விமானங்கள் விருத்தியடைந்து தற்போது ஹெலிக்கொப்டர் விமானம், கடல்விமானம், யுத்தவிமானம் எனப் பல வகை விமானங்கள் உருவாகியுள்ளன. தற்போது மணிக்கு 600 மைலுக்கு மேலே வேகமாகச் செல்லும் விமானங்களும் உள. பறவையைப் பார்த்து பறக்க ஆவல் கொண்ட மனிதன் தற்போது பறவையைக் காட்டிலும் வேகமாகப் பறக்கிறான்.

மு. சதீஷ் பாலமுருகன்

# பூந்தோட்டம் அங்கத்தவர்

இலக்கம் 446 வல்லிபுரம் மாதினி
வயது 09, வேலணை சரஸ்வதி வித்தியாலயம்

இலக்கம் 447 பாலச்சந்திரன் சிவதர்சன்
வயது 11, செங்குந்தா இந்துக் கல்லூரி திருநெல்வேலி

இலக்கம் 448 சத்தியதேவா ஸ்ரெலா
வயது 13, புனித சென்ற் தெரெசாள் மகளிர் கல்லூரி அச்சுவேலி.

இலக்கம் 449 சுப்பிரமணியம் ஷர்மிலா
வயது 08, புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் யாழ்ப்பாணம்.

இலக்கம் 450 சற்குணலிங்கம் பார்த்தீபன்
வயது 10, மகாவித்தியாலம் நாவற்குழி.

இலக்கம் 451 குலசேகரம் கனகேஸ்வரன்
வயது12, இராமநாதன்கல்லூரி உசன்.

இலக்கம் 452 கதிரமலை விக்னேஸ்வரன்
வயது 13, கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம் சுன்னாகம்.

இலக்கம் 453 பிரிந்தினி ஜெயராஜா
வயது 13, உடுவில் மகளிர் கல்லூரி மானிப்பாய்.

இலக்கம் 454 அபிராமி சாதசிவ ஐயர்
வயது, 09, திருநெல்வேலி ஞே. க. த. க. பாடசாலை

இலக்கம் 455 லோகநாதன் சிறீதரன்
வயது 13, யாழ்ற்றன் கல்லூரி காரைநகர்.

# சித்திரபுத்திரனோடு சில மணி நேரம்

'ஐயா சித்திரபுத்திரனரே...! கொஞ்சம் நில்லுங்கள் உங்களைப் பேட்டி காண வேண்டுமென்று துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிறேன். அபூர்வமாகப் பூலோகத்துக்கு வந்திருக்கிறீர்




கள்; சற்றுக் கருணைகாட்டக் கூடாதா?'

'யார் நீர் என்னைப் பெயர் சொல்லி அழைப்பதற்கு? அவசரமாகச் சென்று கொண்டிருக்கும் என்னை ஏன் தொந்தரவு செய்கிறீர்?'

'யமதர்மராஜாவின் கணக்காளரே வணக்கம்! என்னைப் பற்றி நல்லபடியாகக் கணக்கெழுதிச் சிரஞ்சீவியாகப் பூமியில் இருத்திவிட வேண்டுமென்ற சலுகையை உம்மிடங் கேட்டு நான் உம்மைப்பேட்டி காணவரவில்லை. இப்பொழுதெல்லாம் உமக்கு வேலைப்பழு அதிகம் உம்மைப் பேட்டி கண்டுபத்திரிகையில் எழுதினுல் அதனுல் உமக்கும் நமது மக்களுக்கும் பயன்படும் என்ற விருப்பினுலேயேஉம்மைத்தேடி அலைந்து கொண்டிருக்கிறேன். தாங்கள் கருணை கூர்ந்து ஐந்து நிமிடங்கள் பேட்டியளித்தால் பெருமைப்படுவேன்!'

'நாங்களெல்லாம் தேவலோகவாசிகள் ஆகாயத்திலே சஞ்சரிப்பவர்கள் எப்படி நீர் எமமைக்கண்டு கொண்டீர்?'

'நான் தேவகணம். அதனுலேயே உம்மைப் பார்க்க முடிந்தது; சர்வலோக நாயனுகிய சிவபெருமானையே பேட்டிகண்டு பத்திரிகையில் எழுதும் போது நீர் என்ன ஐயா பிரமாதம்?' எனது பேச்சைக் கேட்டுக் கலவரமடைந்தார் சித்திரபுத்திரனுர் சலகரத்தை புரியும் படி வெளிப்படுத்தாமல்,

'அப்படியா சமாச்சாரம்? எதற்கு என்னிடம் பேட்டிக்கு வந்திருக்கிறீர்? சரிபேட்டியை ஆரம்பியும்!' என்ருர் யமலோககணக்காளர் திருவாளர் சித்திரபுத்திரனுர் அவர்கள்.

'ஐயா சித்திரபுத்திரரே! நீர் எக்காரணம்கொண்டு பூமிக்கு வந்தீர்? பூலோகவாசிகளின் பாவ புண்ணியக்கணக்குகளைக் கூர்ந்து கவனித்து எழுதிக் கணக்கு வைத்திருப்பதுதானே உமது தொழில்?'

'அதுதான் எனது தொழிலென்ருலும் எஜமானர் ஏவும் வேறுவேலைகளைச் செய்யாவிட்டால் சீட்டைக் கிழித்து வீட்டுக்கு அனுப்பி விடுவாரே! பூலோகத்திலே நடைபெறும் கொலைகளையும் தற்கொலைகளையுங்கண்டு யமலோகமே அஞ்சுகிறது. யமகிங்கரர்கள் அத்தனை பேராலும் ஈழத்திருநாட்டைச் சமாளிக்கமுடியவில்லை. 'உதவிக்கு நீயும்போ' எனத் தென் திசைக் கோன் பணிக்கவே நான் புறப்பட்டு வந்தேன்!

சாதாரணமாகக் குளத்திலோ ஆற்றிலோ விழுந்து மரணம் அடைந்தால் அவற்றை அவமிருத்து! கண்டம் என்று எழுதிவைத்து விடுவீர்களல்லவா? பெருந்தொகையான மக்கள் உலகில் நாள் தோறும் பலவிதகாரணங்களால் திடீர் திடீரென மாண்டு போகிறுர்கள் அல்லது மறைந்து போகிறுர்கள்: இவர்களைப் பற்றி! எவ்வாறு எழுதிவைத்திருக்கிறீர்கள்?

'பி. கா. கா.' என்று எழுதி வைத்திருக்கிறேன்.

'அது என்ன பி. கா. கா?'

'பி. கா. கா என்ருல் பின்னுல் காரணங்காட்டப்படும்!' என்பது!

'இ. பி. கோ சோ. ம. ம த. பி. சி எனப் பூலோகத்தில் வழங்குவதைப்போல அங்கேயும் உண்டா? சரி போகிறது நீங்கள்மேலே கூறுங்கள்!'

யமதர்மராஜாவிடம் என்னை இந்தக் கணக்கர் பதவியிலிருந்து மாற்றிவிடுங்கள் அல்லது ஓய்வு பெற அநுமதியுங்கள்' என வேண்டிக் கொண்டேன். எஜமானர் அசைந்து கொடுக்க வேண்டுமே; கிடையாது! என்னுடைய வேலை அத்தியாவசியமானதாம் ஓய்வுபெற அநுமதிக்கமுடியாதென்ற மிரட்டல் வேறு.

'சரிமேலே கூறுங்கள்!'

'இந்த பி. கா. கா விவகாரம் எனக்கும் யமதர்மராஜனுக்கும் பெரும் பிரச்சனையாகிப்போய் சிவபெருமானிடமும் பிரம்மதேவரிடமும் மகாவிஷ்ணுவிடமும் முறையிட்டோம்.

படைப்பதுதான் தனது வேலையென்றும் காப்பதுதான் தனது தொழிலென்றும் பிரம விஷ்ணுக்கள் கூறிவிட்டார்கள். அழிப்பது யமதர்மராஜனின் கடமை: என்ன காரணங்காட்டி எப்படியழித்தால் நமக்கென்ன என்று அடித்துக் கூறிவிட்டார்கள். சிவபெருமானிடங்கூறி விளக்கம் பெறலாமென்ருல் எல்லாவற்றையும் ஆற அமரக்கேட்டு விட்டுப் புன்முறுவல் பூக்கிருர். என்ன செய்வது எப்படி எழுதுவது என்று தெரியாமல் விழித்துக்கொண்டிருக்கிறேம்!'

'பிரச்சினை என்று வந்துவிட்டால் பூலோகவாசிகளும் தேவலோகவாசிகளும் ஒரு மாதிரியாகத்தான் நடப்பார்கள் போல இருக்கிறது; போகட்டும் உங்கள் பணியில் உங்களுக்குச் சலிப்பேற்படுவதில்லையா?'

நன்ருகக் கேட்டீர்கள் போங்கள்! முக்கியமாக ஈழத்திருநாட்டிலுள்ளவர்களாற்ருன் எனதுபணி சிரமமாகிறது. இப்பொழுது சில காலமாகப் பணமொன்றையே தெய்வமெனக்கருதி இவர்கள் தொழிற்படுவதால் இவர்கள் புரிகிற திருகுதாளங்களையும்; இதயத்தை மறுபக்கமாகப் புரட்டி வைத்துவிட்டு நடாத்துகிற தில்லுமுல்லுகளையும் எழுத ஏட்டில் இடமில்லை. சமீபகாலத்தில் உங்கள் நாட்டு வாலிபரிடையே ஒரு மோகம் ஏற்பட்டு வெளிநாட்டிற்குத் திரவியந்தேட ஓட; இதைத் தொடர்ந்து பெண்களைப் பெற்றவர்கள் தம் பெண்களை மாப்பிள்ளை வேட்டைக்காக வெளிநாடுகளுக்கு ஓடவைக்க இந்த ஓட்டப்பந்தயத்தை நடாத்துகிற வெளிநாட்டு முகவர் நிலையங்கள் எந்தப் பழி பாவங்களுக்கும் அஞ்சாமற் பல வழிகளிற் பணத்தைப் புரட்ட இந்தப் பாவங்களை ஏட்டில் பதியவைக்க நான் படுஞ்சிரமம் கொஞ்சமா

'ஈழத்து வாசிகளை நன்ருக எடைபோட்டு வைத்திருக்கிறீர்கள்; நல்லது இங்கே குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டம் நடைமுறையிலிருக்கிறது இதனுல் கணிசமான அளவு மக்கள்தொகை கட்டுப்படுத்தப்படும். மக்கள் தொகை கட்டுப்படுப்படுத்தப்படவே அவர்களைப்பற்றிய பாவபுண்ணியக் குறிப்புக்கள் எழுதுகிற தங்கள் பணியும் குறையுமல்லவா? இதைப்பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?'

'இங்கே குடும்பக்கட்டுப்பாட்டுத்திட்டம்நடைமுறையிலுள்ள செய்தியைத் திரிலோக சஞ்சாரியான நாரதர் மூலம் நாமுமறிந்தோம். இத்திட்டம் நிறைவேற நாமும் எம்மாலான உதவியைப் புரியாலாமெனக் கருதி யாதர்மராஜன் தலைமையில் யமலோகத்தில் ஒரு மாநாடு நடத்த ஏற்பாடு செய்தேன். பிரம்மா மகாவிஷ்ணுமன்மதன் முதலியோர் அம்மா நாட்டுக்கு வந்திருந்தார்கள். மாநாட்டிற்கு வந்திருந்த அத்தனை பேரும் ஒரு முகமாக மன்மதன்மேற்ருன் குற்றஞ் சுமத்தினுர்கள். 'நீ உனது கரும்பு வில்லையும், மலர்க்கணையயும் வைத்துக் கொண்டு சும்மா இருக்கக் கூடாதா? உன்னுல் பூலோகவாசிகள் கஷ்டப்படுவது மல்லாமல் சித்திரபுத்திரனுருக்குந்தொல்லை! 'என்று ஏசினுர்கள். இதற்குப் பதிலளித்த மன்மதன்;

'நான் எனது மலர்க்கணையையும் கரும்பு வில்லையும் தூரஎறிந்து வெகுநாட்களாகிவிட்டன பூலோகத்தில் உள்ள சினிமாப் படங்களும் அவற்றின் பாடல்களும் சில பத்திரிகைகளும் எனது வேலையைப்போல் மூன்று மடங்கு வேலையைச் செய்யும்போது நான் எதற்கு? எனது வில்லும் கணையும் எதற்கு? ஏதாவது விபரீதம் ஏற்பட்டால் சம்பந்தப்பட்ட எல்லோருமாக ஒருவர் தலையிலே குற்றத்தைச் சுமத்திவிட்டால் பரிகாரமாகிவிடுமா?' எனப்பதிலடி கொடுத்தான். பிரமா வாய் திறக்கவில்லை; ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். விஷ்ணு 'நாங்கள் கடமையைச் செய்கிறேம் இதைப்பற்றி சிந்திக்க வேண்டியவர்கள் பூலோக வாசிகள்!' எனப்பட்டும்படாமலும் கூறி அமர்ந்துவிட்டார். குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டம் தேவலோகத்திலும் சலசலப்பை ஏற்படுத்திவிட்டது. இனிப் பூலோகத்திலும் இத்திட்டம் வெற்றிபெறும் என்பதைக் குறிப்பிடவே இச்சம்பவத்தைக் கூறினேன்?

**செ. நடராஜா**

'சித்திரபுத்திரனுரே! தங்களை அதிகம் சிரமப்படுத்திவிட்டேன். இன்னும் ஒரே ஒரு கேள்வி தங்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவமொன்றைக் கூற முடியுமா?

'ஆம் குறிப்பாக ஒன்றை மட்டும் கூறுகிறேன்; ஒரு தடவை யமதர்மராஜா என்ன நினைத்தாரோ தெரியாது இரு உயிர்களை ஒரே நேரத்திற் கவர்வதற்காக என்னையும் அழைத்துக்கொண்டு பூலோகத்திற்குவந்தார். யமகிங்கரர்கள் கடமையைச் சரிவரச் செய்வார்களோ என்ற ஐயப்பாடுதான் இதற்குக்காரணம் இரு உயிர்களும் நாடகமேடை நடிகர்கள். ஒருவர் சத்தியவான் சாவித்திரி நாடகத்தில் சத்தியவான் வேடம் புனைவதற்கு இருந்தார் அடுத்தவர் மார்க்கண்டேயர் நாடகத்தில் மார்க்கண்டனுக நடிப்பதற்கிருந்தார். நமது யமதர்மராஜா மாறுவேடத்தில் சத்தியவான் சாவித்திரி நாடகத்தில் யமனுக நடிக்கவிருந்தவரிடம் சென்று சாதுர்யமாகப்பேசி, 'நீ சத்தியவான் மேல் போட இருக்கும் பாசக் கயிறு பழையது அது வேண்டாம் இதோ புதுப்பாசக் கயிறு இதை நாடகத்தில் சத்தியவான் கழுத்திலே போடு!' எனத்தந்திரமாகக் கூறி நிஜ பாசக்கயிற்றை நடிகன் யமனிடம் ஒப்படைத்தார். மார்க்கண்டேய நாடகத்தில் யமனுக நடிக்கவிருந்தவரை எமது தலைவர் எப்படியோ சந்தித்து அன்று நடைபெற இருக்கும் நாடகத்தில் தன்னையே யமனுகப் போடும்படி கெஞ்சிக்கூத்தாடி அவர்சம்மதத்தைப் பெற்றுக் கொண்டுவந்துவிட்டார்.

'எப்படி எனது ஏற்பாடு?' என்று யமதர்மராஜா என்னைப் பார்த்து மனநிறைவோடுகேட்டார்.

'பிரமாதம் ஓரிடத்தில் தங்கள் பாசக்கயிறு உங்கள் வேலையைப்புரியும். இன்னேரிடத்தில் நீங்கள்தான் நிற்கிறீர்களே. அந்த இரு உயிர்களும் தப்பவே முடியாது என்றேன் நான்.

'எதற்கும் சற்று விழிப்பாகவே நீ இருக்க வேண்டும். நாங்கள் இருவரும் வந்தும் தவறு ஏதாவது ஏற்பட்டுவிட்டால் யமலோகமே சிரிக்கும்; தெரிகிறதா!' என என்னை எச்சரித்துவிட்டு யமதர்மராஜா மார்க்கண்டேய நாடகத்தில் யமனுகக் காட்சியளிக்கப்போய்விட்டார்.

அப்பொழுதுதான் அந்த விபரீத சம்பவம் ஏற்பட்டது. சத்தியவான் நாடகத்தில் சாவித்திரியாக நடிக்க இருந்த நடிகை சத்தியவானுக நடிக்க விருப்பவருடன் நடிக்கமுடியாது என்று ஒரேயடியாக மறுத்துவிட்டாள். நாடக முதலாளி திணறிப்போனுர்.

'என்னம்மா! இப்படிக் கூறிவிட்டாயே இப்பொழுது என்ன செய்வதென்று பதறினுர்.

'மார்க்கண்டேய நாடகத்தில் சிவனுக நடிப்பவரைச் சத்தியவானுகப் போடுங்கள் நடிக்கிறேன்!' என்ருள் அந்த நடிகை.

பெருத்த முயற்சியின் பேரில் சத்தியவானுக நடிக்க இருந்தவர் சிவனுகவும் சிவனுக நடிக்க இருந்தவர் சத்தியவானுகவும் மாறினுர்கள்.

இது விடயம் நமது யமதர்மராஜாவுக்குத் தெரியாது. அவர் மார்க்கண்டேயர் நாடகத்தில் யமனுக நடித்து மார்க்கண்டனுக நடித்த நடிகனின் உயிரைக் கவர ஆயத்தஞ் செய்துகொண்டிந்தார். நான் ஓடிச்சென்று அவருக்கு விடயத்தைக்கூறியதும் மனுஷன் ஆடிப்போய், 'ஆ' வென்று வாயைப்பிளந்தார். 'இப்பொழுது என்ன செய்

13ஆம் பக்கம் பார்க்க

# கிராமிய நாடகத்துக்கு நல்ல காலம்!

**அரங்கன்**

காத்தவராயனுக்கு நல்ல காலம். அண்மைக் காலங்களில் இது பல மேடையேற்றங்களைக் கண்டு வருகிறது. யாழ்.பல்கலைக்கழகத் தமிழ் மன்றம் இப்பணியில் ஈடுபட்டுள்ளது.

சென்ற தலைமுறையிலும்– அருமையாக இப்பொழுதும் ஆடப்பட்டு வருவது 'காத்தான் கூத்து இதனை மரபு பிறழாமல் தயாரித்துள்ளார் கலாநிதி பாலசுந்தரம் அவர்கள்.

1987-ன் முற்பகுதியில் 'காத்தவராயன்' முதன்முதல் மேடையேற்றப் பட்டதற்கும் 1989 ஓகஸ்ரில் இடம்பெற்ற இரண்டாம் மேடையேற்றத்துக்கும் இடையே குறிப்பிடத்தக்க முன்னேற்றம் தெரிகிறது. நடிப்பில், பாட்டில், மேடையைப் பயன்படுத்தும் பாங்கில் மெருகேறியிருக்கிறது.

பெண்களே பெண் பாத்திரங்களை ஏற்று நடிப்பது குறிப்பிடத்தக்கது முத்துமாரி பாத்திரம் ஒரு சவால் என்றே கூறலாம். மிடுக்கான, அட்டகாசமான, ஆட்டத்தோடேயே பெரும்பாலும் அரங்கில் பிரவேசிக்கிருள் அவள். பலவித உணர்ச்சிகளைக் கொட்டி நடிக்கவேண்டும். பாடவேண்டும். பூங்கொடி இந்தப் பொறுப்பை அநாயாசமாக நிறைவேற்றியுள்ளார்.

காத்தானுக நடித்த அருந்தவநாதன் ஆஜானுபாகுவான தோற்றம். நன்ருகப் பாடுகிருர்; சிருங்காரம், சோகம் முதலிய சுவைகளில் சோபிக்கிருர்.

மனதில் நிற்கும் பாத்திரம் தொட்டியத்துச் சின்னுன். அடடா! என்ன வேஷப் பொருத்தம்! நடிப்பில்தான் என்ன நளினம்! துணை நடிகர் என்ற எல்லையைத் தாண்டி சிறந்த நடிகர் என்ற பேரைத் தட்டிக்கொள்ளும் ஆற்றல் படைத்தவர் ரமணீகரன்.

என்ன தான் பாலசுந்தரம் பாரபம்பரியம் பேண முயன்ருலும், நாட்டார் இசைவடிவங்களுள் அந்நிய ஸ்வரம் போல-கர்நாடக சங்கீத சங்கதிகள் பேசுகின்றனவே! அது போலவே, ஆரியப் பூமாலை பூக்கொய்வதில் பரதநாட்டிய முத்திரைகள் பளிச்சிடுகின்றனவே!

இந்நாடகத்தில் வரும் சிவன் கஞ்சா போட்ட பலகாரத்தைச் சாப்பிட்டுப் போதையில் தள்ளாடுவார். மாரியிடம் ஏமாறுவார். காத்தவராயனை அவன் தாயாரே தேவடியாளிடமும் சாராயப் பூதியிடமும், தாசிகளிடமும் அனுப்புவாள்.

இவற்றையெல்லாம் நோக்குகையில் அடிநிலை மக்களுடைய வாழ்வை, 'காத்தவராயன்' சித்திரிக்கிறது என்பதை விட, 'மேல்' சாதியினரையும் அவர்கள் வணங்கும் தெய்வங்களையும் நோண்டுகிறது என்று கொள்ளலாமோ?

பேராசிரியர் கா சிவத்தம்பி சொன்ன 'அத்துவித' சிந்தனையும் சுவாரஸ்யமானது தான்!

அடிமட்டத்தில் வழங்கி வந்த காத்தான்கூத்தின் 'பிசிறுகள்' சிலவற்றைக் களைந்து இக்கால ரசிகருக்கு ஏற்ற விதத்தில் விறுவிறுப்பான நாடகமாக்கிய கலாநிதி பாலசுந்தரம் பாராட்டுக்குரியர்; சந்தேகமில்லை.

சிறுகதை



# ஒரு ரோஜாப்பூ

'இன்றைய பொழுதை மலர்த்தினுயே, இறைவா, உன்னை வணங்குகிறேன்' என்ற வழமையான ஜபத்தோடு சுப்பையர் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தார்.

அறை வாசலில் மீனுட்சி, அவர் மனைவி,நெற்றி நிறைந்த குங்குமப் பிரசாதம் மிளிர வந்துகொண்டிருந்தாள்.

சுப்பையர் புன்முறுவல் பூத்தார். 'இன்றைய பொழுது அதிர்ஷ்டம் நிறைந்த பொழுதாகவும் அமையப் போகிறது' என்ற எண்ணம் எழ, அவரும் எழுந்தார்.

'மீனுட்சி, இண்டைக்கு என்ன அதிர்ஷ்டம் வரும் எண்டு சாத்திரஞ் சொல்லேன்'.

'உங்க மகன்ரை காயிதம் வருமாக்கும்'.

'சரியாச் சொன்னுய், ஏன், உன்ரை மகன் எண்டு சொல்ல உனக்கு வாய் வராதோ?'

'எங்கடை மகன்'

இருவரும் சிரித்தார்கள்.

●

பத்துமணிக்கு வாசலுக்குப் போய் மீனுட்சிதான் கடிதம் ஒன்றைப் பெற்று வந்தாள்.

கடிதத்தை வாங்கி, முகத்துக்கு நேரே ஒரு முழத்துக்கப் பால் பிடித்து, முகவரியைப் பார்த்தார் சுப்பையர்.

சரியாச் சொன்னுய். உன்ரை சாத்திரம் பலிச்சுப்போச்சு'

மீனுட்சியை நிமிர்ந்து பார்க்கிருர்.

'உடைச்சு வாசியுங்கோ' வில் அவசரம் தொனிக்கிறது.

ஆற அமர, உள்ளே இருக்கிற பவித்திரம் கலைந்து விடக்கூடாதே என்றபாவனையோடு, உறையினுள்ளிருந்து கடிதம் எடுக்கப்படுகிறது.

'வாசியுங்கோ'

'நீயே வாசி, இந்தா!'என்று கடிதத்தைச் சுப்பையர் சிரிப்போடு நீட்டுகிருர்.

'ம், பகிடி, படிச்ச வாத்தியார், படிச்ச பெம்பிளையாப் பாத்து அப்ப முடிச்சிருக்கலாமே! 'மீனுட்சிதான் வேணும்' எண்டு ஏனும் ஒத்தைக் காலிலை நிண்டனியள்?'

'எவ்வளவு படிச்சும் வராத பண்பாடல்லே உன்ரை' சுப்பையர் முறுவலிக்கிருர்.

'கடவுளே, வாசியுங்கோ'

'சரி'

●

அப்பாவுக்கும், அம்மாவுக்கும்,

கோடாநு கோடி வணக்கங்கள். உங்களை வணங்கிக்கொண்டே இருக்க என்னை ஆசிர்வதியுங்கள்.

எங்கள் வகுப்புக்கான படிப்பித்தல்கள் முடிந்து விட்டன. இப்பொழுது நாங்களாகவே மீட்டுப் படிக்க லீவு தந்திருக்கிருர்கள். ஒரு மாதத்தால் பரீட்சை. அதுவரை வகுப்புகள் இல்லை, இடைக்கிடை எங்கள் பல்கலைக்கழக நூல் நிலையம் போய்வர வேண்டிய தேவை ஏற்படும்,

மீட்டுப் படிக்கும் போதும், உடன் மாணவருடன் கலந்துரையாடும் போதும் முன்னர் ஓரளவு விளங்காமலிருந்த சில பகுதிகள் தெளிவாகின்றன. அதனுல் பெருகும் ஊக்கம், உற்சாகம் என்பவற்ருல் ஏற்படும் மனப்பூரிப்பு எழுத்திலடங்காது.

எனது அறையிலே சந்திரசேகரனும் இருக்கிருன், அது உங்களுக்கு முன்னரே தெரியும், அவனுக்குக் கடந்த இரண்டு மாதங்களாக வீட்டிலிருந்து பணம் எதுவும் வரவில்லை. அறை வாடகை, சாப்பாட்டுக் காசு கொடுக்க முடியாமல் சங்கடப் படுகிருன், என்னிடமுள்ள பணத்தில் ஏதாவது கொடுத்தால் ஏற்க முடியாமல் திண்டாடுகிருன்,

மானி இவனுக்கு வாய்த்த தகப்பன், உங்களுக்குத் தெரியுந் தானே, ஒரு மாதிரி சில காலமாகப் பல துர்க்குணங்களுக்கும் ஆளாகி விட்டாராம். உழைப்புமில்லை. பாவம்!

இந்தப் பணக் கஷ்டத்தால் இன்னும் ஒரு மாதத்தில் நடைபெறப் போகும் பரீட்சைக்கு அவன் பூரணமாகத் தன்னைத் தயார்படுத்திக் கொள்ள முடியாத மனேநிலை. வீட்டுக்கும் சில கடிதங்கள் எழுதியவன். பதில், பணம் எதுவும் வரவில்லை. பரிதாபம்

அப்பா, என்னிலும் பார்க்க அவனுக்கே அவசியம் ஒரு பட்டம் தேவை. நல்லபையன். அவனுக்கு எவ்விதமேனும் உதவ வேண்டும் என எண்ணுகிறேன்.

அவனுடைய பெயருக்கு, அவன் தகப்பஞர் அனுப்புவது போல, தந்தி மணி ஓடரில் இது கிடைத்த அன்றே அறுநூறு ரூபா அனுப்பி விடுங்கள். தகப்பன் சுப்பிரமணியம் எங்கள் வீட்டுமேற்கு ரேட்டில் வசிக்கிறவர். பெரிய குடும்பம். அவர்கள் எவருக்கும் தெரியாமல் இதனை நீங்கள் செய்ய வேண்டும்.

அப்பா, அம்மா, சந்திரசேகரனையும் என்னையும் ஆசீர்வதியுங்கள்.

வணக்கங்களுடன்,
மகன் தயாளன்

சுப்பையரின் முகத்தில் சிந்தனை படருகிறது: மீனுட்சி அவரிடமிருந்து கடிதத்தை வாங்கி, மெதுவாகத் தடவி, உறையினுள் இட்டாள்.பிறகு, அதைக் கொண்டு சென்று சுவாமி மேடையில் வைத்து விட்டு, கைகூப்பி வணங்கி நின்ருள்.

இரண்டு மூன்று நிமிஷங்கள் சுப்பையாவின் குரல் கேட்டது; 'மீனுட்சி, இந்த அதுகளைக் கொண்டு வா':

வெளியே வந்த மீனுட்சி, திரும்பி உள்ளே போய் எதை எதையோ எடுத்து வந்தாள்.

நாஷனல் சட்டை, சால்வை அணிந்து சுப்பையர் மேசையருகில் நிற்கிருர். மீனுட்சி அறுநூறு ரூபாவை முதலில் மேசைமேல் வைத்தாள். அதன்மேல் பத்துரூபாத் தாள்களாக நூறுரூபா. அதன்மேல் சில்லறை நாணயங்கள்.

''இறைவா, எல்லோரையும் ரக்ஷிப்பாயாக'' என்ற வேண்டுதலோடு, சில்லறை நாணயங்கள் தவிர மிகுதியை ஒரு கடித உறையுள் இட்டு, சட்டைப் பையினுள் வைத்தவர், அதைத் தட்டிப் பார்த்துக்கொண்டே, ''ஓ, பத்தரைக்கு மேலாகிப்போச்சு. போட்டுவாறன்'' என்ற படி, இறங்கி நடந்தார்.

''தவால் கந்தோரால மகள் வீட்டையும் ஒருக்காப் போய்ப் பார்த்திட்டு வாருங்கோ.''

புன்னகைத்துக் கொண்டே சென்ற சுப்பையருக்கு, கொஞ்சம் நெரிசல் என்ருலும், உடனேயே பஸ்கிடைத்து விட்டது.

இரண்டு மூன்று தரிப்புகளின் பின்,''தபால் கந்தோர், இறங்குங்கோ'' கேட்டதும் சுப்பையர் இறங்கினுர்.

தபாற் கந்தோரில் மணி ஒடர்ப்பத்திரம் ஒன்றைப் பெற்றுச் சுப்பையர் நிரப்பினுர்.

நிரப்பியதைக் கொடுத்து விட்டுப்பணத்தைக் கொடுப்பதற்காகச் சட்டைப் பையினுள் கைவிட்டார்.

''இறைவா!''

பணத்தைக் காணவில்லை.

இரு புறப்பைகளையும் துழாவிப் பார்த்தார்.

மனம் ''திக்'' என்றது

'பையினுள் தானே வைத்தேன்?'

'எங்கே போயிற்று?'

'பணம் போனுல் போகட்டும். அந்தப் பையனுக்கு உடனே அனுப்பமுடியவில்லையே!'

'தம்பி,கொஞ்சம் பொறுக்க வேணும். பணத்தை விட்டிட்டு வந்திட்டன் ஒடிப் போய் எடுத்துவாறன்.''

அவர் படிகளில் இறங்கி வேகமாக, அருகிலுள்ள மகள் வீட்டுக்கு நடக்கிருர்.

தபாற்கந்தோர் வளவினுள் அந்தப் பெரிய வேப்பமர நிழலில் சுப்பிரமணியம், சந்திரசேகரனின் தகப்பஞர், நிற்கிருர்.

- ஜகன் -

'சுப்பிரமணியத்தாரும் காசு, கீசு அனுப்பத்தான் வந்தவரோ?'

'அவர் அனுப்பினுல் அனுப்பட்டும். நான் அனுப்பியே தீருவேன்.'

'இவரும் நான் வந்த பஸ்ஸில் தான் வந்திருப்பார்.'

நூறு மீற்றர் தூரத்தில் மகள் வீடு'

''அப்பா, வாருங்கோ''–மகளின் வரவேற்பு இதமளிக்கிறது.

''சாந்தி, உடனை ஒரு எழுநூறு ரூபா வேணும். பேந்து எடுக்கலாம். கொஞ்சம் அவசரம்.''

''தாறன் அப்பா, ஏதும் தண்ணி, கிண்ணி குடிச்சிட்டு......''

''முதலிலை காசை எடு. பத்து நிமிஷத்திலை வாறன் தண்ணி குடிக்க.''

காசு வருகிறது.

சுப்பையர் மணி ஓடர் யன்னலில் பணத்தை நீட்டுகிருர். பத்திரத்தின் மேல் மூலையில் ''தந்தியில், ''அவசரம்'' என்று எழுதியிருக்கிருர்.

தபால் அலுவலர் மற்றைய கருமங்களை ஒதுக்கிவிட்டுத் தந்தி கொடுக்கிருர்.

பெறுபவர்: எஸ். சந்திரசேகரன், இலக்கம் இருபத்திமூன்று, பேராதனை வீதி, கண்டி.

அனுப்புபவர்: கே. சுப்பிரமணியம்.

தொகை: அறுநூறு ரூபா.

மறுமுனையிலிருந்து கேட்ட சில வினுக்களுக்கு விடை தந்த அலுவலர், மிகுதிப் பணத்தையும், பற்றுச் சீட்டையும் சுப்பையரிடம் தருகிருர்.

'அப்பாடா!'

சுப்பையர் திரும்புகிருர். கந்தோரினுள்ளிருந்து சுப்பிரமணியமும் திரும்பி வேகமாக நடக்கிருர்.

●

மகள் சாந்தி கொடுத்த தேநீர் வழமையிலும் மேலான சுவை தருகிறது. தள்ளாத உடலும், மனமும் பூரித்த நிலையில் சுப்பையர் வீடு திரும்புகிருர்.

வாயிற் படலையைத் திறந்து உள்ளே போனவர், வீட்டு வாயிலில்' 'இது என்ன?' என்று குனிந்து பார்க்கிருர்.

அவர் பணங் கொண்டு சென்ற உறை! 'அட, கடவுளே!'

'இது எப்படி இங்கே கிடக்கும்''

குனிந்து அதை எடுத்துப் பார்க்கிருர். அவர் வைத்த பணம் அப்படியே இருக்கிறது.

'போகும் போது இதில் தவற விட்டுச் சென்றேனே?'

'அப்படி இருக்க முடியாதே, பையினுள் இட்டபின் தட்டியும் பார்த்தேனே;'

மீண்டும் உறையினுள் பார்க்கிருர். 'இது என்ன உறைக்குள் வேறும் ஏதோ...

சில நிமிஷங்களுக்கு முன்னர் செடியிலிருந்து கொய்து எடுக்கப்பட்ட ஒரு ரோஜாப்பூ உறையினுள் இருந்து அவரைப் பார்த்து புன்னகை செய்து ஆசீர்வதித்தது.

# மாறுவது எப்போது ?

நாற்பது ஆண்டுகள் பின்னேக்கிப் பார்க்கிறேன். வீட்டில் அன்ருடம் உபயோகிக்கும் பொருள்களில் எத்தனை இப்பொழுது இல்லை. அநேக பொருள்களின் இடத்தை இப்பொழுது 'பிளாஸ்ரிக்' பொருள்கள் பிடித்துள்ளன. சங்கக்கடைக்குச் சாமான் வாங்கச் செல்லும்போது பனை ஓலையால் இழைத்த அடுக்குப் பெட்டியுடன் சென்ற நாம் இன்றுஉரப்பை,கிசுகிசு ஷொப்பிங்பை, மாட்டுத்தாள் பை இவற்றுடன் செல்கிருேம் முன்னையது குறைந்தது ஆறுமாதங்களுக்காவது நீடித்து நிற்கக் கூடியது. பின்னையவை ஆறு நாள்களுக்குத்தானும் நிற்காதவை. அதுமட்டுமா?;

எவ்வளவுதான் கழுவினுலும் உரப்பையில் உரச்சுவடுகள் (Traces) இருக்கவே செய்யும். இவை உணவுடன் நம் உடலிற் பச்சையாகவே சேர்ந்துவிடும். பழுதாகிய உரப்பை, கிசு கிசு ஷொப்பிங்பை என்பன இலேசில் உக்கி அழியாதவை. இதனுற் சூழல் மாசடைகிறது. மாட்டுத்தாள் பையில் நாம் பொருள்கள் வாங்கும்போது கணிசமான அளவு சிமெந்து நம் உடலிற் சேருகிறது. இதுவும் உடல் நலத்திற்குத் தீங்கு விளைவிக்கிறது. ஆனுல் பனை ஓலையால் இழைத்த அடுக்குப் பெட்டி பழுதடைந்தால் மண்ணுக்குச் சிறந்த வளமாக்கி. கெட்டாலும் செட்டி, கிழிந்தாலும் பட்டுத்தான் போங்கள்.

சந்தையிற் புளி, உப்பு, முதலிய பொருள்களை மொத்தமாக வாங்குவதற்கு உமல் என்றெரு பனை ஓலைப்பை உபயோகத்தில் இருந்தது இன்று அதுவும் உரப்பையிலேதான் அமல இயல்புடைய புளியும், காரவியல்புடைய உப்பும் நிச்சயமாக பையில் எஞ்சியுள்ள உரத்தை நம் உடலில சேர்த்து விடும்.

அழகான இடம்பப்பைகள் கைப்பைகள் 'பன்' எனப்படும் புல்லினுலும், பனை ஓலையினுலும் சாயம் ஏற்றப்பட்டு அழகிய வடிவங்களுடன் உபயோகத்திலிருந்தன. இவை எல்லாம் தற்பொழுது 'பிளாஸ்ரிக்' மயம்.பாய்கூடப் 'பிளாஸ்ரிக்'தான். என்னதான் விஞ்ஞானம் வளர்ந்தாலும் காத்தான்குடி மெத்தைப் புற்பாயிற் படுப்பதோ இருப்பதோ தனிக்குஷிதான். உபயோகித்தவுடன் எறிந்து விடும் நாகரிகத்தன்மையால் பெருந்தொகைப் பணம் வீணுகிறது.

மின்சாரம் இல்லை; எத்தனையோ பாதிப்புகள்; உண்மைதான் அதேவேளையில் மின்சாரமே இல்லாத காலத்தில் மனிதன் சீவிக்கவே செய்தான் என்பதையும் எண்ண வேண்டும். கைத்தொழில் வளர்ச்சியுற்ற இக்காலத்தில் மின்சாரம் இன்றியமையாதது தான். ஆனுல் வீட்டை இது அதிகம் பாதிக்காது. மிக்ஸிகள்,கிரைண்டர் இல்லாவிட்டால் என்ன? அம்மி ஆட்டுக்கல் இருக்கவே இருக்கு. திரி

கா. சுப்பிரமணியம்

கைக்கல் உரல் உலக்கையும் இருக்கவே இருக்கு. ஏன் இந்தச் சோம்பல். நேரம் மிச்சமாச்சே என்று பல பெண்கள் கூறுவது என்காதில் விழாமல் இல்லை. நேரம் எதற்கு? உல்லாசமாகக் கதைப்பதுக்கும் பொழுது போக்குவதுக்கும் தானு?

காலையில் 'பேக்கரி'வைத்திருப்போன் ஏன் பாண் தயாரிக்கிருன்.அவனுக்கு நிச்சயம் தெரியும் பெரும்பாலான வீடுகளிற் காலைச் சாப்பாடுதயார் செய்வதில்லை என்று. இதில் பேக்கரிக்காரனுக்கான இலாபம், கூலியாட்களின் சம்பளம் இவற்றையும் நாமே கொடுக்கிருேம். அத்துடன் வீட்டிற் தயாரிப்பதால் ஓரளவு லாபமும், சுத்தமும் உண்டல்லவா?

துறைமுகத்தில் வேலை நிறுத்தம், போக்குவரத்துத் துண்டிப்பு, உணவுத்தட்டுப்பாடு வருமா? என்று ஏங்குவதோ? அல்லது பிரச்சனைவரப்போகுது அரிசி மா சேமிக்க வேண்டுவதோ அன்று இல்லை. ஏன் இன்று இந்த நிலை, இயற்கைவளங்களை நாம் ஒழுங்காகப் பேணவில்லை.

தென்பகுதியிற் கலவரம், வெங்காயம் மலிந்துவிட்டது, முதலீடே கிடைக்கவில்லை என்று தலையிற் கைவைக்கும் எத்தனையோ கமக்காரர்களை இன்று பார்க்கிருேம். வெங்காயத்துக்குப் பதில் குரக்கனே, சாமையோ பயிரிட்டால் என்ன? துறைமுக வேலை நிறுத்தம் எங்களைப் பாதிக்குமா? மரவள்ளி நட்டால் என்ன? இராஜவள்ளி அல்லது தற்காலப் பயிரான சோயா அவரைதான் நட்டால் என்ன? கௌபீ எனப்படும் சுவையான பயறு, உழுந்து என்பவற்றைப் பயிரிட்டால் நாம் உணவுக்காக ஏங்கவேண்டியதில்லை அல்லவா?

புகையிலை, வெங்காயம் இவற்ருல் ஏராளமாகப் பணம் கிடைக்கும் என்ற ஆசையால் கிரேக்க மன்னன் 'மிடாஸ்

13ஆம் பக்கம் பார்க்க

1

# தமிழ் நாட்டில் தமிழ் சிதைகிறது

இரண்டு ஆண்டுகளுக்கு முன் இலங்கைக்குச் சீன அறிஞர் ஒருவர் வந்திருந்தார். அவர் சொன்னார்:

'சீன மொழிக்கு இலக்கணம் இல்லை; தமிழ்மொழிக்கு இலக்கணம் இருப்பது பற்றி வியப்படைகின்றேன்.'

தமிழர்கள் தம்மொழியைக் கட்டிக்காக்க இலக்கண வரம்பினை அமைத்தனர். அகத்தியர் முதல் ஆறுமுகநாவலர் வரை இலக்கணத்தைக் கட்டிக்காத்து இன்றுவரை அதினின்றும் வழுவாது இருக்க முயல்வது தமிழ். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலக்கியங்கள் ஆக்கப்பட்டு நிறைவான இடத்தைப் பெற்றுவிட்ட மொழி தமிழ்!

மொழி உருமாறும் தன்மையது. தமிழ் மலையாளமாகத் தெலுங்காக, கன்னடமாக, துளுவாகத் திரிந்துவிட்டதென வரலாற்று வாணர்கள் கூறினார்கள். பேராசிரியர் சுந்தரம் பிள்ளையும் இதையே வலியுறுத்தினார். மலையாளிகள், தெலுங்கர்கள், கன்னடர்கள் இதனை இன்று மறுக்கலாம். இந்தப் பிரச்சினையில் அவர்களுக்கு அக்கறை இல்லாமலும் இருக்கலாம்! ஆனால், தமிழர்களைப் பொறுத்தவரை தமிழ் மொழி வழங்கிய நிலப்பரப்பில் ஒருபகுதியை இழந்துவிட்டனர். இது ஆறுக் கவலை தருகிறது.

இந்தியாவில் உள்ள மாநிலங்களில் ஒன்று தமிழ்நாடு.

தீக்கவயல்
சி. தர்மகுலசிங்கம்

தமிழ்நாடு இன்று உலகம் முழுவதும் பேசப்படும் தமிழ் மொழியின் தாயகம் என வர்ணிக்கப்படுகின்றது. தமிழாராய்ச்சி மகாநாடுகள் ஆண்டுதோறும் உலகின் ஒரு கோடியிற் கூட்டப்படுகின்றன. கோடிக்கணக்கான ரூபா இதற்கெனச் செலவிடப்படுகின்றது. ஆனால் தமிழ் நாட்டைப் பொறுத்தவரை தூய தமிழ் அங்கு நிலவுகிறதா?; இல்லை! திரிபடையாத் தமிழ் அங்கே உண்டா?; இல்லை!! சிதைவடையாத் தமிழ் உண்டா?; இல்லை!!! இதனை ஆராய்வதே என் நோக்கம்!

''பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல'' என்று நன்னூல் கூறும் பழையன கழிதல் புதியன புகுதல் நன்று எனினும் புதியன நல் வடிவத்திலேதான் புகுந்திடல் வேண்டும். இதுவே முறையானது. மொழியியலாளர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியது. இவ்வாறு நடவாது விடின் தமிழ் விரைவிற் சிதைந்து போகும்! தமிழ்மொழிக்கு இந்நிலை சிவப்பு விளக்காக அமையும்.

## சென்னையிற் கேட்டதமிழ்!

சென்னையில் ஒருமுறை சுற்றுலா மேற்கொண்டிருந்தேன் ஒருவரை அணுகித் ''தர்மலிங்கம் வீதிக்குப் போவது எப்படி?'' என்று விசாரித்தேன். அவர் பேசிய தமிழ் என்னைத் திகைக்க வைத்தது.

''நேரே போங்க; அங்கிட்டு ஒரு ''லைட்போஸ்ற்'' வருதுங்க, அந்தண்டை போஸ்ட் ஆபீஸ் ரைட்டுக்குப் போங்க ரேண் பண்ணுங்க பண்ணுப் பாருங்க நடராஜா லாட்ஜ் (Lodge) அந்தண்டை தான் அவன் வூடு (வீடு)''

இந்த வழிகாட்டலில் இருக்கும் பதங்களை நன்கு கவனியுங்கள்; தமிழ் படும் பாடு தெரியவரும் இந்தப் பேச்சு மொழியில் தமிழ் எனப் பேசப்படுவனவற்றில் எழுபத்தைந்து வீதம் ஆங்கிலமே!

எழுத்து மொழிக்கும் பேச்சு மொழிக்கும் எந்த மொழியில் அதிக வித்தியாசம் வருகின்றதோ அந்த மொழியைக் கற்பது சுலபம் அல்ல ஆங்கிலம் உலக மொழியானதுக்குக் காரணம் இந்த வித்தியாசம் அதிகம் இன்மையே.

## ஆங்கிலமே தமிழானதோ

சென்னையில் பேசப்படும் எழுபது வீதச் சொற்கள் அந்நிய மொழிக்கலப்பு எனக் கூறினோம். ஆங்கிலத்திலிருந்து வந்த பல சொற்கள் அவை.

அங்கு பின்வருமாறு தமிழ் உருவம் பெற்றுள்ளன.

| ஆங்கிலம் | தமிழ் (ஆ?) |
|---|---|
| Office | ஆபீஸ் |
| Makers | மேக்கர்ஸ் |
| Sir | சாரு |
| Coffee | காப்பி |
| Block | பிளாக்கு |
| Side | சைடு |
| Photo | போட்டோ |
| Director | டைரக்டர் |

மேலே சுட்டிக்காட்டப் பட்டிருக்கும் எட்டுச் சொற்களின் ஆங்கில ஒலி வடிவே தமிழ்ப் பேச்சுமொழியில் இடம் பெறுகிறது. இலங்கையில் மேலே சொல்லப்பட்ட சொற்கள் முறையே அலுவலகம், தயாரிப்பாளர், ஐயா, கோப்பி 'புளொக்' பக்கம், புகைப்படம், நெறிப்படுத்துநர் என வழங்கப்படுகின்றன. எட்டுத் தமிழ்ச் சொற்களிற் 'புளொக்' என்பது மாத்திரம்தமிழ் உருவம் பெறாது இயங்குகின்றது இப்பந்தியிற் குறிப் பிட்ட விடயங்களை உற்று நோக்கினால் தமிழ் நாட்டுத் தமிழில் ஆங்கிலம் நூறுவீதம் என்றால் இலங்கைத் தமிழில் நூற்றுக்குப் பத்தே!

மேலே நாம் சொன்னவற்றைவிட சென்னையில் ஆங்கிலத்தில் இருந்து பெறப்பட்டுச் சர்வசாதாரணமாகப் பேச்சுவழக்கில் பயன்படுத்தப்படும் தமிழுருவங்கள் சில:

| ஆங்கிலம் | தமிழ் |
|---|---|
| Soap | சோப்பு |
| Ink | இங்கு |
| Bank | பாங்கு |
| Book | புக்கு |
| Book centre | புக்செண்டர் |
| Cash counter | காஷ்கவுண்டர் |
| Kerosene oil | கெருசின் ஆயில் |
| Music Academy | மியூசிக் அக்கடமி |
| Cover | கவரு |
| Forest | பாரஸ்ட் |

தமிழ் நாட்டில் (?!) படித்தவர்முதல் பாமரர் வரை ஆங்கிலத்தைத் தமிழாக்கி பேச்சுத்தமிழில் இடுகின்றனர். தமிழாராய்ச்சி மாநாடுகளுக்குக் கோடிக்கணக்கான பணம் வாரி இறைக்கப்படுகின்றது. ஆனால் தமிழ் தமிழாக இருப்பதற்குத் தமிழ் நாட்டில் எதுவும் செய்யப்படுவதில்லை. 'மெல்லத் தமிழ் இனிச்சாகும்' எனப் பாரதி சொன்னது தீர்க்கதரிசனமேயாகிவிடுமா?

வளரும்

## இப்படியும் நடந்திருக்கிறது

'ஒலிம்பிக் போட்டி முதன் முதல் கி.மு 776-ல் கிரேக்கில் ஆரம்பமானது. இதன் பின், அரசியல் காரணங்களால் இப் போட்டி இடை நிறுத்தப்பட்டு பின் 1986-ம் ஆண்டு தொடக்கம் 4 வருடங்களுக்கு ஒரு முறை நடைபெற்று வருகின்றது'

'ஒலிம்பிக்' போட்டியின் ஆரம்ப காலத்திலிருந்து 1928-ம் ஆண்டுவரை இப் போட்டியில் பெண்கள் பங்கு பற்றுவதற்குத் தடைவிதிக்கப் பட்டது மட்டுமின்றிப் பார்வையாளர்களாக அவர்கள் செல்வதற்கும் கடும் தடைவிதிக்கப்பட்டிருந்தது. இத் தடையை மீறிச் செல்லும் பெண்களுக்கு என்ன தண்டனை விதிக்கப்பட்டது தெரியுமா? எதுவித விசாரணையுமின்றி' 'மரணதண்டனை'. தண்டனை உடனடியாகவே நிறைவேற்றப் பட்டது.

ஒரு ''ஒலிம்பிக்'' போட்டியில், தன்மகனின் விளையாட்டைக் கண்டு களிப்பதற்காக ஒரு தாயார் ''ஆண்வேடம்'' தரித்துப் போட்டி நடைபெற்ற திடலுக்குள் சென்றுவிட்டார். 200யார் ஓட்டப் போட்டியில் தன் மகன் முதல் இடத்தைப் பெற்றதைக் கண்ட அத்தாய், பூரிப்பில் எழுந்து நின்று கரகோஷம் செய்தாள். அவளை இனம் கொண்ட நிர்வாகிகள் அவளுக்கு மரணதண்டனை கிடைப்பதற்கு வழி செய்தார்கள்.

1928-ம்ஆண்டுக்குப் பின்பே இக்கொடுமைகள் நீக்கப்பட்டு ஆண்களைப் போல் பெண்களும் சரிசம 'ஒலிம்பிக்' போட்டிகளில் பங்குகொள்ளும் சம வாய்ப்புக்கள் பெற்றனர்.

# நெப்ரியூனை அணுகிய

# வொயேஜர் - 2

விண்வெளிஆய்வு இன்று முக்கியமானதொன்றாகிவிட்டது. பிறகிரகங்களை, அதன் வளிமண்டலம் இயற்கை இயல்பு என்பவைகளைக் கண்டறிவதில் அமெரிக்காவும் சோவியத்ரஷ்யாவும் போட்டிபோடுகின்றன. 1957-ம் ஆண்டுமுதற் செயற்கைக் கலங்களைப் பிறகிரகங்களை நோக்கி ஏவத்தொடங்கின. மனிதர்களை விண்ணிற்கு அனுப்பிப் பல தகவல்களைப் பெற்றன.

பிற கிரகங்களை நோக்கி அனுப்பப்பட்ட செயற்கைக் கலங்களில் ஒன்றுதான் வொயேஜர்-2.இது இப்போது நெப்ரியூன் கிரகத்திற்கு அண்மையிற் சென்றிருக்கின்றது. 1976-ம் ஆண்டில் அமெரிக்க நாட்டு நாஸா விண்ஆய்வு நிலையத்தால் வியாழன், சனி, யுறேனஸ் நெப்ரியூன் எனப் பூமியை அடுத்து அமைந்த கிரக வரிசைகளுக்கு இது அனுப்பப்பட்டது. இந்த வொயேஜர்-1, மற்றையது வொயேஜர்-2. வொயேஜர்-1 வியாழனை நெருங்கி வியாழனின் சந்திரனில் (பத்தாவது உபகோள்) ஒரு எரிமலையைக் கண்டு படம் எடுத்துப்பூமிக்கு அனுப்பிவிட்டு திசைமாறிச் சென்றுவிட்டது. ஆனால் வொயேஜர்-2 கலம் தொடர்ந்து சென்று ஆகஸ்ட் 24-ம் திகதி நெப்ரியூனுக்கு 25 மைல்கள் தொலைவில் நின்றது. இதுவரை நெப்ரியூனை அதன் உபகோளான ரிரிட்டனையும் 8000 படங்களாக எடுத்து பூமிக்கு அனுப்பியுள்ளது. அத்துடன் ஒரு புதிய உபகோளையும் நெப்ரியூனில் கண்டுள்ளது. ஏற்கனவே நெப்ரியூனிற்கு 'நெரியட்', ரிரிட்டன் என்ற உபகோள்கள் உண்டு. தற்போது கண்டறியப்பட்ட உபகோளுக்கு '1989 N,' எனப் பெயரிடப் பட்டுள்ளது. இது நெப்ரியூனிலிருந்து 125, முதல் 400 மைல்கள் நீள் வட்டத்தில் நெப்ரியூனைச் சுற்றுகின்றது

ஒரு புதுத் தகவலை வொயேஜர்-2 தந்துள்ளது. நெப்ரியூனின் உப கிரகமான 'ரிரிட்டன்' அதன் உபகோள் இல்லையாம். அது செவ்வாய் வியாழன் கிரகங்களுக்கிடையில் உள்ள உடுப்போலிகள் வலையத்தின் (Astroid belt) பெரிய உடுப்போலி ஆகும். வியாழனின் ஈர்ப்பில் இயங்கிய உடுப்போலிகளில் ஒரு சில அதிலிருந்து விலகிச் செல்வதுண்டு. அவ்வாறு விலகிச் சென்று நெப்ரியூனின் ஈர்ப்பினுள் நுழைந்து அதன் உபகிரகமானதே ரிரிட்டன் என வோயேஜர் திட்ட ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

நெப்ரியூன் சூரிய மண்டலத்திலிருந்து எட்டாவதாக அமைந்த கிரகமாகும். சூரியனிலிருந்து 178 000 000 00 மைல்கள் தொலைவில் அமைந்துள்ளது. பூமியிலிருந்து 4 மில்லியன் மைல்கள் தொலைவில் அமைந்துள்ளது. 27800 மைல்கள் குறுக்குவிட்டமுடையது. சூரியனைச்சுற்ற 248 பூமி வருடங்கள் எடுக்கும். தன்னைத்தானே சுற்ற 15 மணித்தியாலங்கள் 50 நிமிடங்கள் பூமிநேரத்தை எடுக்கும். அதாவது நெப்ரியூனில் ஒரு நாள் என்பது 15 மணித்தியாலங்கள் 50 நிமிடங்களாகும். இது 1846ல் கண்டுபிடிக்கப் பட்டது. அது கண்டுபிடிக்கப் பட்ட காலத்தில் அது ஒரு அழக்கான நிறமும், பச்சையும் கலந்த பந்து போன்ற தோற்றமுடையது என்பது மட்டும் தெரிந்தது.

ஆனால் வொயேஜர்-2 அதனை அணுகியதும் அதன் ஒளிப்படப் பதிவுக் கருவிகள் இலத்திரன் கற்றைகளை அதன்மீது செலுத்தித் தெளிவான படங்களை எடுத்துக் கலிபோர்ணியாவிலிருக்கும் 'பாஸ் ரெ டேனா' விண் ஆய்வுத் தளத்திற்கு அனுப்பியது. நெப்ரியூனிலிருந்து ஒரு சமிக்ஞை(Signal) பூமிக்கு வர நான்கு மணித்தியாலங்கள் எடுக்கும். அது எடுத்தனுப்பிய படங்களில் வெள்ளை வரிகளும் சுழற்காற்று வீசியதற்கு அறிகுறியான சுழற் பொட்டுக்களும் (வியாழனில் அமைந்த செம்பொட்டு போன்றது) இருந்தன. படங்கள் ரிரிட்டன் மீதே இருந்தன, அது ஒரு சிவப்புக் கோளம் அதற்கான காரணம் அதன் வளிமண்டலம் 'மீதேன் வாயுவால் நிரம்பியிருக்கலாம் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர். அது உண்மை தானா என அறிய வொயேஜர் 2-ரிரிட்டன் மேலேயே அதிக அக்கறை கொண்டுள்ளது அதற்கு முன்னோடியாக திரவ நைதரசன் ரிரிட்டன் மீது உள்ளதான சாத்தியம் வொயேஜர் - 2 மூலம்தெரிகின்றதாக வொயேஜர் -2 திட்டக்குழுத் தலைவர் 'ரொறன்ஸ்ஜோன்சன்' தெரிவித்துள்ளார். மேலும் பல நெபரியூனில் புதைந்து தெரியாமலிருக்கும் உபகோள்களை

தி. தவபாலன்

வொயேஜர்- 2 கண்டறியும் என்றார். இதற்குக் காரணம் வொயேஜர் -2 வியாழன்,சனி யுறேனஸ் ஆகியவற்றில் 15 உபகோள்களைக் கண்டுபிடித்தமையே ஆகும். சனியின் வளையத்தில் பொதிந்த பல உபகோள்களையும், யுறேனஸிற்குக் குட்டிவளையங்கள் உண்டு என்ற உண்மையையும் வொயேஜர்- 2 கண்டுபிடித்தது. ஆகவே நெப்ரியூனிலும் புதிய கிரகங்களை வொயேஜர் கண்டுபிடிக்கும் என்ற நம்பிக்கையே ஆகும்.

அண்மையில் அமைந்துள்ள செவ்வாய், வெள்ளி போன்ற கிரகங்களைப் பற்றிய தெளிவான தகவல்களைப் பெறமுடியாதபோதும் பலகோடி மைல்களுக்கு அப்பாலுள்ள கிரகங்களை ஆயும் வொயேஜர் திட்டத்தை அமுல்படுத்தும் அமெரிக்காவின் விண்சாதனை வியக்கத்தக்கது.

1978ல் வியாழனை அணுகியும், 1981ல் சனியை அணுகியும், 1986ல் யுறேனஸை அணுகியும் அவை பற்றிய தெளிவான தகவல்களையுந் தந்த வொயேஜர் -2 பன்னிரண்டு ஆண்டுகளின் பின்னர் நெப்ரியூனை வெற்றிகரமாக அணுகியுள்ளது. இதன் பயணம நெப்ரியூனுடனே முடிந்துவிடலாம். அல்லது அதனைக் கடந்தும் செல்லலாம்' எனப் பெருமையுடன் மார்தட்டிக்கொள்கிறது வொயேஜர் திட்டக்குழு.

ஆதாரம்:-

டைஜஸ்ட்
ரைம்ஸ்
ஸ்பேஸ்
வொய்ஸ்

## இரண்டுவாரக் கட்டுரை

# பூமியில் உயிரினம் வாழுமா

சூழல் மாசடைதல், அணுப்பரிசோதனை, அண்டவெளி ஆய்வுகள், ஆயுத உற்பத்திப் பெருக்கம் என்பவற்றில் பூமி நிலைக்குமா? என்பது பலரது ஐயப்பாடு பூமி நிலைக்கும் ஆனல் மனிதன் அழிந்து படுவான் என்பது கலாநிதி ஜேம்ஸ் லவ்லொக்கின் கருத்து. இவரின் கருத்துக்கள் புதுமையானவை; புரட்சிகரமானவை. பொது நோக்குடன் இவரது கருத்துக்கள் இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றன.

கே. எஸ். குகதாசன் M. Sc.

அநாதி காலத்தில் நில மண்டலத்தையும் வளி மண்டலத்தையும் கொண்டிருந்த பூமியில் பின் நீர்மண்டலமும் தொடர்ந்து உயிரின மண்டலமும் தோன்றின. இரசாயனக் கூர்ப்பு வாயிலாக எளிய பதார்த்தங்களிலிருந்து சிக்கலான பதார்த்தங்கள் தோன்றியது மல்லாமல், உயிரின் உற்பத்திக்கு இது வழிகோலியது. பின் அங்கிக் கூர்ப்பு வாயிலாக எளிய அங்கிகளிலிருந்து



சிக்கலான அங்கிகள் பரிணமித்தன. அங்கிக் கூர்ப்பின் உச்சமாக தாவரங்களிடையே பூக்குந் தாவரங்களும், விலங்குகளிடையே முலையூட்டிகளும் (சிறப்பாக மனிதன்) கொள்ளப்படுகின்றன. விலங்குகளிடையே மனிதன் தோன்றிய பின்தான் பிரச்சினைகளும் தோன்றின என்று கொள்ளலாம். அதனல் பூமி ஒரு உயிர்க் கோளமாக நிலைக்குமா அல்லது வெறுங் கோளமாக மாறுமா என்ற வினு எழுந்துள்ளது.

இன்றைய காலகட்டத்தில் விஞ்ஞானிகள் சூழலியலையும், புவிச்சரிதையியலையும், இரசாயனவியலையும் மிக முக்கிய துறைகளாகக் கருத வேண்டும். இவற்றுள் சூழலியலே முதன்மையானதாகும் ஏனைய துறைகளையும் அடக்கியிருப்பது இதன் பெருமையாகும். சூழலின் அமைப்பையும் தொழிற்பாட்டையும் பற்றிய விபரமான படிப்பு சூழலியலாகும் சூழல் என்பது நிலம், நீர், காற்று போன்ற உயிரிலிக்காரணிகளையும்; தாவரங்கள் விலங்குகள் போன்ற உயிர்க்காரணிகளையும் அடக்கியதாகும். சூழற்றெகுதிகள் என்ற அடிப்படையில் சூழலைக் கற்றுக் கொள்வது சுலபம். சூழற்றெகுதி என்பது உயிர்க் காரணிகளையும், உயிரிலிக் காரணிகளையும் அடக்கிய ஒரு தொகுதி. இதற்கு நாமே எல்லை வகுக்க வேண்டும்: ஒரு சிறு குட்டையை ஒரு சூழற்றெகுதியாகக் கொண்டு அவதானிக்கலாம், ஆராயலாம். உலகம் முழுவதையும் ஒரு சூழற்றெகுதியாகவும் கொள்ளலாம்:

இடைத்தாக்கங்களின் அடிப்படையிற்றன் சூழற்றெகுதிகள் இயங்குகின்றன. மேற்படி இடைத்தாக்கங்கள் உயிரிலிக் காரணிகளுக்கிடையே நிகழலாம், உயிர்க்காரணிகளுக்கிடையே நிகழலாம். உயிர்க்காரணிகளுக்கும் உயிரிலிக் காரணிகளுக்குமிடையே நிகழலாம்: ஆயினும் இடைத்தாக்கங்களிடையே ஒரு சமநிலை நிலவும், சூழல் பாதுகாக்கப்படும். உதாரணமாக, கடற்கரையோரங்களில், நீருக்கும், நிலத்திற்குமிடையே இடைத்தாக்கங்கள் நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது, ஆயினும் சமநிலை தளம்பி நீரின் ஆட்சி மேலோங்கினல் மண்ணரிப்பு ஏற்படும், பரந்த நிலப்பரப்புக்கள் கடலுக்கு இரையாகலாம். பிறிதொரு உதாரணத்தையும் பார்ப்போம். ஒரு புல்வெளியையும் எடுத்துக் கொள்வோம். சமநிலை நிலவும்போது இரண்டும் நிலைக்கும். சமநிலை தளம்பி மான்கூட்டம் எண்ணிக்கையில் அதிகரித்தால்; அதிமேச்சல் காரணமாக புல் வெளி வனுந்தரமாக மாற மான் கூட்டமும் அழிந்து படும்; அல்லது சிறிது காலம் தளம்பி மீண்டும் காலப்போக்கில் சமநிலை ஏற்படலாம். காடுகள் அழிக்கப்படுவதனுலும் வனுந்தரங்கள் தோன்றும். சகாரா பாலைவனம் இதற்கு சிறந்தவொரு எடுத்துக்காட்டு. பாலைவனங்கள் தோன்றினல் பின் வளரும், இது இயற்கையின் நியதி. செயற்கை முறைகளினுற்றன் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த வேண்டும்.

எந்தவொரு சூழற்றெகுதியும், சத்தியைப் பொறுத்தவரை திறந்த தொகுதியாகவும், கனிப்பொருட்களைப் பொறுத்தவரை மூடிய தொகுதியாகவும் தொழிற்படும். உதாரணமாகப்பூமியை எடுத்துக் கொண்டால், சத்தி சூரியனிலிருந்து கிடைக்க வேண்டும், ஏனைய நிகழ்ச்சிகளெல்லாம் பூமியில் நடைபெற முடியும்.

பூமியில் இன்று வாழும் அங்கிகளெல்லாம் தாம் வாழும் சூழலுக்கு இசைவாக்கம் பெற்றவையாக உள்ளன. குறிப்பிட்ட சூழலுக்கு இசைவாக்கம் பெறுதவொரு அங்கி அச் சூழலில் வாழுவதற்கு தகுதியற்றதாகும். தற்காலிக இசைவாக்கம் உறுத்துணர்ச்சியெனவும் நிரந்தர இசைவாக்கம் கூர்ப்பு எனவும் கொள்ளப்படும். ஒரு அங்கியின் இசைவாக்கம் அதன் பரம்பரைச் சொத்தாக அமையும் போது அதைக் கூர்ப்பு எனக் கொள்ளலாம். ''பெற்றவியல்புகள் சந்ததியுரிமையாக்கப்படும்'' என்ற இலமாக் (Lamarck) இன் கொள்கையும் ''திடீர் விகாரங்களேற்பட்டுக் கூர்ப்பு நிகழும்'' என்ற டி விறிஸ் (de vries) சின் கொள்கையும், ''இயற்கைத்தேர்வு வாயிலாகத் தக்கன பிழைக்கும்'' என்ற டார்வின் (Darwin)னின் கொள்கையும் யாவருமறிந்ததே. இப்பொழுது ஜேம்ஸ் லவ்லொக் (james lovelock) என்பவர் ஒரு புதுக் கொள்கையை முன் வைத்துள்ளார். இது ஏற்றுக் கொள்ளுமிடத்து உயிரியலுலகிலேயே ஒரு புரட்சியை ஏற்படுத்தும் என்பது திண்ணம்.

இயற்கை நிகழ்வுகளைக் குலைப்பதில் மனிதனின் கைங்கரியம் கண்டு லவ்லொக் கவலைப்பட்டாலும் இதன் விளைவுகள் சம்பந்தமான அவரது கருத்துக்கள் வேறுபட்டதாகும் உலகளாவிய ரீதியில் அணுயுத்தம் ஏற்பட்டாலும் பூமி அழிந்து படாது, மனிதனும் அவனை அண்டிய ஜீவராசிகளுமே அழிந்து படும். அணுதிகாலத்தில் தொடர்ச்சியான எரிமலை வெடிப்புக்களையும், பூமியதிர்ச்சிகளையும் பின் தொடர்ச்சியான மழை

(13 ஆம் பக்கம் பார்க்க)

# அழகியற்கலையும் ரசக்கொள்கையும் [2]

# ரசம் தோற்றுவிக்கப்படும் முறை

ஏ. என். கிருஷ்ணவேணி

### ரசம் தோற்றுவிக்கப்படும் முறை

நாட்டிய சாஸ்திரத்தின் ஆருவது அத்தியாயத்தில் ரசசூத்திரம் இடம்பெறுகிறது.

விபாவ அநுபாவ வியாபிசாரி சம்யோகத் ரஸநிஷ்பதிஹி என்ற சூத்திரம் ரசத்தின் தோற்றம்பற்றி விளக்குகின்றது. அதாவது விபாவம், அநுபாவம், வியபிசாரி பாவம் ஆகியவற்றின் சேர்க்கையின் பயனுக 'ரசம்' தோன்றுகிறது.

பரதர் காவியத்தில் ரசம் தோன்றும் முறையைப் பின்வருமாறு விளக்குகிருர் ''ஒரு மரம் விதையில் இருந்து தோன்றுகிறது. மரத்திலிருந்து பூக்களும், பழங்களும் தோன்றுகின்றன மரத்திற்கு விதை மூலமாக இருப்பது போன்று, கவிஞனது இதயத்தில் இருக்கும் ரசம் காவியத்திற்கு மூலமாக உள்ளது'' ரசங்களே எல்லா பாவங்களுக்கும் மூலமானவை.

ரசத்தின் அம்சங்கள் பற்றி விளக்குவதற்குப் பரதர் நாடகத்தையே சிறந்த கலையாகத் தேர்ந்தெடுத்துள்ளார் வாழ்க்கையின் பல்வேறு விவகாரகளையும் ரசிகர்கள் அறியக்கூடிய வகையில் இலகுவாகஉணர்த்துவது நாடகமே.

ரசத்தைத் தோற்றுவிக்கும் காரணிகள் இருவகைப்படும் அவை விஷயகாரணி (Objective factors) விஷயிகாரணி (subjective factors) என்பனவாகும். விஷயகாரணிகள் என்று கூறும்போது அவை சிறப்பாக நாடகக்கலையிற் தோற்றுவதைக் காணலாம் அவற்றுள் மிக முக்கியமானது மனஎழுச்சி அல்லது உணர்ச்சி (emotion) ஆகும். பாவம் என்ற சொல் எல்லாவகையான உணர்ச்சிகளையும் குறிக்கும் சொல்லாக இருந்தாலும் பரதர் அகனை ஸ்தாயிபாவம்' என்ற சிறப்புப் பெயரினுற் குறிப்பிடுகின்றுர்: ஸ்தாயிபாவமே அனைத்திற்கும் ஆதார உணர்ச்சியாகும். காண்போன் அல்லது பார்வையாளனது ஸ்தாயிபாவமே ரசம் தோன்றுவதற்கு உபாதான காரணமாக உள்ளது எனக் கூறும் பரதர் ஸ்தாயிபாவத்தின் உருமாற்றம் அல்லது தன்மைமாற்றமே-பரிவரதமே-ரசம் என்கிருர். இவ்வாறு ஸ்தாயி பாவத்தை ரசமாக மாற்றும் காரணிகளைப் பரதர் விபாவம் அநுபாவம், வியபிசாரி பாவம் ஆகிய பெயர்களினுற் குறிப்பிடுவர் 'இதனை' விபாவ. அநுபாவ வியபிசாரி பரிவ்ரத: ஸ்தாயிபாவோ ரஸநாமலப்தே, என்ற சூத்திரம் விளக்குகிறது விபாபவம், அநுபாவம், வியபிசாரி பாவம் ஆகிய மூன்றும் ரசம் தோன்றுவதற்கு நிமித்த காரணங்களாகக் கூறப்பட்டுள்ளன.

விபாவம் நாடகத்தில் கதாபாத்திரங்களிடத்தே நேரடியாகப் பாவங்களைத் தோற்றுவிப்பதுடன், இவ்வுணர்ச்சிகளைப் பார்வையாளர்களிடம் மறைமுகமாகத் தோற்றுவிக்கிறது. இது 'ஆலம்பன விபாவம் உத்தீபன விபாவம் என இரு,வகைப்படும் ஒரு நாடகத்திற் கதாபத்திரங்களினுற் தோற்றுவிக்கப்படும் பாவம் ஆலம்பன விபாவம் எனப்படும். உத்தீபன விபாவம் இயற்கைக் கூறுகளினுல் அதாவதுகாலம் இடம்சூழ்நிலை ஆகியவற்றினுல் உருவாக்கப்படுகிறது ஆலம்பனவிபாவத்திருந்தோற்றுவிக்கப்படும் பாவம் மிகத்தீவிரமானது பலபூதியின் உத்தர ராமசரிதத்தில் இராமருற்கைவிடப்பட்ட சீதையின் துயரம் ஆலம்பன விபாவத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். இது சீதையிடம் படிப்போரிடம் மறைமுகமாகவும் நம் நேரடியாகவும் தோற்றுவிக்கிறது. சூழ்நிலைகளின் காரணமாக வயிற்றில் குழந்தையுடன் சீதை பிரிந்தமை மேலும் சோகத்தைத் தூண்டுகிறது. இவை உத்தீபன விபாவங்கள் ஆகும்.

விபாவம் உணர்ச்சிகளின் தோற்றத்திற்குக் காரணமாகவும், அநுபாவம் காரியமாகவும் உள்ளது. பாவங்களோடு தொடர்புடைய எல்லாவகையான உடல்மாற்றங்களும் அசைவுகளும் இதனுள் அடங்கும் இவையும் உணர்ச்சிகளின் குறியீடுகள் இவை விபாவத்திற்குத் துணைபுரிகின்றன விசேட வகையான அநுபாவங்களைப் பரதர் சாத்வீக பாவங்கள் என்கிருர். இவை எண்ணிக்கையில் எட்டு வகைப்படும். திகைப்பூட்டுதல் (ஸ்தம்ப), வியர்த்தல் (சுவேத), மயிர்க்கூச்செறிதல் (ரொமான்ஸா) குரல்மாறுதல் (ஸ்வரபேத), நடுநடுங்குதல் (வெபத்து). நிறம் மாறுதல் (வைவர்ணய), கண்ணீர் வடித்தல் (அஸ்று), மயங்குதல் (பிரளய) என்பனவாகும்.

வியபிசாரி பாவங்கள் ஸ்தாயியவத்தைப் போன்று உணர்ச்சிகளாகவே உள்ளது ஆனல் இவை ஸ்தாயிபாவத்திற்கு சமமானவை அல்ல. ஸ்தாயிபாவங்கள் நிலையானவை. ஸ்தாயிபாவங்கள் எனப்படும் அடிப்படை உணர்ச்சியே ஒரு நாடகத்தில் மிக முக்கியமானது அது ஒன்றே காண்போனிடம் அதே உணர்வைப் பிரதிபலிக்க வல்லது பரதர் எட்டு வகையான ஸ்தாயிபாவங்கள் பற்றிக் கூறுகிருர். அவை ரதி, ஹாசம், சோகம், குரோதம், உற்சாகம், பயம், வெறுப்பு, ஆச்சர்யம் என்பனவாம். பரதரது கருத்துப்படி ஸ்தாயி பாவங்களே ரசங்களாக மாறுகின்றன. அவையே ரசிகர்களினுல் அதிஉயர்ந்த இன்பமாக அநுபவிக்கப்படுகின்றன. காதலை அடிப்படையாகக் கொண்ட இருங்காரம் ஹாசத்தை அடிப்படையாகக் கொண்டதுஹாஸ்யம்; கோபத்தினடிப்படையில்தோன்றுவது ரௌத்ரம் சோகத்தை அடிப்படையாகக்கொண்டதுகருணை ரசம்; உற்சாகத்தின் அடிப்படையில் தோன்றுவது வீரம்; பயத்தை அடிப்படையாகக் கொண்டது பயானகம்; வெறுப்பை அடிப்படையாகக் கொண்டது பீபத்ஸம்; ஆச்சர்யத்தை அடிப்படையாகக் கொண்டது அற்புதம் என்று எட்டுவகையான ரசங்கள் பற்றி நாட்டியசாஸ்திரம் கூறுகிறது.

சமைத்த சோறு சுவையற்றதாக இருந்தாலும், ஏனைய பதார்த்தங்களுடன் உண்ணும் போது ஒருவன் அதன் அவையை ரசித்து, சுவைத்து அநுபவிக்கிறுன். இதேபோன்று வெறும் ஸ்தாயீபாவம் மட்டும் அநுபவித்து ரசிக்கக் கூடியதல்ல அது பல பாவங்கள், பேச்சுகள், ஆடை ஆபரணங்கள் அபிநயங்கள், அசைவுகள் ஆகியவற்றின் தொடர்புகளினுல் வெளிப்படுத்தப்படும் போது ரசிகர்கள் அத்தகைய ரசத்தை அநுபவிக்கின்றனர். ரசம்என்பது உயர்ந்த அழகியலநுபவமாகும்.

பரதரது ரசக்கொள்கை பற்றிய கருத்துக்களை ஆராயின், ரசத்தன்மை கொண்ட கலைப்படைப்புக்கள், அவற்றின் இயல்பு, தன்மை ஆகியவற்றை விளக்கியிருப்பதுடன் ரசத்தை அநுபவிப்பதற்குரிய பார்வையாளரது தகுதி, திறமைகளையும் எடுத்துக் கூறுகிருர். ஆனல் ரசம் என்ருல் என்ன? அது எவ்வாறு பார்வையாளனது உணர்ச்சியுடன் தொடர்புடையது என்று தெளிவாக விளக்கவில்லை. இதனுல் நாட்டிய சாஸ்திரத்திற்கு உரை எழுத முற்பட்டோர் 'ரசம்' பற்றிய பல்வேறு வாதங்களை முன்வைத்தனர். இது 'ரசவாதம்' (Theories of rasa) என்று அழைக்கப்படுகிறது. இவ்வாறு ரசவாதங்களை உருவாக்கியவர்களாக பட்டலொல்லட்டர் ஸ்ரீசங்குகர் பட்டநாயக்கர் அபிநவகுப்தர் ஆகிய நால்வரைக் கூறலாம்.

பட்டலொல்லட்டரின் கருத்துப்படி விபாவ, அநுபாவ, வியபிசாரி பாவங்களினுல், நாடகத்தில் நடிக்கும் நடிகனிடம் ஸ்தாயிபாவம் தோன்றுகிறது. இத்தகைய ஸ்தாயிபாவம் பார்வையாளர்களினுல் உணரப்படுகிறது பார்வையாளரினுல் நடிகனது ஸ்தாயிபாவம் அறிந்துகொள்ளப்படும்போது அவன் அதனை ரசித்து அநுபவிக்கிருன். அதுவே ரசம் எனப்படும் இக்கொள்கை ரச உற்பத்தி வாதம் எனப்படுகிறது.

ஸ்ரீசங்குகரின் கொள்கை ரச அநுமிதி வாதம் எனப்படும் இக்கொள்கைப்படி நாடகத்தில் இராமனுக நடிக்கும் நடிகன் தனது நடிப்பாற்றலினுல், பார்வையாளர் தன்னை இராமனுகவே கருதும்படி நடிக்கிருன். அந்நேரத்தில் பார்வையாளர்கள் அவனையே இராமனுகக் காண்கின்றனர். உண்மையில் அவனைச் சீதையைப் பிரிந்த இராமனுவும், அதே துயரங்களை அநுபவிப்பவனுகவும் கற்பனை செய்கின்றனர். பார்வையாளரினுல் நடிகனது விபாவம், அநுபாவம்

13ஆம் பக்கம் பார்க்க

# 4

கணகண என ஒலித்த அழைப்பு மணியின் ஒலியைக் கேட்ட வசந்தியும் இரத்தினமும் விரைந்து வீட்டின் முற்பகுதிக்கு வந்தனர். ஆடம்பரமாக உடுத்து மூக்குக்கண்ணாடி அணிந்திருந்த பெண்ணொருத்தி வாசலில் நின்றாள்.

''நீங்கள் யாரைப் பார்க்கவேண்டும்?''மைசூர்சௌ(ண்)டையாவின் ஏழு தந்தி வயலின் தந்திகளில் இருந்து வருவதுபோன்ற இனிய ஒலியில் வசந்தி கேட்டாள்.

'தரகர் சின்னத்தம்பியைப் பார்க்கவேண்டும்' 'சுருக்கமாக ஆனால் சுட்டிப்பாகப் பதில் உரைத்தாள் வந்தவள்.

அவர் யாழ்ப்பாணம் போயிருக்கிறார் வரநேரமாகும் என்ன விஷயமென்று நீங்கள் சொன்னால் நான் அவருக்குத் தெரிவிப்பேன்.

'திருமணவிஷயம்; குறிப்பு இருக்கிறது. விவரத்தைஎழுதி அவரிடம் கொடு' என்றாள் வந்தவள்.

'இவர் அப்பாவுடைய சிஷ்யன். உள்ளேவந்து இவரிடம் விவரத்தைச் சொல்லுங்கள் இவர் எழுதிக்கொள்வார்'' என்றாள் வசந்தி.

சிஷ்யன் என்ற சொல்லைக் கேட்டு அதிர்ச்சிஅடைந்த புதியவள் ஒருவாறு தன்னைச் சுதாரித்துக்கொண்டு உள்ளே வந்தாள். உள்ளே இருந்த மேசைக்கருகில் உள்ள கதிரையிற் புதியவளை இருந்து கொள்ளுமாறு வசந்தி கேட்டுக் கொண்டாள். மற்றொரு கதிரையில் இரத்தினம் அமர்ந்து விவரங்களை எழுத ஆரம்பித்தான்.

நீங்கள் கொண்டுவந்திருப்பது ஆணின் குறிப்பா பெண்ணின் குறிப்பா?

பெண்ணின் குறிப்பு

வயது?

நாற்பது

மணப் பெண்ணுக்கு வயது நாற்பது என்றதும் இரத்தினமும் அயலில் நின்ற வசந்தியும் திடுக்குற்றனர். இதைப்

## ஏன்னைச்சிஷ்யனாக ஏற்றுக்கொள்



புதியவள் கவனித்தாள் இது அவளுக்கு வெறுப்பை ஊட்டியது.

பெண் படித்த பெண்ணா? என்றான் ரத்தினம். 'சாதாரண படிப்பல்ல அதிகம் படித்தவள் மாதர்சங்கத்தலைவி' என்றாள்புதியவள். நீங்கள் சொல்வதைப்பார்த்தால் இது உங்கள் குறிப்புப்போலத் தெரிகிறதே'

''என்னுடைய குறிப்புத்தான். என் பெற்றோர் இறந்து விட்டரர்கள். அதனால் நானே எனக்குத் திருமண ஒழுங்குகள் செய்யவேண்டி இருக்கிறது.

''இது ஒரு புது 'ரைப்' பாக'' இருக்கிறது என்று கூறுவதுபோல வசந்தி விழிகளால் இரத்தினத்துக்கு ஜாடை காட்டினாள்.

''பெண்கள் சமஉரிமை கோரிப் போராடும் காலம் இது. ஒரு ஆண் தனக்குத் திருமணம் செய்யத் தரகரிடம் செல்லமுடியுமென்றால் ஏன் ஒரு பெண்- அதுவும் மாதர் சங்கத்தலைவி தனது திருமண ஒழுங்குக்குத் தரகரைச் சந்திக்கமுடியாது'' என்று இரத்தினம் கேட்டான்.

இந்தக் கேள்வி மாதர்சங்கத்தலைவிக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது போலும். புன்னகையுடன் இரத்தினத்தைப் பார்த்தாள்.

''மன்னிக்கவேண்டும்! உங்களிடம் நல்ல அழகு இருக்கிறது நீங்கள் வசதியான குடும்பப் பெண் போலவும் தெரிகிறது, மாதர்சங்கத் தலைவியாகவும் பணிபுரிகிறீர்கள். அப்படி இருந்தும் ஏன் நாற்பதுவயது வரை திருமணமாகாமல் இருக்கிறீர்கள்'' என்றுகேட்டான் இரத்தினம்.

நான் இளம் வயதிலேயே மாதர்சங்கத்தில் சேர்ந்துவிட்டேன். சேர்ந்த சில காலத்திலேயே மாதர்சங்கத்தலைவியாகவும் ஆகிவிட்டேன்: ஊர் ஊராகப் பெண்கள் ஆண்களால் அடக்கப்படுவது பற்றியும் பெண்களுக்கு விடுதலை வேண்டும்'' என்றும் பேசி வந்தேன். எனது பேச்சைக் கேட்ட ஆண்கள் பயந்துவிட்டார்கள். திருமணம்செய்த பின் நான் பழி வாங்கிவிடுவேன் என்றும் அஞ்சினார்கள் அஞ்சுகிற கோழைகளைத்திருமணம் செய்யநான் விருப்பவில்லை, திருமணமே வேண்டாம் என்று நேற்று வரை இருந்துவிட்டேன். என்றாள் மாதர் சங்கத் தலைவி.

'அப்படியானால் இப்போது மட்டும் ஏன் மனமாற்றம் என்றான் இரத்தினம.'

'நேற்றுஇரவு எனது கனவில் எனது தந்தையார் வந்தார். மகளே! என்றார். 'என்ன அப்பா' என்றேன்.

'நீஅவசியமாகவும் அவசரமாகவுதிருமணம்செய்துகொள் என்றார். ஏன்என்றுகேட்டேன். அதற்கு அப்பா உனது சாதகப்படி உனது ஐம்பதாவது வயதில் பாரிசவாதம் வரும் நீ பல வருடங்தள் படுத்தபடுக்கையாக இருப்பாய் அந்தநேரத்தில் மாதர்சங்கச் செயலாளரோ அதன் அங்கத்தவர்களோ உன்னைப்பார்க்க மாட்டாகள்' நீ ஆண்களைக் கண்டித்துப் பேசவேண்டிய கூட்டங்களுக்குஉன்னை அழைத்துசெல்ல ஓர் ஆண்வேண்டாமா? ஒரு காரிலோ, ஸ்கூட்டரிலோ ஜம்மென்று அழைத்துச் செல்வானே அவன்: அதுதான உன்னுடைய அவர்:

தந்தையின் வார்த்தையை மந்திரமாகக்கொண்டு தரகர் சின்னத்தம்பியிடம் ஓடோடி வந்தேன் என்றாள் மாதர் சங்கத்தலைவி இதைக்கேட்ட இரத்தினம்உங்கள்தந்தையார் கனவில் மிகவும் லேட்டாக வந்து விட்டார். இருபது வருடங்களுக்கு முன்னர் கனவில் வந்து அவர் இதைச் சொல்லி இருந்தால் உங்களுடைய வாழ்க்கை எவ்வளவோசெழிப்பாக அமைந்திருக்கும் என்றான்.

'எல்லாம் காலம்வரும் போது தான் நடக்கும்' என்றாள் தலைவி. பெருமூச்சொன்று சொல்லிக் கொள்ளாமல் வந்து தொலைந்து விட்டது அவளுக்கு. சீதனம் எவ்வளவு கொடுப்பீர்கள்?' என்றான் இரத்தினம்

### எஸ்.ஆர்.சுந்தரம்

'நான் மாதர் சங்கத் தலைவி. எங்கள் சங்கத்தின் ஆணிவேரே சீதனப்பிரச்சினை தான் நான் சீதனம் கொடுக்கமாட்டேன் என்றாள் தலைவி உங்களுக்கு எவ்வளவு சொத்து இருக்கிறது.

'வீட்டின் பெறுமதி மூன்று லட்சம் எனது பெயரில் 'பாங்'ல் இரண்டு இலட்சம் இருக்கிறது சொந்தக்கார் இருக்கிறது. எனக்குச் சகோதரர் என்று ஆரும்இல்லை. இவை அனைத்தும் எனக்கே சொந்தம்'

'உங்கள் கொள்கைப்படி சீதனம் கொடுக்க வேண்டாம் ஆனால் இவை அனைத்தும் உங்களுக்குச்சொந்தம் என்பதைத் திருமணப் பேச்சின் போது குறிப்பிடுவோம்.

'சரி சரி எப்படியோ திருமணம் முடிந்தால் போதும் பாரிசவாதம் வந்தால் என்ன

13-ம் பக்கம் பார்க்க

# மஹாகவியின் புதியதொரு வீடு மேடையேறுகிறது

'சிறுநண்டு மணல் மீது
படம் ஒன்று கீறும்
சிலவேளை அதைவந்து
கடல் கொண்டுபோகும்
எறிகின்ற கடலென்று
கறிசோறு பொதியோடு தருகின்றபோதும் கடல்மீதுஅவள்
கொண்டபயமொன்றுமோதும்

மேற்குறிப்பிட்ட பாடலுடனேயே புதியதொரு வீடு என்னும் நாடகம் தொடங்குகின்றது. மஹாகவியின் கவித்துவ ஆற்றலும், அரங்கச் சுவடி ஆக்கும் திறனும், தாசிசியஸ் எனும் நெறியாளனின் கற்பனையும் கலந்து புதியதொருவீடு எனும் பாநாடகம் பொலிவு பெற்றது.

60 களிலே ஈழநாட்டின் கலை இலக்கியப் போக்கில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. இக்காலப்பகுதியிலேயே மஹாகவி போன்றோரின் கைவண்ணத்தால் ஈழத்தின் கவிதையுலகு மிகப்பரந்த விசாலிப்பைப் பெற்றது வள்ளி,சாதாரண ஒரு மனிதனின் சரித்திரம் குறும்பா, கண்மணியாள்காதை, வீடும்வெளியும் முதலிய படைப்புக்கள் இவரது கவிதாசாமர்த்தியத்தைக் காட்டிநிற்பன. கவித்துவத்தைத் தொடர்ந்து''ஆடலும், பாடலும் அமைவரும் ஆசாஞக' நாடக, அரங்கச்சுவடி ஆக்கும் திறன் மிகுந்தவராக மகாகவியை இனங்காட்டுவன அடிக்கரும்பு; முற்றிற்று, கோடை, புதியதொரு வீடு முதலியபாநாடகங்களே மஹா கவி ஈழநாட்டின் கவிதை வரலாற்றில் மாத்திரமன்றிப் பாநாடக வரலாற்றிலும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவமும், தனித்தன்மையும் உடையவராகக் காணப்படுகின்றார். நாடகத்திற்கேற்ற துள்ளல், ஓசை, தாளக்கட்டு முதலியவற்றை இவரது பாடல்கள் சிறப்பாகக் கொண்டிருக்கின்றன. புதியதொருவீடு இதற்குச் சிறந்த உதாரணம்.

கலாநிதி சி மௌனகுருவின் ஆடல்திறமையும், கூத்துப் புலமையும் குழந்தை ம. சண்முகலிங்கத்தின் உலக அரங்க அறிவு நுட்பங்களும் ஒருங்கிணைந்து புதிய மெருகில் புதியதொருவீடு யாழ். பல்கலைக்கழகக் கைலாசபதி அரங்கிலே இன்று மேடை ஏறுகின்றது

புதியதொருவீடு முழுநீளப் பாநாடகமாக அமைந்த போதிலும் இடையிடையே பார்வையாளனை ஈர்த்தெடுக்கும் வகையில் நறுக்கான ''வாசகப்பா''ச் சாயலையும் கொண்டுள்ளது. அரங்குக்கு ஏற்றவகையிலே அரங்கச்சுவடி ஆக்கும் திறன்மிக்கவர் மஹாகவி என்பதையே அவர் பாநாடகங்கள் காட்டி நிற்கின்றன. இந்த வகையிலே புதியதொரு வீடுகுறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தது. காலங்கடந்தும் மேடையேறும் தகுதி ஒன்றே அதன் சிறப்பைப் புலப்படுத்தப் போதுமானது.

புதியதொரு வீடு முன்னர் ஈழத்தின் பல பாகங்கங்களிலும் மேடையேறியுள்ளது. மஹாகவியின் நாடகங்களை நெறியாளுகை செய்த தாசிசியஸ் வடமராட்சி கிழக்கிலே புகழ்பெற்று விளங்கிய மரபு வழி அண்ணாவி ஒருவரின் மகன். மரபுவழி கூத்து மரபுகளையும் நாடக புதிய நாடக மரபுகளையும் நன்கறிந்த தாசிசியசின் கைவண்ணத்தால் மஹாகவியின் நாடகங்கள் துலங்கின.

1978-ம்ஆண்டு யாழ்வளாக இந்துமன்றம், கலாநிதி சி.

எஸ். சிவலிங்கராஜா
யாழ். பல்கலைக்கழகம்

மௌனகுருவின் நெறியாளுகையில் புதியதொரு வீடு நாடகத்தை மேடையேற்றியது. தொடர்ந்து யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பாகங்களிலும் இந்நாடகம் 14 தடவைகளுக்குமேல் மேடையேறியது. மஹாகவியின்புதியதொரு வீடு யாழ் வளாகத்தில் மேடை ஏறுவதற்கு முன்னர் யாழ் வளாக மாணவர்களாலும் விரிவுரையாளர்களாலும் சிங்கள, தமிழ் நாடகங்கள் மேடையேறியுள்ளன. மஹாகவியின் புதியதொரு வீடு இராமநாதன் மண்டபத்திலே முதலில் மேடையேறியது. பார்வையாளர்களை உள்ளடக்க முடியாமையினால் இரண்டொரு நாள்களின் பின் வளாக முன்றலில் உள்ள விளையாட்டரங்கிலே மேடையேற்றப்பட்டது புத்தாக்க நாடக இரசனை மரபை யாழ்ப்பாணத்திற்கு அறிமுகம் செய்த பெருமை அன்று மேடையேறிய புதியதொரு வீடு நாடகத்தையே சாரும்.

இன்று புகழ்பெற்று விளங்கும் நெறியாளரில் ஒருவரான திரு. எஸ். சிதம்பரநாதன் (மண் சுமந்த மேனியர்) மௌனகுருவினால் புதிய தொருவீடு நாடகத்தின் மூலம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டவராவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வளாகமாக அமைந்திருந்த காலத்திலிருந்தே ஒரு நாடக பாரம்பரியத்தை வளர்த்தெடுக்கும் பணியிலே ஈடுபட்டுள்ளது வளாகத்தின் தயாரிப்புக்களான பல நாடகங்கள்யாழ். வீரசிங்கம் மண்டபத்திலேயே மேடையேறின.

1979-ம் ஆண்டு யாழ் வளாகத் திறந்தவெளியிலே (விளையாட்டரங்கு) நடைபெற்ற போர்க்களம் என்ற கூத்து விதந்து குறிப்பிடத்தக்கது. மௌனகுருவின் நெறியாளுகையில் போர்க்களம் மேடையேறியது. இப்போர்க்களம்என்னும்கூத்திலே சி. மௌனகுரு, பேராசிரியர் அ. சண்முகதாஸ், ஆ. சிவநேசச்செல்வன் எட்வேட் பீரிஸ், சூசை ஆனந்தன், பேரின்பராஜா, எஸ். சிவலிங்கராஜா முதலியோர் நடித்தனர்.

கலாநிதி மௌனகுருவின் நெறியாள்கையிற் பயிற்சி பெற்றஎட்வேட்பீரிஸ்1979-ம் ஆண்டு மன்னாரிற் புதியதொரு வீடு நாடகத்தைத் தயாரித்தளித்தார். மன்னார் மாவட்டத்தில் நிகழ்ந்த நாடகப் போட்டியில் புதியதொரு வீடு முதற் பரிசைப் பெற்றது.

1980-ம் ஆண்டு இளவாலையில் P. A. C. ஆனந்தராஜாவின் நெறியாள்கையில் புதியதொருவீடு மேடையேறியது.

1983-ம் ஆண்டு நாடக அரங்கக் கல்லூரிக்காக திரு: L: றேமனின் நெறியாள்கையில் புதியதொருவீடு மேடையேறியது.

இன்று யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறையினரின் ஆதரவிலே கலாநிதி சி மௌனகுரு, குழந்தை ம. சண்முகலிங்கம் ஆகியோரின் நெறியாள்கையில் மேடையேறுகின்றது:

நாடகமும் அரங்கியலும் ஒரு பாடமாக இருக்கும் இந்த வேளையிலே நுண்கலைத் துறையினர் மகாகவியின் புதியதொருவீடு நாடகத்தினைத் தயாரித்தளிப்பது போற்றுதற்குரியது. எமது பண்பாட்டுப் பாரம்பரியங்களின் உள்ளுரத்தை இன்றைய தலைமுறையினர் அறியப் புதியதொரு வீடுபோன்ற நாடகங்கள் மேடையேற்றப்படவேண்டும் கைலாசபதி அரங்கோடுமட்டும் இந் நாடகம் நின்றுவிடாது ஈழத்தின் பல பாகங்களிலும் மேடையேற்றப்படவேண்டும் யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறையினர் தொடர்ந்து மஹாகவியின் கோடை முதலிய நாடகங்களையும் மேடையேற்றவேண்டும்.

# இலக்கிய மாணவருக்கு புதிய பரிமாணங்களை தரும்

**ஆ. சபாரத்தினம்**

ஈழத்து இரசிகமணி கனக செந்திநாதன் தமதுஇலக்கியக் கல்வி பற்றிக் குறிப்பிடும் போது,

'எங்கள் குழுவின் அதிர்ஷ்டம் அவ்வாண்டு திருநெல்வேலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் தமிழ்மொழி விரிவுரைகளைப் பண்டிதமணியும் தமிழிலக்கிய விரிவுரைகளை உப அதிபர் கைலாசபதியும் நிகழ்த்தும் வாய்ப்பு ஏற்பட்டது. ஒரு கணித- தருக்க மேதை எவ்வாறு இலக்கியத்தை நோக்குவார், விமர்சிப்பார் என்பதைக் கண்ணாரக் கண்டு பூரண பயன் பெற்றோம்' என்றார். தருக்க, மெய்யியல் அறிஞர் கிருஷ்ணராஜா, விமர்சன மெய்யியல் பற்றி எழுதிய சிறு கைந்நூல், 'கடுகைத்துளைத் தேழ்' என்ற விமர்சனக் குறளுக்கு எடுத்துக்காட்டாய் அமைந்துள்ளது, மெய்யியலர், 'இருட்டறையில் இல்லாததொரு கரும் பூனையைத் தேடுவோர்' என்றும், யதார்த்த நிலைக்குப் பயன்படாத சிந்தனை உலகிற் சிறகடித்துப் பறப்பவர்கள் என்றும் குறை கூறுவோர் இன்றைய பயன்பாட்டு வாதிகளிற் பலர் உளர். இவ்விமர்சகர் ஓர் ஆய்வு வட்டத்தில், இந்நூலாசிரியரின் பேச்சுக்குப் பின் 'பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் தம் தந்தக் கோபுரங்களை விட்டு இறங்கிவர வேண்டும்' எனச் சற்றுச் சூடாகவே குறிப்புரை கூறியதும்உண்டு. அன்றுதான் அவரது விமர்சன மெய்யியல்' கைக்கு வந்தது. அப்பொழுது அதை வாசித்திராத படியாலேயே அச்சுடு சொல் வந்தது போலும் இப்பொழுது நூலை வாசித்தபின் - கருத்தை மாற்றிக் கொள்ள வேண்டியுள்ளது.

**நூலகம்**

நூல்: விமரிசன மெய்யியல்

ஆசிரியர்: கலாநிதி சோ. கிருஷ்ணராஜா

வெளியீடு: நான், (யாழ்ப்பாணம், 1988)

விலை: 15/-

76 பக்கம் கொண்ட இந்நூலில் 12பக்க முன்னுரையும், 'இலக்கிய விமர்சனமும் சமூகமும்' 'விமர்சனமும்இலக்கியக் கல்வியும்''இலக்கியமும் விமர்சனமும்'

'விமர்சனமும்அழகியலும்', 'விமர்சனமும் பொருள் கொள்ளியலும் 'விமர்சனமும் அடிப்படை உண்மையியலும்' என்ற தலைப்புக்கள் உள்ள முற்பகுதி நூலின் பாதி இடத்தின் பொருளடக்கம்.பிற்பகுதி விமர்சன முறையியல்' பற்றியது: முறையியல் விமர்சன முறையியல், முறையியலும் மதிப்பிடலும்' என்ற மூன்று சிறு கட்டுரைகளும் 'முடிவுரைக்குப் பதிலாக' என்ற அநுபந்தம் I உம் 'மேற்கத்திய விமர்சன மெய்யியலைப் பூர்த்தி செய்கின்றன. 'கலையும் இரசனையும்' 'இந்தியக்கலை - சில குறிப்புக்கள்', 'இந்திய இரசனைக் கொள்கை' என்ற தலைப்புக்களில் மூன்று அநுபந்தங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. விரிவான அடிக்குறிப்புக்கள், இறுதி 5 பக்கங்களை அணி செய்கின்றன.

இத்துறையில் எழுதிவரும் சில இளம் அறிஞர்கள் போலன்றி, இந்நூலாசிரியர் சிக்கலற்ற சிறு சிறு வாக்கியங்கள் மூலம், படிமுறைக் கிரமமான கணித விளக்கம் போன்று, கடினமான விடயத்தை இலகுபடுத்தி எழுதியுள்ள ஆற்றல் வாசகர்களை வியக்கச்செய்கிறது. முறையியலில் ஆய்வுநடத்திய பயிற்சியே இவருடைய பலமிக்க கருவிபோலும்.

யாழ்ப்பாணத்தின் சென்ற தலைமுறையின் நல்லதொரு மெய்யியலறிஞர் கலாநிதி வ. பொன்னையா கூறுவார்:

''தமிழனிடம் இலக்கிய ஆய்வுக்கருவிகள் என்ன இருக்கின்றன; தொல்காப்பியத்தில இரண்டு இயல்களும், நாலைந்து அலங்கார சாஸ்திர மொழிபெயர்ப்புக்களும் மட்டும்தானே. வடமொழியில் 75க்கு மேற்பட்ட அணியிலக்கண நூல்கள் உளவே.''

''மேலைநாட்டில் அரிஸ்டோட்டில் முதல் இன்றுவரை பரந்து விரிந்து கிடக்கும்நூல்களோ அனந்தம். அவற்றையெல்லாம் கடைந்து அவற்றினூடாக ஓடும் இழைகளைச் சிக்கின்றி அவிழ்த்தெடுத்து வரன்முறைப்படுத்தி ஒருமெய்யியல் உருவில் வாசகர்களுக்கு வழங்குவது மகா சிரமமான காரியம். அதற்கு ஆரம்ப முயற்சியாக இந் நூலையாத்துத்தந்த கிருஷ்ணராஜா அவர்களுக்கு இலக்கியகர்த்தாக்கள், விமர்சகர்கள், சுவைஞர்கள், சிந்தனையாளர் அனைவரும் பெரிதும் கடமைப்பட்டுள்ளனர். அவர் இத்துறையில் விரிந்த நூல் எழுதித்தர வேண்டும் என அறிஞர் உலகு ஆவலுடன் எதிர்பார்க்கிறது.

இந்நூலிலிருந்து நினைவிலிருத்தவேண்டிய சிலகருத்துக்களைக் கோவை செய்து குறிப்புக்களுடன் தருகிறோம்:

''கலை இலக்கியம் பற்றிய சமூகரீதியானதும், ஆன்மீக ரீதியானதுமான கருத்துருவாக்கத்தின் வளர்ச்சி'' (பக்கம்.1)

நவீனத்துவம், முற்போக்கு என்ற பெயரால் முன்னையதை மட்டும், தனிமைப்படுத்தி வற்புறுத்துவோர் கவனிக்குக 'ஆன்மீக ரீதியான' என்ற சொற்றொடர் சாதாரணமாகக் கீழ்நட்டவர் உபயோகிக்கும் உயிர்-கடவுட் கோட்பாட்டைக் குறிக்காவிட்டாலும்கூட இதனைச் சமூகரீதியுடன் இணைத்துப் பேசுவது வரவேற்கத்தக்கது.

''அறிவு, இலக்கியம் இரண்டையும் உயர்த்துகிறது ஸ்தூலமான வாழ்க்கைப் பிரச்சினைகளைச் சுவைஞனுக்கு உணர்த்துகிறது'' பக்கம்.2

ஒரு குறிப்பிட்ட மக்கட் கூட்டத்தின் சூழல் பற்றிய அறிவை மட்டும் அளிப்பதுடன் இலக்கியம் நின்றுவிடலாம். இலட்சியத்தை முன்வைப்பதால் சுவைஞன் நிஜ வாழ்க்கைக்கு முகம் கொடுக்கும்போது தோல்வியையே காண்கின்றான் என்று குறை கூறும் விமர்சகர்களுக்கு எச்சரிக்கை.

''சிறந்த விமர்சகர்கள் சில காலகட்டங்களில் கலை- இலக்கியப் படைப்பாளிகளின் வழிகாட்டிகளாயும் இருந்திருப்பதை இலக்கிய வரலாற்று மாணவர் நன்குணர்வர்''

பண்டிதமணியவர்கள், இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலின் என்பது நன்னூலுக்குப் பொருத்தமாயிருக்கலாம். தொல்காப்பியம் போன்றவை அங்ஙனம் அன்று; அவைநூல்; அவை வடித்த நெறிகளை இலக்கியப் படைப்பாளிகள் வழிகாட்டிகளாகக் கொண்டனர்'' என்று குறிப்பிடுவது இங்கு சிந்திக்கத்தக்கது.

''முன் உதாரணமாக விமர்சனம் தன் காலத்திய ஆன்மிக உலகின் வளத்துடன் கூடிய முனைப்பான சிந்தனையாக இருக்கும்''

''கருத்துக்களைத் தெளிவுபடுத்த முயல்வதும் விமர்சனத்தின் நோக்கங்களில் ஒன்று.''

மறைந்த நம் இளம் எழுத்தாளர் ஒருவரது நாவல் விமர்சனக் கூட்டம் ஓர் இலக்கிய வட்டத்தில் நிகழ்ந்த போது, விமர்சகர் ஒருவர்,

''இதன் மூலம் சமூகப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண ஹிம்சை முறை ஒன்றுதான் உண்டு என்று ஆசிரியர் சொல்லமுனைகிறாரா?''

என்ற வினாவை எழுப்பி, ஜெயகாந்தன், அறத்தை நாராயணன் ஆகியோரின் இருசிறு நாவல்களையும், இதனையும் ஒப்பிட்டுக் கருத்துத் தெளிவின்மையைச் சுட்டிக் காட்டினார். தெளிவான தீர்வைக் காட்டத் தெளிவான சிந்தனைவேண்டும். படைப்பிலக்கியத்தில் தெளிவில்லை எனில் படைப்போனது சிந்தனை வெறுமையையே அதுகாட்டும்.

''விமர்சகன் தனக்கேற்றதொரு உலகநோக்கும் கருத்துநிலைச்சிந்தனையும் உடையவனாயிருக்கவேண்டும். இவ்விரண்டும் கலைஇலக்கியம் பற்றிய புறவயமான மதிப்பீட்டைச் செய்யவும், மானுடத்தின் பிரச்சினைகளை விமர்சனத்துக்கு எடுத்துக்கொண்ட படைப்பு எவ்வாறு தீர்க்க முயலுகிறது என்பதை எடுத்துக் காட்டவும் உதவுகிறது.''

தீர்வு கூறுவது சமூகவிஞ்ஞானியின் வேலை; படைப்பாளியின் பணியன்று என்று தட்டிக்கழிப்பது இலக்கியப் போலிகளின் வாதம்.

'விமர்சனத்தில் வரலாற்று நியதிவாதத்தின் இன்றியமையா இலக்கியப் பங்கை வற்புறுத்துவதுடன் இலக்கிய விமர்சனம் இலக்கிய வரலாற்றின் அடிப்படையில் நிகழ்த்தப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் (மக்லன் பேர்க்) எடுத்துக்காட்டுகிறார்' (பக். 4)

திருவள்ளுவர் தன் நிலப்பிரபுத்துவச் சூழலைக்கடக்க முடியாமல் அதன் கட்டுப்பாடுகளுக்கு அடங்கி அறக்கோட்பாடுகளை இலக்கியமாக்கினார்' என்று முற்போக்கு விமர்சகர்களும், 'பரத்தையிற் பிரிவு முதலியவை பற்றிப் பேசும் பத்தாம்பசலிச் சாதாரண மனிதர்; ஆண் 'அதிகாரச் சமூகத்தின் வாரிசு' என்று தற்காலப் பெண்நிலைவாதிகளும் பேசுவதை மக்லன் பேர்க்கின் கருத்துத் தளத்தில் நின்று நோக்குக. அதுபோலவே நாவலர் தம் நூல்களில் சாதியத்தைக் கண்டிக்கவில்லை; இராமநாதன் அடிமட்டத்தார்களுக்குக் கல்வி அவசியம் எனத் தம் பேச்சுக்களிலும் எழுத்துக்களிலும்வற்புறுத்தவில்லை என்று விமர்சிப்பதும் சரியா? என எம் விமர்சகர்கள் சிந்திக்குக.

'கலை இலக்கியங்களின் கருப்பொருள் வரலாறு சார்ந்ததாய் இருப்பதால் வரலாற்றுப் பிரக்ஞை விமர்சனத்திற்கான முன் நிபந்தனையாக இருக்கிறது. (பக்.4)

சரத்சந்திரரின் 'பாரதி'யில் புரட்சிவாதம் வருகிறதே; அகிலனின் நாவல்களில் காந்திய இலட்சியம் அளவுக்கு மீறிப் புகுத்தப்பட்டிருக்கிறதே என்று குறை கூறுவோர் அவர்கள் தம் படைப்பிலக்கியத்தின் கருப்பொருளாகத் தேர்ந்தெடுத்த விடயங்கள் வரலாறு சார்ந்ததாய் இருப்பதை உணர்வு பூர்வமாகத் தவிர்த்திருக்க வேண்டும் என்று வற்புறுத்துவது சரியா? அவரது (திபோதா) கருத்துப்படி விமர்சனம் தற்சார்புடையதொரு கலையாகும்; ஆனால் விஞ்ஞான ரீதியான இலக்கிய ஆய்வோ தற்சார்பற்றது' (பக்.4)

பல்கலைக்கழக மட்டத்தில் ('ரியூட்டரி' மூலம் வரும்) தமிழ் இலக்கிய மாணவர்களுக்கு இவ்வேறுபாட்டை விளக்காது; மாதிரிகையாக விஞ்ஞான ரீதியான பகுப்பாய்வு ஒன்றை ஒரு இலக்கியப் படைப்பில் செய்து காட்டாது 'இக்கவிதையின் கட்டமைப்பை ஆராய்க' என்று எடுத்த எடுப்பிலேயே வீட்டு வேலை கொடுக்கும் பேராசிரியர்கள் சற்றே கீழிறங்கி வருவார்களா?

விமர்சனம் பரந்த வாசகர் வட்டத்தைத் தன் நோக்கெல்லையாகக் கொண்டிருப்பதாலே தான் அது கலை இலக்கியம் பற்றிய அபிப்பிராயங்களையும் மதிப்பீட்டையும் மக்கள் மத்தியில் உருவாக்குவதான சமூகப் பணியை நிறைவேற்றுகிறது. (பக் 5)

அபிப்பிராயங்கள், மதிப்பீடுகளை உருவாக்குவது விமர்சகனது தர்மம். அவன் அச்சமூகப்பணியைச் செய்யாது, ''இவ்வெழுத்தாளர் நம் கோஷ்டி; அக்கலைஞர் புறம்பு என்று பார்த்து, சமன் செய்து சீர் தூக்கும்கோல் நிலையினின்றும் விலகுவானேல் அவன் சமூகத் துரோகியாவான்

''கலை இலக்கியங்களைப் படைப்பாளியின் வரலாறு பற்றிய ஆய்விலிருந்து நோக்கும் சுயசரிதை விமர்சகனே நல்லதொரு படைப்பு கலைஞனின் வாழ்க்கையுடன் தெளிவான தொடர்புகளைக் கொண்டிருக்கும் என்பான்'' (பக் 8)

உலகப் பெரு நாவலாசிரியர் ரோல்ஸ்ரோய் தமது உறவினருள் கண்ட நிகழ்வை அது தன்னைப் பாதித்த உணர்வை ''அன்னகரீனா'' வில் வெளிப்படுத்துகிறார்.

''உளப்பகுப்பாய் வாளனன விமர்சகனது எண்ணப்படி ஒரு கலைஞனது படைப்பு மூலம் அவனது உள இயல்புகளை அறிந்து கொள்ளலாம். தரமான விமர்சனம் வெளிப்பாட்டுவாதிகளின் நோக்கில் படைப்பாளியின் உள்ளார்ந்த உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் ஒழுக்கவியலாளனன விமர்சகன் கலை, இலக்கியங்கள் சுவைஞருக்கு அற ஒழுக்கங்களைப் போதித்தல் வேண்டும் என வாதிடுவான்''

மரணம் பற்றி, மனைவியை அபகரித்தவனையும் மன்னிக்கும் கிறிஸ்துவ 'தருமக் கொடைப் பண்பு' (Charity) பற்றி மேற்படி நாவலில் ரோல்ஸ்ரோய் உள்ளார்ந்த உணர்ச்சிகளை வெளிப்படுத்தும்விதம் பற்றி ஒழுக்கவியலாளன் கூற்றுக்கு மறுதலையாக E.V லூக்கஸ்

இந்த இடத்தில் ரோல்ஸ்ரோயின் இலக்கிய ஊற்று வற்றிவிட்டது' என்று குறிபிடுவதைச் சுட்டி, பண்டிதமணி சி.க;

இங்குதான் கீழ் நாட்டவர் கருத்துப் படி இலக்கிய ஊற்று ஆரம்பிக்கிறது எனக் குறிப்பிடும் சிறப்பு ஆகிய வற்றின் விரிவை, 'பண்டிதமணி நினைவு மலர்(1989)'(பக் 179-189 ல் காண்க.

'பஸ்லர் கலை இலக்கிய விமர்சனத்தில் மனிதனைப் பற்றியதும், சமூகம் பற்றியதுமான மெய்யியல் கருத்துக்களை இணைப்பது அவசியம் என்றும் அவ்வாறில்லாவிடில் விமர்சனம் உண்மையிலிருந்தும் அந்நியப்பட்டுவிடும் என்றும் கூறுகிறார்.' (பக்.9-10)

வெங்கட்சாமிநாதன் போன்றோர் திருக்குறளை இலக்கியமென்றும் கூறிக்கொள்ளும் தமிழர் இன்னும் இருக்கிறார்களே என்று விரக்தியுறுவதை முரண்நோக்கில் (Contrast) வைத்துக் காண்க.

முன்னுரையின் இறுதிப்பந்தி மிகமுக்கியமானது (பக். 12)

''விமர்சனமானது கலைஞனது படைப்பாளுமையைச்செம்மைபடுத்துவதுடன் சுயகட்டுப்பாடுடைய படைப்பாற்றலைப் பெறுவதற்கு உதவி செய்கின்றது. கலை இலக்கியங்களின் பூரணத்துவத்துக்குக் கலைஞனின் சுயகட்டுப்பாடு அவசியமானது. உள்ளடக்கம் பற்றிய விமர்சனம் கலைஞனது உலக நோக்கை வளப்படுத்த உதவும்.''(பக்-16)

ஆங்கிலக் கவி கீற்ஸ் விமர்சகர்களின் பேனாவால் சாக அடிக்கப்பட்டான் என்று சொன்னாலும், விமர்சனத்தின் கடுமை படைபாளிக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்து, சுயகட்டுப்பாட்டைப் பலப்படுத்தி,அவனது ஆளுமைக்கு மெருகூட்டும் கபிரியேல் மாசல் தமது நாடகங்கள் பாரிஸ் நுண் விமர்சகர்களின் தாக்குதல்களுக்கு ஆளானபோது, அத்தோல்வி அநுபவத்தால் மனந்தளராமல், சிறிது காலத்தின் பின் மீண்டும் அதே இலக்கிய வடிவத்தின் மூலம், தாம், தத்துவக்குறிப்புகள் மூலம் தெளிவாக வெளியிட முடியாத, மனிதன் பற்றிய, சமூகம் பற்றிய கருத்துக்களை மேலும் தெளிவாக்கிப் பரப்பினார் நவீன தென்னிந்திய வர்த்தக, இலக்யகிப் படைப்பாளிகள் 'உள்ளடக்கம் பற்றி விமர்சிக்கத்தேவையில்லை; தம் படைப்பு சாமானிய மனிதனுக்குத் தற்காலிக மகிழ்ச்சியைக், கிளுகிளுப்பை ஏற்படுத்தினாலும் போதும்; தம் நடை அவர்களுக்குப் பிடித்திருந்தால் திருப்தி ''என்றெல்லாம் விவாதிப்பது இக்கருத்தின் பின்னணியில்ஆராயத்தக்கது.

இலக்கிய கொள்கையும், வரலாறும் வேறுபடும் வகைகளை வரிசைப்படுத்தும் பகுதி (பக்.19 உயர்தரவகுப்புக்களிற் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாகச் செல்வநாயகத்தின் இலக்கிய வரலாற்றைத் திணித்து வரும் ஆசிரியர்களதும், வருங்கால இலக்கிய பாடத்திட்டம் வகுக்கும் பொறுப்பில் இருப்போரதும் கவனத்துக்குரியது.

''இலக்கியக் கல்வி விமர்சனமும் (பக்-21) பற்றிய குறிப்புக்கள் முக்கியமானவை. முன்னையது விஞ்ஞான பூர்வமான சிந்தனையாக இருக்கும். பின்னையதில் கலையம்சம் கூடிய முனைப்புப் பெற்றிருக்கும்''

பி.ஸ்ரீயும். டி.கே.சியும் பண்டிதமணியும்முன்வைத்தகவிதாரசனையும் ஒரு பொருளோ? சமுகவியல் ரீதியான அமைப்பு (structuralism) அடிப்படைகளில் நாம் விஞ்ஞான பூர்வமாக இலக்கியத்தை ஆராய்கிறோம் என்றும் நவீனர்களின் போக்குக்கு எதிர்க்குரல் பல்கலைக்கழக மாணவர் மத்தியிலிருந்து இலக்கியத்தைச் சுவைக்க உதவுங்

14 ஆம் பக்கம் பார்க்க

# கவி அரங்கம்

## மனிதத் தேரின் சாரதி

அச்சந் தவிர்த்து வாழ்வுயரும்
அறிவைத் தந்த மேலோருள்
மெச்சத் தகுந்தோன் பாரதிதான்
மனிதத் தேரின் சாரதிதான்!

ஆள்மை உண்டு பெண்ணிற்கும்
அவளும் தெய்வப் பேறென்று
கேள்மை ஓங்கச் செய்திட்டான்
குறுக்கற் பண்பைக் கொய்திட்டான்!

இளைத்து ஓய்தல் இழிவென்று
இளைய நெஞ்சம் குடைந்திட்டான்
உழைத்து வாழ்தல் உயர்வென்று
உரிமைத் தென்பை வளர்த்திட்டான்!

ஈதற் பண்பில் உலகுய்ய
ஈடில் கவிகள் வடித்திட்டான்
காதற் கண்ணின் கவிதன்னில்
கோடி அறிவைப் புகுத்திட்டான்!

உலகை ஒற்றைக் குடைதன்னுள்
உருட்டி பிணக்கு இல்லாத
அழகாகச் செய்யும் வழி சொன்னான்
அதனைத் திணித்து நின்றானே!

ஊராம் எட்டய புரந்தன்னில்
ஊற்றாய் உதித்து பாரிதன்
பூராய் உண்மையின் ஒளியூட்டி
பாட்டாய் நிலைத்து வாழ்கின்றான்

மாவை வரோதயன்

## ஓர் நவீன பதிகம்

சந்தையினைக் கைப்பற்றிச் சத்தியத்தைக் கைவிட்டுச்
சிந்தை கலக்கும் தரகனே!— நொந்தோர்பால்
ஈவிரக்கம் இன்றிச் சுரண்டிப் பறிக்கின்ற
பாவத்தை விட்டுப் பிழை!

கல்யாணச் சந்தையிலே காதகன் நீ உள்ளவரை
பொல்லாத சீதனப்பேய் போகாதே — கல்லானைக்
கற்றோனாய்க் காண்பித்து லட்சமாய்ச் சீதனங்கள்
பெற்றளித்தல் நீசெய் பிசகு

வேலையின்றி வீதிவழி வம்பளக்கும் வாலிபனுன்
லீலையினால் எஞ் 'சினியர்,' (?!) ஆய்விடுவான்-மூலையிலே
முள்ளிலா ரோஜாவாய்ப் புன்னகைக்கும் முத்துக்குக்
கள்ளம்செய் நீயே(ா) யமன்

சாதகனின் சாதகத்தைச் சாதகமாய் மாற்றுகிற
பாதகனே! நீயும் பிரமனோ? தீதுசெய்யும்
எக்கிரக மானாலும் உன்னையொத்த துர்க்கிரகம்
இப்புவியில் உணடோ நீ சொல்

நல்ல பொருள் வாங்க நாடி நாம் சந்தைக்குச்
செல்லும் பொழுது வழிமறிப்பாய்—இல்லா
விலைபேசிப் பின் தூங்கி வீண்தொல்லை தந்து
அலைக்கிறியே! என்ன அறிவு?

விரும்பாத மக்களுக்கும் வில்லங்கம் செய்தே
துரும்பினையும் தூணாக்கி விற்பாய்—அரும்பினையும்
பூவாக்கிக் காயாய்க் கனியவைத்துக் காட்டுகிற
'யாவாரம்' யார் சொல்லினார்?

கட்டாத நாய்க்குலந்தான் கண்டவரில் வாய்வைக்கும்
துட்டத் தனமுன்னில் தோன்றிடுதே—
விட்டொழிப்பாய்
துர்ப்புத்தி வேண்டாம் வியர்வை சிந்திச்சேர்ப்பையெனில்
நிற்குமே செல்வம் நிலைத்து

பாழும் நரகத்தும் பாவியுனைக் சேர்க்கார்காண்!
சூழும் கெடுதியுனைச் சுட்டெரிக்கும்! —வீழும்முன்
செய்த கொடுமையெலாம் சேர அநுபவிப்பாய்
உய்யும் வழியுனக்கு ஏது?

உன்பாவம் அண்ணே! ஒருநாளும் தீராது
பின்னாலும் பிள்ளைகளைப் பாதிக்கும்—அந்நாளை
இப்போதே எண்ணிக்கொள் ஏற்ற வழிதேடு
தப்பாமற் தாக்கும் தவறு

ஐந்தறிவு மாக்களுளோ? ஆறறிவு மக்களுள்ளோ?
எந்த வகையிலுனைச் சேர்ப்பதெனச் —சிந்தித்தேன்
எங்குதான் சேர்த்தாலும் எவ்வினமும் ஏற்காது
அங்கெல்லாம் உன்னால் இழுக்கு

பா. மகாலிங்கசிவம்

# நிலா - திரைப்படக் கவிதைத்தோரணம்

கணேஷ் (க. கணேசலிங்கம்) பழுத்த பத்திரிகையாளர், பல்லாண்டுகள் அவர் உதவியாசிரியராகப் பணி புரிந்தது 'ஈழநாடு' இதழில். இப்போது பள்ளியாசிரியர்; பயிற்றுவது ஆங்கிலம், ஆனலென்ன பழைய பத்திரிகை உலகை மறக்காமல் அவர் தொடுத்துத் தந்த தோரணம் இது.

அன்று வந்ததும் இதே நிலா இன்று வந்து கொண்டிருப்பதும் அதே நிலா தான். ஆனால் இந்த நிலாவைப் பற்றித்தான் எத்தனை கற்பனைகள் இன்னமும் சுற்றிச் சுற்றிவந்து கொண்டிருக்கின்றன!

இந்தக் கவிஞர்களெல்லாம் இந்த நிலவுடன் அந்தரங்கமாகப் பேசி மகிழ்வதில்தான் எத்தனை சுகம் காண்கின்றார்கள்!

பேசுவது மட்டுமா? அதனுடன் விளையாடுவதும், செல்லமாகக் கோபித்துக் கொள்வதும் கூட அவர்களது வேலையாக இருக்கின்றது. அதுமட்டுமல்ல வெண்ணிலா பாடுவதாகவும் ஆடுவதாகவும் கற்பனை செய்து ஆனந்தமடைவதில் ஒரு தனிச்சுகம் காண்பார்கள்.

'வெண்ணிலா வானில் வரும் வேளையில் நான் விழித்திருந்தேன், எண்ணிலாக் கனவுகளில் எதை எதையோ நினைத்திருந்தேன்' என்கிறார் ஒரு கவிஞர்.

இப்படி வெண்ணிலாவை எதிர்பார்த்துக் காத்திருக்கும் கவிஞன் நிலாவிடம் கூறும் கதைகள் கொஞ்சநஞ்சமல்ல.

'நீ சொல்லாவிடில் யார் சொல்லுவார் நிலவே, நேரில் நடந்ததெல்லாம்...' தூதுக்கு அழைக்கும் நிலவிடம் 'நிலவே நீ சாட்சி மனநிம்மதி நாடும் உயிர்களுக்கெல்லாம் நிலவே நீ சாட்சி' என்கிறான்.

''அந்த நிலவைக் கேளது சொல்லும், இந்த மலரைக் கேளது சொல்லும் நாம் பழகிவந்த நாட்களை அது சொல்லும்'' என்று சாட்சிக்குக் கூப்பிடுவதும் இந்த நிலவைத்தான் தனக்கு மட்டும் தேடவில்லை வானமும் தேடிடுதாம், ''தேடிடுதே வானமிங்கே தேன் நிலவேநீ போனதெங்கே?'' என்று கேட்கிறான். 'வா வெண்ணிலா உன்னைத் தானே வானம் தேடுதே, மேலாடை மூடியே ஊர் கோலமாய் போவதேன் வா வெண்ணிலா' எனப் பொதுவான அழைப்பும் விடுக்கின்றான்.

''நிலவினை எங்கே காணோம், இந்த நேரத்திலே தனியாக ஆனோம்'' என்கிறான் ஒருவன், தங்க நிலாவே நீயில்லாமல் தனிமை தாளமுடியுமா?' என்று கேட்கிறான் மற்றவன்.

இப்படித் தேடும் நிலா வந்துவிட்டால் கவிஞனுக்கு எழும் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை...

''நிலவு வந்து வானத்தையே திருடிக்கொண்டது''

'நிலவின் ஒளியாலே நிலக்கடல் வீசும் அலையாலுமே எல்லாம் இன்பமயம்' தான் அவனுக்கு.

நிலவு ஒரு பெண்ணாகி உலவுகின்ற அழகோ' 'ஆடைகட்டி வந்தநிலவோ கண்ணில் மேடைகட்டி ஆடும் மயிலோ?' என வியப்பான். அது மட்டுமல்ல அந்த நிலா தனக்கருகில் வரவேண்டுமென்று விரும்பி அழைக்கிறான்.

''அமுதே பொழியும் நிலவே நீ அருகினில் வராததேனோ?'' என்று கோரிக்கை விடுக்கிறான். தனது கோரிக்கை நிறைவேறிவிட்டதாகவும் அவன் தனக்குள்ளேயே திருப்தி கொண்டு விடுவதுமுண்டு.

'வான மீதில் நீந்தியோடும் வெண்ணிலாவே-நீ
வந்ததேனோ ஜன்னலுக்குள் வெண்ணிலாவே!

என்று தனக்கு அருகில் வந்து விட்டதாக எண்ணிவிட்ட கவிஞன் அதனிடமே பாட்டுக் கேட்கிறான்-

'பாடுநிலாவே, தேன் கவிதை, பூமலர
உன் பாடலை நான் கேட்கிறேன்'

தமிழின் மீது தமக்குள்ள பற்றுதலை வெளிப்படுத்த கவிஞர்பாரதிதாசன்வெண்ணிலா பற்றிக் குறிப்பிட்டது பற்றியும் நாம் இங்கு மறந்து விட முடியாது-

'வெண்ணிலாவும் வானும் போல, வீரனும் போர் வாளும் போல, கண்ணும் ஒளியும் போல எனது கன்னல் தமிழும் நானும் அல்லவோ என்கிறார் அவர்.

'நிலவும் மலரும்பாடுது,
என் நினைவில் தென்றல் வீசுது'

என்கிறார் வேறொரு கவிஞர், வான்வெளியில் காவியம் பாடும் இந்த வட்டநிலா பாடுவது மட்டுமா ஆடவும் செய்கிறது சிலருக்கு;

'பனிவிழும் பருவநிலா
பரதம் ஆடுதே'

சிலையோ இன்பக் கலையோ!' என தனது வியப்பை வெளிப்படுத்துகின்றான் ஒரு கவிஞன்.

'நீலவான ஓடையில் நீந்துகின்ற' இந்த வெண்ணிலா பலருக்கு வெளிச்சம் தந்து வாழ்வுக்குத் துணை புரிகின்றது-

'வெள்ளிநிலவே விளக்காய் எரியும்
கடல்தான் எங்கள் வீடு'

என்ற கவிஞனின் வார்த்தைகள் இதனை நமக்கு நன்கு புலனாக்குகின்றதல்லவா!

'வெள்ளிநிலா முற்றத்திலே
விளக்கெரிய விளக்கெரிய
உள்ளமெனும் தாமரையில்
உனையெடுத்துக்கொண்டு
வந்தேன் கொண்டு வந்தேன்'

என்பது மற்றவருடைய உள்ள வெளிப்பாடு. ஒளி விளக்காய் எரியும் வெண்ணிலா முகிலோடு விளையாடுவதாகவும் கவிஞன் கற்பனை செய்கின்றான்.

'விண்ணோடும் முகிலோடும்
விளையாடும் வெண்ணிலவே
கண்ணோடு கொஞ்சும் கலையழகே'

என்கிறார் ஒருவர்.

'நிலவோடு வான்முகில் விளையாடுதே
அந்த நிலை கண்டு எனதுள்ளம்
துணைதேடுதே என்கிறார்

மற்றவர்.

'சிந்துநதியின் மிசைநிலவினிலே
சேர நம் நாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத்தெலுங்கினில் பாட்டிசைத்தே
தோணிகளோட்டி விளையாடி வருவோம்,

என்ற பாரதி, பராசக்தியிடம் காணி நிலம் வேண்டும் என்று கேட்டபோது கூட இந்த நிலவை மறந்து விடவில்லை.

'நல்ல முத்துச் சுடர் போலே
நிலாவொளி முன்பு
வர வேண்டும்' என்றார்.

''என் அருமைக்காதலிக்கு வெண்ணிலவே
நீஇளையவளாமூத்தவளா வெண்ணிலாவே?'

என வேடிக்கையாகக் கேட்பவருமுண்டு.

''பிரேமை வெண்ணிலா
ஜோதி வீச என்னுள்ளம்
பரவசமாய் என்னை மறந்தேன்' என்கிறாள் ஒருத்தி

காதல்நிலாவினில் இன்பக் காதல் ரசித்துக் கொண்டிருப்பவர்கள் 'கடல் நிலவாய் காட்சியிலே கலந்து நின்றோம் நேர்மையாய்'' எனக்கூறிக் கொள்வதுண்டு

''நேற்று நம்மை கண்ட நிலா
நெஞ்சுருகிச் சென்ற நிலா
இனி வாழ்த்துகள் சொல்லுமே' மனம் தன்னைக் கிள்ளுமே

என்பது அவர்களது விருப்பமோ?

''நிலவே என்னிடம் நெருங்காதே-உன்னை நினைக்கும் நிலையிலும் நானில்லை''

இவ்விதம் ஒருவன் கோபித்துக் கொள்ள மற்றவன்-

நிலவுக்கு என்மேல் என்னடி கோபம் நெருப்பாய் சுடுகிறது இந்த மலருக்கு என்மேல் என்னடி கோபம் முள்ளாய் குத்துறது?'' எனக் கேட்கிறான்.

பலருடன் இப்படி வேடிக்கையாய் விளையாடும் இந்த நிலாவைக் காட்டி தாயொருத்தி தன்சேய்க்கு சோற்றை ஊட்டும் விதத்தை பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் வெகு அழகாகவே காட்டுகிறார்.

''எட்டி எட்டி வட்ட நிலா
உன்னைப்பார்க்குது உன் எச்சில்
பட்ட சோத்தை அது தனக்குக்
கேட்குது கஷ்டமாக சீக்கிரம் நீ
சாப்பிடு அம்மா—அந்த
சந்திரனை விளையாடக்
கூப்பிடு அம்மா''

என்கிறார் அவர்

புத்தம் புதுமலராய் குறுநகை புரியும் வெண்ணிலவு இப்படி எல்லோர் மனதிலும் இடம்பிடித்து விட்டதால் தானோ கவிஞர் கண்ணதாசன் 'ஓராயிரம் நிலவே வா' என்றார்.

வானத்திலேறி மனிதன் சந்திரமண்டல வாசலைத் தொட்டுவிட்டாலும் உள்ளத்தால் இந்த அழகு நிலவுடன் அந்தரங்கக் கதை பேசித் தமை மறந்து மகிழ்ந்து கொண்டிருப்பவர்கள் இன்னும் இருந்து கொண்டேயிருப்பார்கள் இதில் கவிஞர்கள் முன்வரிசையில் அமர்வார்கள் என்பதில் சந்தே

13ஆம் பக்கம் பார்க்க

# எழுத்துச் சீர்திருத்தம்

# முரண்பாடுகளின் அறுவடைகள்

எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

[திருக்குறள் - 355]

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

[திருக்குறள் - 433]

பண்டிதர் வீ. பரந்தாமன்

1. ●

(முரசொலி வாரமலர் 1989-09-03 'தொல்காப்பியர் சிந்தனைகளும் சீராக்க முயற்சிகளும்' - கட்டுரை)

சொக்கன்

●

சொக்கன்

இவ்விடத்திலே தமிழ் எழுத்துக்கள் தோன்றிய காலந் தொட்டே மாருத வடிவினவாகவே நிலவி வந்தனவா என்ற கேள்வி எழுகின்றது. இக்கேள்விக்கு விடை காண நாம் தமிழ்ச் சாசனவியலையும் பழந்தமிழ் இலக்கணங்களையுமே ஆதாரமாகக் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகின்றது. முதலிலே சாசனவியலை நோக்குவோம்.'

(தமிழ் எழுத்துக்களில் சீர்திருத்தம்' - முதற் கட்டுரை. சஞ்சீவி - சஞ்சிகை 12-08-1989)

பண்டிதர் வீ. பரந்தாமன்

2. 'வரிவடிவ எழுத்துக்களைப் பற்றித் தொல்காப்பியர் பெரிதும் பேசவில்லை. அதற்குக் காரணம் அவ்வரிவடிவம், முன்னோர் எழுதியவரன்முறை வழுவாது வழங்கி வந்தமை போலும்'

(ஷ கட்டுரை பந்தி 6)

'ஆயினும் தம்காலத்துச் சிறு மாற்றம் பெற்று வழங்கிய எழுத்துக்களின்வரிவடிவத்தை ஆங்காங்கே சுட்டிச் செல்கிருர்.'

(ஷ பந்தியில் அடுத்து வரும் வாக்கியம்)

சொக்கன்

'எழுத்துச் சீர்திருத்தத்தை வலியுறுத்துவோர் சில எழுத்துக்களின் வரிவடிவில் சிற்சில மாற்றம் வேண்டும் என்கின்றனரேயன்றி எல்லாவற்றையும் தலைகீழாக்கி விட அவர்கள் முனையவில்லை என்பதை நாம் மறந்து விடலாகாது'

(ஷ. கட்டுரை-10ஆம் பந்தி)

பண்டிதர் வீ பரந்தாமன்

3. எழுத்தெளிமைக்காகச் சீர்திருத்தம் வேண்டுவோரிடம் வினவ விரும்புகிருேம். அந் நோக்கிலேயே கண்டு பிடிக்கப்பட்ட புதிய முறை (short-hand) ஒன்று இருப்பதை இவர் அறியாரோ? அம்முறையையே குழந்தைகட்கும் கற்பித்து விடல் வேண்டுமென்பாரோ?

(ஷ பந்தி - 14)

பண்டிதர் வீ. பரந்தாமன்

4. 'எழுத்துக்களில் திடீரெனச் செயற்கையாக மாற்றம் செய்து விடுவதால் புதிதாகப் பயிலும் சிறுவர்க்கு இடர் ஏற்படாது என்பது உண்மையே.'

(ஷ பந்தி - 13)

சொக்கன்

'படிப்பவர்களுக்கும் எழுதுபவர்களுக்கும் எகரத்திற்கான கொம்புக் குறியீட்டை எழுத்துக்களுக்கு முன்னுல் சேர்ப்பதற்குப் பதிலாகப் பின்னுல் சேர்த்து கெ, என்பதற்குப் பதில் கெ (க்+எ) என்றெழுதுவதுகூட இயற்கை நெறியை ஒட்டிய சீர்திருத்தமேயாகக் கூடும் என்று எண்ணுகிருேம்.'

(சஞ்சீவி சஞ்சிகையில் இரண்டாவது கட்டுரையில் முதற் பந்தி பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையின் கூற்று)

பண்டிதர் வீ. பரந்தாமன்

5. சீர்திருத்தம் வேண்டுவோர் குறிப்பிடுமுறையில் திருத்தம் செய்வதால் தட்டச்சுப்பொறியில் எழுதும் முயற்சியில் சிக்கனம் ஏற்படாமையும்

(ஷ பந்தி - 15)

சொக்கன்

ஷ தொடரில் மூன்ருவது கட்டுரையில் கலாநிதி. திருவாட்டி சாலினி இளந்திரையன் அவர்கள் காட்டியுள்ள 'தட்டெழுதி விசைப்பலகை' இதற்கு விடைபகரும்.

பண்டிதர் வீ. பரந்தாமன்

6. ஒரொருகால் பொறியில் எழுதிவிட்ட எழுத்தை அப்பொறி மனித முயற்சி வேண்டாதே தனது பொறியியல் ஆற்றலால் (எந்திரசத்தி) தானே எழுதி (பதித்து)த் தரும் என்பதை நுண்ணறிவுடையோரும் பௌதிகவியல் கற்று பொறியியல் தெரிந்து பொறிமுஸற நயம் கணித்துணர்ந்தோரும் விளங்குவர்.

(ஷ கட்டுரை-பந்தி 15)

சொக்கன்

கணனிகளும், புதிய அச்சுக்கோப்பு முறைகளும் அறிமுகமாகி வரும் இக்கால கட்டத்தில், தட்டெழுதியின் பயன்பாடு குறைந்து வரும் என்பது உண்மையே அவ்வாருயின் தட்டெழுதிக்காக எழுத்துச் 'சீர்திருத்தத்தைக் கொண்டு வருவது கருத்தற்றதே. எனினும் வளர்முக நாடாயுள்ள எம் நாட்டில் இன்னமும் தமிழ்த்தட்டெழுத்திக்கே தட்டுப்பாடு நிலவுகையில் தட்டெழுதிக்கென்று எழுத்து மாற்றங்களை மேற்கொள்வதைக் கைவிடுவதா என்ற சிந்தனை எழலாம்'.

(ஷ-3-ம் கட்டுரை -பந்தி7)

பண்டிதர் வீ. பரந்தாமன்

7. 'தம்மைப் புதிய அறிவியல் கண்ணோட்டக்காரர் என்றும் புரட்சியாளர் என்றும் பிறர் எண்ண வேண்டும் என்பதற்காகச் சிலர், அறிவியல் (விஞ்ஞானம்) முறை அல்லது தேவைகளுக்காக எழுத்துச் சீர்திருத்தம் வேண்டும் என்று சொல்லி ஆரவாரம் போடுகிருர்கள் இவர்கள் அறிவியலையும் நன்கறியார். மொழியியலையும் நன்குணராதோரே

(ஷ. கட்டுரை-பந்தி 16)

சொக்கன்

வரிவடிவமாற்றத்திற்குக் கூறப்படும் காரணங்கள்:

வளர்ந்து வரும் அறிவியல் தேவைகளுக்கான குறியீடுகளும் அதிகம் அதிகமாயுள்ளன. அக்குறியீடுகளும் சேர எழுத்துப் பெருக்கம் எல்லை கடந்து விடும். எனவே நெடுங்கணக்கிலுள்ள எழுத்து மாற்றங்களைச் செய்வதன் மூலம் எழுத்துப் பெருக்கத்தினை மட்டுப்படுத்தலாம்.

பிறன்கூற்று, தன்கூற்றன்று

(ஷ2-ம் கட்டுரை-பந்தி 10)

தொகுப்பு:

**சொக்கன்**

பண்டிதர் வீ பரந்தாமன்

8. 'புதிய அறிவியற் கருத்துக்களைத் தருவதற்கும் எழுத்துக்களில் வரிவடிவ மாற்றம் செய்வதற்கும் யாதும் தொடர்பில்லை என்பதை அப் பேதையர் விளங்குவாரோ?

சொக்கன்

ஏழாவது விடையே இதற்கும் விடை.

பண்டிதர் வீ. பரந்தாமன்

9. 'ஆனுல் பல எழுத்துக்களைப் பயின்று விட்ட பல கோடித் தமிழரும் என் செய்வது? முன்னமே பதிவு செய்யப்பட்ட ஆக்கங்கள் எல்லாம் வாழ்வு பெறுவது எங்ஙனம்? அவையெல்லாம் மாண்டுபோக வேண்டியனவா? புதிய எழுத்துக்களில் பதிவு செய்யலாமெனில் அவற்றைத் தேடியெடுத்தும் பல்லாயிரணக் கணக்காகப் பதிக்கும் முயற்சியும் இயலாத காரியமும் ஆற்றற் செலவா மன்றியும் பொருட் செலவு மாகுமல்லவோ?

(ஷ கட்டுரை-பந்தி 13)

சொக்கன்

'அன்றியும் *சங்க நூல்கள் முதல் இன்றுள்ள நவீன இலக்கியங்கள் வரை மிகப் பெருமளவு நூல்கள் தமிழகத்திலிருந்தே வெளியாகின்றன. அவற்றை எம் தேவைக்கேற்ப வழக்கில் உள்ள தமிழ் எழுத்துக்களிலே நாம் எம் நாட்டில் அச்சிட்டு வெளியிடுவதென்பதும் நடக்கக் கூடிய காரியம் அன்று.

எனவே பழையனவாயினும் புதியனவாயினும்சரியே எழுத்துச் சீர்திருத்தத்தினைஏற்காத நம்பரம்பரைஇவற்றை இழக்க வேண்டிய நிலையும் உண்டாகும். இதனையும் நாம் மனங்கொள்ளல் வேண்டும்.

(ஷ கட்டுரைத் தொடர்-3-ம் கட்டுரை; இறுதிக்கு முன்னுள்ள இரு பந்திகள்)

*(சுன்னுகம் அ. குமாரசுவாமிப்புலவர், மகாவித்துவான் சி. கணேசையர் முதலாம் தமிழ்ப் பேரறிஞர்களின் பதிப்புக்கள் இன்று கிடைக்கப் பெருது பாலபண்டிதர், பண்டிதர் வகுப்புக்களிலும், பல்கலைக்கழகங்களிலும் தமிழ் கற்போர் தமிழகப் பதிப்புக்களையே நாடிப் பெற்றுப் படிக்கும் நிலை இன்று உள்ளது.)

பண்டிதர் வீ. பரந்தாமன்

10. ''இன்னும், எழுத்தின் ஒலிவடிவம்- வரிவடிவம்- மொழிநிலை வடிவங்களை வேறு பிரித்துணர முடியாப் பேதை மாந்தர்க்கெல்லாம் விடையிறுக்கப்புகின் இவ்வுரை வரம்பின்றியோடுமாதலால் இவ்வளவில் நிறுத்துகின்ருேம்.

சொக்கன்

'உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே' என்ற கருத்தால் வளர்ந்தவர்களும். வளர்க்கப் பட்டவர்களுமான இவர்கள், ''தமிழை ஆழமாகவும், அகலமாகவும் கற்றுத் தேர்ந்த தமக்கு, 'என்றுமுள தென்றமிழுக்கு' அதன் எழுத்துச்சீருக்குத் திருத்தம் கொணர இவர்கள் யார்? ''என்று ஆதங்கமும், ஆத்திரமும் கொண்டதில் வியப்பில்லை.''

(ஷ- முதற் கட்டுரை. பந்.7)

(* எழுத்துச்'சீர்திருத்தம்' என்பது வரிவடிவத்தையே கருத்திற் கொண்டதாகும். எழுத்தின் ஒலிவடிவம்,மொழிநிலை வடிவம் என்பவற்ருேடு இணைத்துக் குழப்புவது அவசியந்தானே?)

## நம்பியானையும் சுமப்பதா?

ஒரு புலவர் கயிற்ருறு என்ற ஊருக்கு வந்து சேருகின்ருர். நெடுந்தூரம் நடந்து வருகிருர் நேரம் இரவு 10 மணி. களைப்பு ஒருபுறம்;பசி மறுபுறம் புலவர் ஊருக்குப் புதியவர். தங்குவதற்கு இனி இடந் தேட முடியாது. என்ன செய்யலாம்; எங்கு போகலாம் என்று திகைக்கிருர் புலவர். அவ்வேளை—

மேள ஒலி காதில் விழுகிறது. ஆம், அருகிலுள்ள கோயிலில் திருவிழா! புலவருடைய மூளையில் மின்னல் பளிச்சிடுகின்றது. கோயிலுக்குப் போனுல் திருவிழா முடியப் பிரசாதம் வழங்குவார்கள்; பசியாறலாம்!

புலவர் கோயிலையடைந்த வேளை சுவாமி வீதிவலம் வரப் புறப்படும் நேரம் நன்ருக அலங்கரிக்கப்பட்டிருக்கிருர் பெருமான். சுவாமியை எழுந்தருள்விப்பதற்கு முன் வந்தவர்களுடன் புலவரும் சேர்ந்து கொள்கிருர். சுவாமி வீதி வலம் வருகிருர். தீவர்த்தி ஒளி இருளைக் கிழிக்கிறது. மேளம் முழங்குகின்றது; நாதஸ்வர இசை காற்றில் மிதக்கிறது. பக்தர்கள் சேவிக்கிருர்கள்.

ஒவ்வொரு வீதியிலும் மேளச்சமா! மேளகாரர் தம் கைவரிசையைக் காட்டுகிருர்கள்.

மேற்கு வீதி; நள்ளிரவாகி விட்டது. பசி காதை அடைக்கிறது; பல்லைக் கடித்துப் பொறுத்துக் கொள்கிருர் புலவர்.

ஆயிற்று. வடக்கு வீதிக்கும் வந்து விட்டார்கள். மேளக்காரப் பாவிகள் மீண்டும் முழக்குகின்ருர்கள். மணி ஒன்றுக்கு மேலாகி விட்டது.

புலவரால் இனியும்

**சோ: பத்மநாதன்**

பொறுக்க முடியாது. தோள் முறிந்துவிடும் போலிருக்கிறது. பெருமானை மட்டுமா சுமக்கிருர்? ஐயரையும் சேர்த்தல்லவா சுமக்க வேண்டியிருக்கிறது? ஆத்திரமாக வருகிறது அவருக்கு, கந்து கரை காணுத கடல் போற் கவிதை அவர் நாவிலிருந்து பொங்கி வருகிறது:-

''பாளை மணங் கமழுகின்ற
கயிற்ருற்றுப் பெருமானே
பழிகா ராகேள்!''

இறைவனைப் 'பழிகாரா' என்றே விளித்துவிட்டார்! ...வேளையென்ருல் இவ்வேளை பதினறு நாழிகைக்கு! மேலாயிற்று!...''மணியென்ன தெரியுமா? இரவு ஒருமணிக்கு மேலாகி விட்டது! அப்பனே, உன்னைச் சுமந்தாலாவது கவலையில்லை இந்த ஐயனையுமல்லாவா சுமந்து என் தோள்கள் வலிக்கின்றன:

''என் தோளை முறித்தது மன்றி
நம்பியானையுங்கூடச்
சுமக்கச் செய்தாய்!...''

நான் வெளியூரான். தெரியாமல் வந்து அகப்பட்டுக் கொண்டேன். நான் படும் பாட்டைக் காணும் எவனுவது இனிமேல் உன்னைச் சுமக்க வருவானு? இனியேது உனக்குத் திருவிழாச் சிறப்பு?

பாடல் இதோ:

'பாளைமணங் கமழுகின்ற
கயிற்ருற்றுப் பெருமானே
பழிகா ராகேள்
வேளையென்ரு லிவ்வேளை
பதினுறு நாழிகைக்கு
மேலா யிற்றென்
தோளைமுறித் ததுமன்றி
நம்பியா னையுங் கூடச்
சுமக்கச் செய்தாய்
நாளையினி யார்சுமப்பார்
எந்நாளு முன்கோயில்
நாசந் தானே!''

தோளைக் கொடுத்து அகப்பட்டுக் கொண்டு விழித்த புலவர் வேறுயாருமல்லர் நினைத்த மாத்திரத்தில் விரைந்து கவிமாரி பொழியும் ஆற்றல்படைத்தகாளமேகமே

பொது

**இத்தகைய ஆத்திரம் அவர்கள் உரையினை**
**வரம்பு இன்றி ஓடச் செய்யுமானல்**
**அதற்கு நாம் என் செய்வோம் ?**

**" சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்**
**ஏமப் புணையைச் சுடும்"**

(திருக்குறள் 306)

## மாறுவது எப்போது...

(6ஆம் பக்கத்தொடர்ச்சி)

ஆகிவிட்டோம். வெங்காயம் விரைவிற் கெட்டுவிடும். குரக்கனோ சாமையோ அப்படியல்ல. உணவாகவும் வருமே அதுமட்டுமா? வெங்காயத்துக்கு உரம் கிருமிநாசினி பெருமளவில் உபயோகிக்க வேண்டும். குரக்கன் சாமைக்கோ இவை தேவையே இல்லை. இதனால், சூழலும் பாதுகாக்கப்படுகின்றதே.

மனிதன் எங்கு நோக்கி ஓடுகிறான்?

அன்றுள்ள வீடுகளிற்பெரும் பான்மையானவை மண் வீடுகளே. ஓலையால் வேய்ந்து சாணியால் மெழுகிச் சுத்தமாகவும் குளிர்மையாகவும் இருந்தன. இன்றோ பெருந்தொகைப் பணத்தை முடக்கி மாளிகைகள் கட்டுகிறோம். பின்னர் அவற்றைக் குளிரூட்ட 'எயர் கொண்டிஷன்', மின்விசிறி பொருத்துகிறோம். ஆனால் அன்றைய மனிதன் மண்குடிசையில் வாழ்ந்த போதுள்ள வாழ்வுத் திருப்தி இன்றைய மனிதனுக்குஇல்லை. நாளைக்கு என்னவோ? என்ற ஏக்கமில்லை. ஆனால் அன்று உணவுக்காக மனிதன் நாயாக அலையவில்லை; உழைப்புக்காக அவன் பஸ் ஏறவில்லை. அவன் மிடாஸ் அல்லன்.

எட்டுமணிநேரவேலை என்ன செய்தது. ஒருவனிடமிருந்து மனைவிமக்களை எட்டுமணி நேரம் பிரித்து வைத்தது. பிள்ளைகளைத் தாயிடம்இருந்து எட்டுமணி நேரம் பிரித்து வைத்தது. இதனால் பாலூட்டுவதற்குத் தகரத்தாய், இதனைத் தயாரிக்கப்பால்தொழிற்சாலை. இங்கும் வேலை எட்டு மணிநேரம். மேலும் பல குடும்பங்களிலே தாய், சேய், கணவன் மனைவி பிரிந்து வாழும்நிலை.

அன்றைய மனிதன் தோட்டத்தில் வேலை செய்யும் போது காதல் மனையாள் கட்டுச் சோற்றுடன் தோட்டம் போவாள். அவள் கையால் எதுவானாலும் உண்பது அமிழ்தமே என்ற ஆனந்தத்தில் குடும்பம் உளரீதியில் ஒன்றுபட்டு உந்நதமான ஐக்கியம் வளர்ந்தது. இன்றோ, ஏதோ ஒரு சாப்பாட்டுக் கடையிற் சுகாதாரக் கேடான உணவை உண்டுவிட்டுக் குடல் வருத்தங்களுடன் வாழும் கணவன் குடல் வருத்தங்களால் ஏற்படும் மனவிரக்தி, சினம் இவற்றால்மனம் தடுமாறி விரக்தியுற்ற நிலையில் வாழும்தன்மை இவையெல்லாம் உண்டாகின்றன.

அன்று கணவன் மனைவிஒருவரில் ஒருவர்தங்கி வாழ்ந்தனர். (Interdependent) ஆனால் இன்றோ அந்நிலை இல்லை. விவாகரத்துக்கள் அதிகமாகி வருகின்றன; குடும்பப் பிரிவுகள் அதிகம். இன்றைய குடும்பங்களில் உண்மையான திருமணம் மனப்பூர்வமபக ஒரு பொழுதும் நடைபெறுவதேயில்லை. சீதனத்திற்காகவோ, தங்கைக்காகவோ அல்லது தொழிலுக்காகவோ தான் திருமணங்கள் நடைபெறுகின்றனவேயன்றி வாழ்வதற்கே அத்திருமணங்கள்நடைபெறுவதில்லை. இன்றுள்ள நிச்சயமற்ற நிலைக்கும் இத்தகைய சமுதாயப் போக்கேகாரணம். எல்லோரும் மிடாஸ் ஆகிவிடுகிறார்களே தவிர சார்ஸ் மைக்கேயின் டீ நதியின் ஆலயாளனாக வாழவில்லை.

ஒவ்வொருவர் மனசிலும் ஒரு வித ஏக்கமும், ஆதரவை நாடும் இயல்பும் அதே சமயத்தில் பிறிதொருவனுக்கு ஆதரவு கொடுக்க விரும்பாத அல்லது முடியததாத நிலையும் உள்ளது. வாழ்வைப் பூரணமாக ரசித்துச் வாழமுடியாது தான் தலனின் அவலநிலையில் (Torment of Tantalos) வாழ்வைக் கழிக்கிறான். இந்நிலை மாறுவது எப்போது?

## நிலா...

[11ஆம் பக்கத்தொடர்ச்சி]

கமேயில்லை. இரவும்நிலவும் வளரட்டுமே-நம் இளமை நினைவுகள் தொடரட்டுமே என நாமும் சேர்ந்து பாடுவோமா.

நீலவான ஆடைக்குப்
உடல் மறைத்து
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளி முகத்தைக் கோல
முழுதுங் காட்டி விட்டால் காதற்
கொள்ளையிலே இவ்வுலகம்
சாமோ வானச்
சோலையிலே பூத்த தனிப்
பூவோ
நீதான்
சொக்க வெள்ளிப்பாற்
குடமோ?
அமுத ஊற்றோ?
காலை வந்த செம்பரிதிக்கடலில் மூழ்கிக் கனல் மாறிக்
குளிரடைந்த ஒளிப்
பிளம்போ?

—பாரதிதாசன் முழு நிலவைஇப்படி முழுமையாகக் காண்கிறார்

## பூமியில்...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

யையும், மின்னல், இடி போன்றவற்றையும் தாங்கிய பூமிக்கு இதுவொரு சிறிய வாணவேடிக்கை போலவிருக்கும்.

1970 களில் லவ்லொக் தமது கொள்கைகளை முன் வைத்தார். உயிரிகள் இருப்பதனால் நிலம், நீர், காற்று ஆகியவற்றில் ஏற்பட்ட மாற்றங்கள் அவதானிக்கக்கூடியவை. உதாரணமாக இரண்டு மில்லியன் வருடங்களுக்கு முன் வளிமண்டலத்தில் ஒட்சிசன் இல்லையென்றே சொல்லலாம். பசிய தாவரங்கள் தோன்றியதன் பின் அவற்றின் தொழிற்பாடு காரணமாக ஒட்சிசன் மட்டம் அதிகரிக்கவாரம்பித்தது. இவை ஒளிச் சக்தியை நாட்டுவது மாத்திரமல்லாது இந் நிகழ்ச்சியின்போது காபனீரொட்சைட்டுவை உள்ளெடுத்து ஒட்சிசனை வெளிவிடுகின்றன இன்று, பல நூறு மில்லியன் வருடங்களாக வளிமண்டலத்தில் ஒட்சிசனின் அளவு ஏற்ற 21 வீதத்தில் நிலைக்க ஒளித்தொகுப்பாளர்கள் உதவி வருகின்றனர். சகலஉயிரிகளுக்கும் இது வசதியாகவுள்ளது இதில் பாதிப்பு ஏற்பட்டால் முதலில் பாதிப்படைபவர்கள் மனிதனும், உயர்விலங்குகளும், உயர் தாவரங்களுமாகும்.

கால நிலையை உயிரிகள் பாதிக்கும் என்பதனை அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர். கடல்வாழ் நுண்ணங்கிகளும் உலகளாவிய ரீதியில் வெப்ப நிலைகளைக் கட்டுப்படுத்துவதில் பங்கு கொள்கின்றன என்பதை லவ்லொக்கும் அவரின் சகபாடிகளும் 1987 ல் கண்டறிந்து வெளிப்படுத்தியுள்ளார்கள். சில பிளாந்தன் (அலையுயிரிகள்) இனங்கள் இரு மெதைல் சல்பைட்டு (Dimethyl Sulphide) என்ற இரசாயனப் பொருளைத் தோற்றுவிக்கின்றன. இது கடலில் தேங்கி,பின் வளிமண்டலத்தில் பரவும். வளிமண்டலத்தில் இது ஒட்சியேற்றம் பெற்று சல்பேற்று துணிக்கைகள் தோன்றும். இவை முகிற் கூட்டங்கள் தோன்றுவதற்கு ஒடுக்கக் கருக்களாக அமையும். முகிற் கூட்டங்கள் பூமியின் வெப்பநிலையைக் கட்டுப் படுத்த உதவும். இங்ஙனம் வெப்பத்தடுப்பாக அமையும் முகிற் போர்வையின் அடர்த்தியைக் கட்டுப்படுத்துவதன் மூலம், அலையுயிரிகளினால் தோற்றுவிக்கப்படும் இருமெதைல் சல்பைட்டின் செறிவு பூமியின் வெப்ப நிலையைக் கட்டுப் படுத்துவதில் பங்கு கொள்ளும். இதற்கு லவ்லொக் தரும் விளக்கம் புதுமையா

## அழகியற்கலையும்...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

வியபிசாரி பாவம் ஆகியன நேரடியாகவே அறியப்படுகின்றன. இவற்றின் உதவியுடன் நடிகனிடம் தோன்றும்ஸ்தாயி பாவத்தை அநுமானத்தின் மூலம் ரசிகன் அறிந்து கொள்ளும்போது ரசத்தை அநுபவிக்கிறான் என்று ஸ்ரீசங்குகர் கூறுகிறார்.

பட்டநாயக்கரின் ரசக் கொள்கை ரச- புக்தி - வாதம் எனப்படும், இக்கொள்கைப்படி, ரசிகனது மனதில் சாந்தம், அமைதி குடிகொண்டிருக்கும் போது அழகியலனுபவமாகிய 'ரசம்' ஏற்படும். காவியத்தில் இராமன் என்ற கதாபாத்திரம் எல்லோருக்கும் பொதுவான ஒரு பாத்திரமாகவே இருத்தல் வேண்டும். பொதுமைப்படுத்தப்பட்ட உணர்ச்சிகளே ரசிகனிடம் ரசத்தைத் தோற்றுவிக்க முடியும். இவ்வாறு பொதுமைப் படுத்தப்பட்ட பாவங்கள் பார்வையாளரைச் சென்றடைவதற்குக் காரணமாக ஒரு விசேட சக்தி பற்றிப் பேசுகிறார். அது பாவகத்தவம் எனப்படும். இச்சக்தியின் மூலம் ரசிகன் ரசத்தை அநுபவிக்கிறான்.

அபிநவகுப்தரின் கருத்துப் படி நடிகனிடம் தோன்றும் ஸ்தாயிபாவம் துவனியின் மூலம் பார்வையாளனைச் சென்றடைகிறது. துவனி என்பது மறைமுகமாக உணர்த்தப் படும் கருத்தாகும் (suggested meaning) விபாவங்களுக்கும், அநுபாவங்களும் நேரடியாக வெளிப்படையாக அறிந்து கொள்ளக்கூடிய கருத்துக்களைக் கொண்டிருக்கின்றன. இவற்றின் மூலம் மறைமுகமாக உணர்த்தப்படும் ஸ்தாயி பாவத்தைப் பார்வையாளன் அறிந்து கொள்ளும்போது அவன் ரசத்தை அனுபவிக்கிறான். ஒரு தகுதிவாய்ந்த பார்வையாளனை ஸஹ்ருதயன் என்பர். அவன் கலைஞனை ஒத்த கற்பனைத் திறமுடையவனாயிருப்பான். அத்தகைய ஒருவனால் இலகுவில் நடிகனது உணர்ச்சிகளை அறிந்து கொள்ள முடியும். அபிநவ குப்தரின் கருத்துப்படி விபாவ அனுபாவங்கள் உணர்த்தும் ஸ்தாயிபாவத்தை அதாவது அடிப்படை உணர்ச்சியை அறிந்து ரசத்தை அநுபவிக்கிறான் இக்கொள்கையே ரச-அபிவியக்திவாதம் எனப்படும்.

இவ்வாறு ரசக் கொள்கை பற்றிப் பல்வேறுபட்ட கருத்துக்கள் இடம் பெற்றாலும், முதன்முதலாக ரசக்கொள்கை பற்றிக் கூறியவர் பரதரே. இவர் கூறிய ரசங்கள் எட்டாகும். ஆனால் பின்வந்த அறிஞர்கள் சாந்தத்தையும் ஒரு ரசமாகச் சேர்த்து நவ ரசங்கள்பற்றி விளக்குகின்றனர். சாந்தம் ஆன்மிக அமைதியை அடிப்படையாகக் கொண்ட ரசம் ஆகும். இறைவனிடம் செலுத்தப்படும் அன்பு 'பக்தி' எனப்படும். பக்தியைச் சிலர் ரசமாகவும், வேறு சிலர் பாவமாகவும் கருதுகின்றனர். பக்தியை ரசமாகக்கொள்வதில் கருத்து வேறுபாடுகள் உண்டு. ஆனால் அதனை ரசமாக ஏற்றுக் கொண்டால் ரசங்கள் பத்து என்று கூறலாம்.

---

னது. மழை வீழ்ச்சியிலிருந்து கடல்களின் உவர்த்தன்மை வரை பலதரப்பட்ட நிகழ்வுகளிலும் உயிரிகள் பங்கு கொள்கின்றனவென்பது இப்பொழுது பலராலும் ஏற்றுக் கொள்ளப்படும் ஒரு விடயமாகும் ஆயினும் சூழலுக்கேற்ப அங்கிகளில் மாற்றம் ஏற்படுமேயொழிய, அங்கிகள் தமக்கு வசதியாக சூழலை மாற்றிக் கொள்ளும் என்று கருதியதில்லை. ஆயினும் லவ்லொக் அங்கிகள் தமது வசதிக்கேற்ப சூழலை மாற்றியமைக்கும் தகைமையுடையனவை.

## என்னைச் சிஷ்யனாக...

(9ஆம் பக்கத்தொடர்ச்சி)

வராவிட்டால் என்ன எனக்கு ஒரு ட்றைவர் வேண்டும்.

நீங்கள் விரும்பும் மணமகனுக்கு இருக்க வேண்டிய தகுதிகள் என்ன?

'மணமகன்குடிக்கக்கூடாது, சிகரட் பிடிக்கக் கூடாது. மனைவி கணவனுக்கு அடிமை என்ற மூட நம்பிக்கை உடையவனாக இருக்கக் கூடாது. எனது சங்கப்பணிகளுக்கு இடஞ்சலாக இருக்கக்கூடாது' கார் அல்லது மோட்டார் சைக்கிள் லைசென்ஸ் இருக்க வேண்டும்.'

'சரி இதை எல்லாம் பார்த்துக் கொள்ளலாம். ஆனால்...!'

'என்ன ஆனல்...!'

உங்களுக்கு நாற்பது வயது நாற்பது வயதுக்குமேல் திருமணம் செய்யாத ஆண்கள் அபூர்வம் திருமணமாகித் தாரம் இழந்தவர் ஆனாலும் ஏற்பீர்களா

'நான் சீர்திருத்தங்களை வரவேற்பவள் விதவை திருமணம் செய்வதை எங்கள் சங்கம் வரவேற்கிறது அதனால் மனைவியை இழந்தவன் என்ன அது ஓ! தபுதாரன் திருமணம் செய்வதையும் எங்கள் சங்கம் வரவேற்கும். இதனால் சங்கத்தின் கொள்கை பங்கப்படாது. நீங்கள் முயற்சி செய்யுங்கள்' ஆனால் திடகாத்திரம் உள்ளவராக இருக்க வேண்டும். ஏன் தெரியுமா? கார், அல்லது மோட்டார் சைக்கிள் 'ரிப்பேர்' என்றால் சைக்கிளில் முன்னிருத்தி என்னை அழைத்துச் செல்ல வேண்டும்.

நான் தரகுத் தொழிலில் சிஷ்யனாக வந்தஉடனே முதல் கேஸ் இது தான் அதாலே இது வெற்றி பெற எனது முழுத் திறமையையும் பயன்படுத்துவேன். உங்கள் குறிப்பையும் விவரத்தையும் குருவிடம் கொடுப்பேன். நீங்கள் ஒரு வாரத்தில் வந்து பாருங்கள். நானும் குருவும் ஒரு வழிபண்ணுவோம்'.

'இந்தப்பணத்தை முற்பணமாக வைத்துக்கொள்ளும்படி தரகர் சின்னத்தம்பியிடம் கொடுங்கள்'' என்று ஒரு என்வலப்பை எடுத்தாள் தலைவி.

''நீங்கள் குருவிடம்கொடுங்கள். முற்பணம்பற்றிக் குரு எனக்கு எதுவும் சொல்லவில்லை அவர் அநுமதி இன்றிப் பணத்தை வாங்கமாட்டேன்'' என்றான் இரத்தினம் சுத்த கறாராக.

திருமணம் ஒரு வாரத்தில் நிறைவேறிவிடும் என்ற நம்பிக்கையோடு மாதர் சங்கத் தலைவி தரகர் சின்னத்தம்பியின் வீட்டை விட்டுப்புறப் பட்டாள். அவள் மனக் கண்ணில் தான் ஸ்கூட்டர் ஒன்றில் கணவரின் பின் அமர்ந்து சென்று மேடையில் ஏறி பெண் அடிமைத்தனம் ஒழிய முழங்குவதான ஒருதோற்றம் எதிரில் கார்வருவது கூடத் தெரியவில்லை. மோட்டார் வண்டியின் ஊதுகுழல் அலறியது திடுக்குற்ற மாதர் சங் தலைவி ஒதுங்கினாள். ராக்ஸியின் ரைவர் கதவால் எட்டிக் காதாற்கேட்க முடியாத நாலு வார்த்தைகளைக் கக்கி விட்டு ராக்ஸியுடன் மறைந்த பின் மாதர்சங்கத் தலைவி தனது கைப்பையில் இருந்த டயறியைப் பிரித்து ரக்ஸி ட்ரைவர்களின் பெண்மையை மதிக்காததன்மையை அடுத்த மேடையில் முழங்க வேண்டுமென்று குறித்துக்கொண்டு விடுவிடென்று நடந்து சென்றாள்.

(வளரும்)

## சித்திர . . .

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வது?' என்று என்னைக் கேட்டார். எனக்கும் ஒன்றும் புரியவில்லை யமதர்மராஜாவுக்கோ மகாகோபம். தன்னைக்கூட இந்த நடிகர்கள் ஏமாற்றிவிட்டார்களே யென்று கறுவினார்.

'சத்தியவான் வேடம் போடுகிறவன் சிவன் வேடம் போடுகிறானா? சரி வரட்டும் பார்த்துக்கொள்ளுகிறேன்!' என்று இரைந்துவிட்டு நமது தலைவர் மார்க்கண்டேய நாடகத்திற்குப் போய்விட்டார். 'சிவனாக நடிப்பவன் சத்தியவானாக வேடம் புனைந்து அநியாயமாக மாளப் போகிறானே!' என்று நான் ஓலமிட்டதையும் எமது தலைவர் காதில் போட்டுக்கொள்ளவில்லை.

மார்க்கண்டேய நாடகத்தில் மார்க்கண்டனுக்குப் போடவேண்டிய பாசக் கயிற்றை யமதர்மராஜா சிவனுக்குப் போட்டாரோ இல்லையோ நாடகக் கொட்டகையே இடிந்து விழுவதைப் போன்ற சிரிப்பொலியும், கரகோஷமும் எழுந்தது! இந்த நிகழ்ச்சியை என்னால் மறக்கவே முடியவில்லை.

'ஐயா சித்திரபுத்திரனாரே! சிரமத்தைப்பாராது எனக்குப் பேட்டியளித்தமைக்கு மிக்க நன்றி வணக்கம்!'

'வணக்கம்!'


# SPOKEN ENGLISH

(தபால் மூலம் கல்வி)

90 நாட்களில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க கற்றுக்கொடுக்கப்படும். மிக மிக புதுமையான உளவியல் அடிப்படையில் அமைந்த பாடத் தொகுப்பினை அடிப்படையாகக் கொண்டது. ஆங்கிலத்தில் London Diploma பெற்ற ஆசிரியரினால் தயாரிக்கப்பட்ட பாடத் தொகுப்பு.

எமது நிறுவனத்தில் இன்றுவரை நூற்றுக் கணக்கானோர் கற்றுத் தேறி நற்சான்றிதழ் பெற்று உள்ளனர்.

எமது நிறுவனம் இலங்கை அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தபால் மூலம் கல்வி நிறுவனமாகும்.

மேலதிக விபரங்கட்கு சுயவிலாசமிடப்பட்ட முத்திரை யொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

# BRIGHT TRAINING CENTRE

P.O. BOX 162 COLOMBO.

09006



# அமரர் மு. கார்த்திகேசன்

## அவர்களின் ஞாபகார்த்தம்

**எஸ். சிவதாசன்**

தமிழ் பேசும் மக்கள் மத்தியில் மட்டுமல்லாமல் சிங்கள மக்கள் மத்தியிலும் குறிப்பாக முற்போக்கு எண்ணம் கொண்ட சகலரின் அன்புக்கும், மதிப்புக்கும் பாத்திரமான ஒரு பெரியாரைப் பற்றி எழுதுவது என்பது மிகக்கடினமான ஒரு விடயமாகும். இந்த வகையில் சிறந்த கம்யூனிஸ்ட்டாகவும், மதிப்பு மிக்க ஆசிரியனாகவும், ஆற்றல் மிக்க பேச்சாளனாகவும் ஒரே சமயத்தில் திகழ்ந்த அமரர் மு. கார்த்திகேசன் அவர்கள் மறைந்து இன்றுடன் பன்னிரண்டு ஆண்டுகள் நிறைவடைகின்றது.

சமூகத்தின் அடித்தட்டில் வாழும் ஏழை, எளிய மக்களுக்கும் சமூகத்தின் பல்வேறு தரத்தைச் சார்ந்தோர்களுக்கும் ஆற்றிய அளப்பரிய சேவை காரணமாகவும்உடை, நடை, பாவனையில் முன்னுதாரணம் மிக்க அரசியல்வாதியாகவும் எவ்வித படாடோபமுமின்றி வாழ்ந்தமையாலும் இந்நாட்டின் சகல பிரிவினர் மத்தியிலும் நன்மதிப்பைப் பெற்றிருந்தார்.

யாழ். இந்துக்கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய காலத்தில் அவரிடம் கல்வி கற்ற மாணவர்களாக இருந்தாலும்சரி, கம்யூனிஸ்ட்கார்த்திகேசனிடம் அரசியல் கற்ற மாணவர்களாக இருந்தாலும் சரி அவர்கள் எல்லோரும் இன்று பல்வேறு துறைகளிலும் நன்கு பிரகாசிப்பதும் அவரது இலட்சியங்களை அடையும் மார்க்கத்தில் தம்மை அர்ப்பணித்து மக்களின் நலன்களுக்காகப்போராடிக் கொண்டிருக்கும் ஒவ்வொருவரது உள்ளத்திலும் நடைமுறையிலும், ஆளுமையின் முத்திரைகள் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

அமரர் கார்த்திகேசனை இலங்கையின் மிக உயர்பதவிகள் வகிக்கும் அரச அதிகாரிகள், அரசியல்வாதிகள், மற்றும் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் கல்விமான்கள் தொட்டு யாழ்ப்பாணத்து மாநகரசபையின் நகரசுத்தித் தொழிலாளர் வரை தங்களில் ஒருவராகவே அவரைக் கருதி வந்தனர். சகல தரத்து மக்களாலும் கார்த்திகேசன் நேசிக்கப்படும் அளவுக்கு இங்கு வேறெந்த அரசியல் வாதியும் உரிமைகோர முடியாதென்பது எனது கருத்தாகும்.

அமரர் கார்த்திகேசன் தனது சிறு பராயத்தை சிங்கப்பூரில் கழித்துவிட்டு நாடு திரும்பி பாடசாலைக் கல்வியை முடித்துவிட்டு இன்றைய பல்கலைக்கழகத்தின் முன்னோடியாகிய இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் இணைந்து ஆங்கில சிறப்புப் பட்டத்திற்கான கல்வியை மேற்கொண்டார். இவருடன் அக்காலத்தில் பல்கலைக்கழகத்தில் சகமாணவர்களாக இருந்தவர்கள் இந்த நாட்டின் பிரதமராகவும், பேராசிரியர், அரசாங்க அதிபர், கல்விப் பணிப்பாளர் போன்ற பல்வேறு உயர் பதவிகளை வகித்தனர். ஆனல் அமரர் கார்த்திகேசன் அவர்கள் தனது உயர் கல்வியை முடித்துக் கொண்ட சமயம் பல உயர் பதவிகள் அவரை நாடி வந்தபோதிலும் அவர் அப்பதவிகளில் நாட்டம் கொள்ளவில்லை மாருக அக்காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் தோற்றத்திற்கு முன்னோடியாக இருந்த ஐக்கிய சோசலிசக் கட்சியில் தன்னை ஒரு முழுநேர ஊழியனாக இணைத்துக் கொண்டார், இதன் பின்னல் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவராக இருந்து தனது இறுதி மூச்சுவரை தான் கொண்ட இலட்சியத்தை நிலைநாட்டுவதற்காகவே செயற்பட்டார்.

ஆரம்ப காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆங்கில வார ஏடான 'போவேட்'டின் ஆசிரியராக இருந்து தனது ஆங்கில புலமையை வெளிப்படுத்தியது மட்டுமன்றி அக்காலத்தில் இருந்த மிகக் குறுகிய அச்சியந்திர வசதிகளோடு தமது உடலுழைப்பையும் செலுத்திப் பத்திரிகை அச்சிட்டது மாத்திரமின்றி மக்கள் குழுமி நிற்கும் பகிரங்க இடங்களில் அப்பத்திரிகைகளைத் தாமே கொண்டு சென்று விற்பனை செய்துவந்தார். கம்யூனிஸ்ட் கட்சியால் வெளியிடப்பட்ட சகல வெளியீடுகளையும், சகதோழர்களை இணைத்துக்கொண்டு பஸ்நிலையத்தில் பகிரங்கமாக நின்று பொதுமக்களுக்கு விற்பனை செய்து வந்தமையை யாரும் எளிதில் மறந்துவிட முடியாது. அவருடன் இணைந்து பத்திரிகை விற்பனை செய்தமையை பெரும் பேருகக் கருதும் பலர் இன்றும் பெருமையுடன் அச்சம்பவங்களை நினைவுகூருவதை என்னல் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

நாட்டின் மிகச்சிறந்த அறிவாளிகளையும் புத்திஜீவிகளையும் செயல் வீரர்களையும் மட்டுமன்றி இன்று அரசியலில் முன்னணியில் திகழும் ஒரு இளைய சந்ததியையும் உருவாக்குவதில் அவர் ஆற்றிய பணி மிக உயர்ந்ததாகும். இன்று இந்நாட்டிலுள்ள சகல துறைகளிலும் உள்ளவர்களால் விதந்து பாராட்டப்படும் அறிஞர் கைலாசபதி அவர்களும் காத்தியால் உருவாக்கப்பட்டு நெறிப்படுத்தப்பட்டவர்கள் என்பது யாவரும் அறிந்ததே. அத்தோடு இன்று இலக்கியத்துறையில் தமக்கென தனித்துவமான இடத்தைப் பிடித்துள்ள திருவாளர்கள் டொமினிக் ஜீவா, டானியல், பொன்னுத்துரை, பெனடிற்பாலன், நீர்வை பொன்னையன் போன்ருேரும் அவரால் வளர்க்கப்பட்டு வழிகாட்டப்பட்டவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

எந்தவித படாடோபமுமின்றி மிகவும் எளிமையான தோற்றத்தோடு ஒரு பழைய துவிச்சக்கர வண்டியில் போக்குவரத்துச் செய்யும் கார்த்திகேசனை சாதாரண ஏழைப் பொதுமக்கள் தாம் சந்திக்கும் இடங்களிலேயே உரிமையோடு நிறுத்தி தமக்கு வேண்டிய விண்ணப்பங்களை எழுதுவித்துக் கொள்வது வழக்கம். எத்தகைய சூழ்நிலையிலும் பொது மக்களின் அன்பான வேண்டுகோள்களை மிகவும் பொறுமையுடன் கேட்டு அவற்றுக்குத் தீர்வு காண்பதிலும் உடனுக்குடன் வேண்டிய உதவிகளைச் செய்து கொடுப்பதிலும் ஒய்வின்றி உழைத்த பண்பாளர்.

1953ம் ஆண்டில் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் அன்றைய சகவான துரைராசாவை யாழ் மாநகரசபைத் தேர்தல் தோற்கடித்து முதன் முதலில் மாநகர சபை உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டார். அவரது வெற்றியை பல்வேறு பட்ட சமூகப் பிரிவினரும் குதூகலத்தோடு வரவேற்றனர். அன்று கல்லூரி மாணவனாக இருந்த நான் வீ ஏ. கந்தசாமி, டொமினிக் ஜீவா இன்னும் பலருடன் இணைந்து இத்தேர்தல் வேலைகளில் ஈடுபட்டது இன்னும் என்மனதில் பசுமையாக நிற்கின்றது. தனியொரு கம்யூனிஸ்டாக நகரசபைக்குச் சென்ற அமரர் கார்த்திகேசன் தனது வாதத்திறமையாலும், தம்மீது ஏனைய உறுப்பினர்கொண்டிருந்த மதிப்பின் காரணமாகவும் தம்மோடு ஐக்கியப்படுத்தக்கூடிய சகலரையும் ஐக்கியப்படுத்தி முஸ்லீம் உறுப்பினரான ஜனுப் எம்.எம். சுல்தானை தாமே பிரேரித்து யாழ்ப்பாணத்தின் நகராதிபதியாக்கிய பெருமை அன்னரையே சார்ந்ததாகும்.

தனது அரசியல் வாழ்வின் ஆரம்பம் தொடக்கம் இறக்கும் வரை சாதியின் பெயரால் ஒருபகுதி மக்கள் அடக்கியொடுக்கப்படுவதற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சகல போராட்டங்களோடும் இணைந்து நின்றதும் அல்லாமல் அவ்வியக்கங்களை வெற்யை நோக்கியும் வழி நடத்தினர் இடது சாரிகள் என்று கூறிக்கொள்ளும் இன்றைய கொள்கையற்ற சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளைப் போலன்றி எத்தகைய அரசியல் நெருக்கடிகள் நிறைந்த காலத்திலும் அப்பிரச்சனைகளுக்கு முகம்கொடுத்து கட்சியின் கருத்துக்களை முன்வைத்தது மட்டுமன்றி அவற்றுக்காக இடையருது போராடிய நேர்மையான அரசியல்வாதி.

இவரிடம் கல்வி கற்ற மாணவர்களில் பலர் இன்று புகழ் பெற்ற டாக்டர்களாகவும், இஞ்சினியர்களாகவும், பேராசிரியர்களாகவும் திகழ்வதுடன் யாழ் இந்துக்கல்லூரியில் கல்விகற்ற அவரது மாணவர்கள் அரசியலிலும் அவரது வழிகாட்டலின் கீழ் வளர்ந்து இன்று பாராளுமன்ற உறுப்பினர்களாகவும், வடக்கும் கிழக்கு மாகாண சபையின் அமைச்சர்களாகவும், இருப்பது குறிப்பிடத்தக்கது. இவரிடம் அரசியல் பாடம் கேட்ட நானும் என்போன்ற பலரும் அவர் எந்த இலட்சியங்களுக்காக உழைத்தரோ அந்த இலட்சியங்களை அடையும்

(15 ஆம் பக்கம் பார்க்க)

### நூற்றாண்டு...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவர் ஆசிரியர். 'எழுதடா தம்பி' என்று ஆங்கில இதழுக்கு ஆர்.என் ஐஎழுத வைத்தார் சிங்கி சம்பந்தர் 'என்ன எழுத?' என்று இவரைக் கேட்டார். விளைவு இந்துசாதன தமிழ் ஆங்கிலப்பதிப்புக்கள்இரண்டுக்கும் ஆசிரியர் என்ற சிறப்பு இவர் ஒருவருக்கே அமைந்தது. 'ஆசிரியர்களின் ஆசீர்வாதம் வீண் போகுமா?' என்று கூறிக் குதூகலிக்கிருர் ஆர். என் அதேபோல் தாம் ஆங்கிலப்பதிப்பின் உதவியாசிரியராக இருந்தபோது ஆசிரியராக இருந்த T முத்துசாமிப்பிள்ளை 'என்னஇலாகவமாக ஆங்கிலத்தைக் கையாள்கிருர் ஆர். என்; படித்தீர்களா? அவர் எழுதியிருப்பதை' என்று பலரிடமும் கேட்டுத் தன்னைப் பாராட்டியதையும் ஊக்கியத்தையும் நன்றியுடன் நினைவுகூர்கிருர் ஆர். என்.

இந்து சாதனம் தமிழ் ஆங்கிலப்பதிப்புக்களின் ஆசிரியராகத் தாம் அமர்ந்திருந்தபோது நிகழ்ந்த சில நிகழ்வுகளையும் மகிழ்வுடன் நினைவுமீட்கிருர் ஆர். என்

'இந்து ஒகன்' இதழில் தமிழ்மொழியின்உத்தியோக அந்தஸ்து என்ற தலைப்பில் இவர் எழுதிய தலையங்கம் பலரையும் ஈர்த்ததில் வியப்பில்லை பாராளுமன்ற உறுப்பினரான கனகரத்தினம் அந்த இதழும் கையுமாகப் பாராளுமன்றம் சென்று அங்கே குறித்த தலையங்கத்தை வாசித்துப் பெரிய பரபரப்பையே உண்டாக்கிவிட்டார் அப்போது நிதி அமைச்சராக இருந்தவர் ஜே ஆர் ஜயவர்த்தன. உடனடியாக இந்து ஒகன்' இதழின் ஆசிரியரைச் சந்தித்தே ஆகவேண்டும் என்று முரண்டு பிடித்து கிரிமலை விருந்தினர் விடுதிக்கே அவர் வந்துவிட்டார் அங்கே நீண்டநேரம் விவாதித்த ஜே ஆர் ஆசிரியரின்வாதங்களை எதிர்கொள்ள இயாலாது நழுவியது பலரறியாதது.

நீதிகோரிப் போராடும் துணிவு ஆர்.என் உடன் கூடவே பிறந்தது.

1926-ல் கீரிமலையில் இளைஞர்மகாநாடுDr ஐசாக் தம்பையா தலைவர்.நடேச பிள்ளை, துரைசுவாமி, இராசரத்தினம் முதலிய பிரமுகர்கள் வந்திருக்கிருர்கள் இந்தப் பாரிய சபையிலே அன்றே தமிழ் அரசமொழியாகவேண்டும் என்று முன்மொழிந்தவர் ஆர்.என் அத்தீர்மானத்தை வழிமொழிந்தவர் பிரம்ம ஸ்ரீ நவநீத கிருஷ்ணபாரதியர்.

1954-ல் அமெரிக்கக் கல்விச் சங்கம் பத்திரிகையாளர் என்ற முறையில் ஐக்கிய அமெரிக்க நாட்டில் 3மாத கலாசார சுற்றுலா மேற்கொள்ளும்படி விடுத்த அழைப்பு இந்து சாதனம் தமிழ் ஆங்கிலப் பதிப்புக்கள் வாயிலாகப் புரிந்த பயன் தரும் பணிகளுக்கான சர்வதேச அங்கீகாரம் என்றே ஆர்.என் நம்புகிருர்.இந்தச் சுற்றுலாவின் போது அப்போதைய அமெரிக்க ஜனுதிபதி ஐசன்ஹோவர் நடாத்திய பத்திரிகை மாநாடொன்றிற் கலந்துகொள்ளத் தமக்கு கிடைத்த வாய்ப்பை இந்து சாதனத்துக்கு வழங்கப்பட்ட கௌரவமாகவே இவர் கருதுகிருர்.

கல்வித் திணைக்களத்தில் நிதிப்பிரிவு மேலாளராகத் தம் வாழ்க்கையை ஆரம்பித்த ஆர். என். சட்டத்தரணியாகி அரசியலிலும் ஈடுபட்டவர். ஆனுலும் அவர் ஆத்மார்த்தமாக ஈடுபட்ட நிறைவைப் பெற்றது இந்து சாதனம ஆங்கில தமிழ்ப்பதிப்புக்கள் வாயிலாகத் தமிழுக்கும் சைவத்துக்கும் தாம் ஆற்றிய தொண்டுகளிலே தான் என்கிருர். நான் செய்த பணிகளிலெல்லாம் வியாசர் விருந்தெழுதிய பணியையே மேலாக மதிக்கிறேன் என்று சொன்ன ராஜாஜியின் நினைவு தான் நமக்கு வருகிறது.

இந்து சாதனம் இதழின் அறுபதாவது ஆண்டில் ஆசிரியரான ஆர்.என் நூறவது இதழையும் வெளியிட்டு வைக்கப்போகிருர். அவர் பல்லாண்டு வாழ்கவெனத் திருப்பாற்கடல் சார்பில் வாழ்த்துகிறோம். வாயில் வரை வந்து வழியனுப்புகிருர் அந்தப் பெரியவர். வெளியே வருகிறோம்.

இந்துசாதனம் மாதம் ஒரு இதழ் என ஆரம்பித்து வாரம் ஒரு இதழாகி, வாரம் இரு இதழ் (செவ்வாய், வெள்ளி) என வெளி வந்த காலம் (1964) இந்து சாதனத்தின பொற்காலம். அப்போது ஆங்கில தமிழ்ப் பதிப்புக்களுக்காக வாரம் நாலு தலையங்கங்கள் எழுதியதைப் பெறற்கரிய பேறெனக் கருதுகிறேன் என்று முகமலர்வுடன் ஆர். என் சொன்னது நினைவுக்கு வருகிறது. அந்தப் பொற்காலம் ஏன் தொடரவில்லை; தொடர வேண்டாமா?

புதிய அமைப்பில் பழம் பெரும் இதழான இந்து சாதன ஆங்கிலதமிழ்ப்பதிப்புக்கள் வெளிவரவேண்டும். நமதுகலாசாரத்துக்குஅரிய சேவை செய்த இந்து சாதனம் இன்னும் பல்லாண்டுகள் வாழச் சைவத்தாபனங்களும் தேவஸ்தானங்களும், பெருமக்களும் ஆதரவு நல்க வேண்டும் சைவத்தமிழ் மக்கள் நினைத்தால் இது இயலாத காரியமன்று!

### இலக்கிய...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள்; உடல் கூற்று வண்ணம் (anatomy) வேண்டாம்'' என்ற பல்லவியாக ஒலிக்கத் தொடங்கியுள்ளதைச் சமீபத்தில் நிகழ்ந்த பண்டிதமணி நினைவு மலர் வெளியீட்டு விழாவில் தலைமைதாங்கிய உயர்நிலை விரிவுரையாளரே ஒப்புக்கொண்டார்.

பல்துறை வன்பயிற்சி அணுகுமுறை (Inter disciplinary approach) பல்கலைக்கழக இலக்கியக் கல்விக்குப் புது மெருகூட்டும். தத்துவத்துறையினின் விமர்சனமெய்யியல் விரிவுரைகள்இலக்கியமாணவருக்குப் புதிய பரிமாணங்களை நல்கும் என்பது எமது நம்பிக்கை.

''முறையியல்'' பற்றிய பகுதியில் பன்முகப் பார்வையினடிப்படையில் கலை இலக்கியங்களை அணுகும் விமர்சனமுயற்சி விமர்சகனிடம் சில அடிப்படைத் தகைமைகளை வேண்டி நிற்கிறது: மொழியிலக்கணம் பற்றிய அறிவு; இலக்கிய நேசிப்பு, இரசனை, கலையுணர்வு என்பவை.

பேரறிஞர் ராஜாஜி தமிழ் மொழியிலக்கண அறிவுக் குறைவினல் ''அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின்'' என்பதில் வரும் 5-ம் வேற்றுமை 'இன்' உருபுக்கு ஒப்புப்பொருள் காணுமல், வேட்டல் தீது, உண்ணுமை நன்று என முரண் அணியாக்கி விளக்கியதைப் பண்டிதமணி கண்டித்ததும், காஞ்சிப் பெரியவர் அதற்கு நல்ல விளக்கம் தந்ததும் உன்னிப்பார்க்கத்தக்கவை வ.ரா, 'கல்கி' இருவரும் பாரதியும் தாகூரும் பற்றிய விவாதத்தில் காவிரியினும் கங்கை சிறந்தது' என்பதற்குக் 'காவிரி சாக்கடை நீர்' என்று பொருள் கொள்ளலாமா எனக் குறிப்பிட்டதையும் நினைவுகூர்க.

முல்லைத்தீவு மாவட்டத்தில்

# வெளிநாட்டு உதவியுடன் பல விவசாயத் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன

(மாங்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின்கீழ் மேலும் 9 உழவு இயந்திரங்களும் அதற்குரிய கலப்பைகள் பெட்டிகளும் வந்து சேரவுள்ளன.

1989-90-ம் ஆண்டுகாலபோக விவசாயிகளுக்கு தேவையான பசளைகள், கிருமி நாசினிகள் மரக்கறி விதைகள் மரக்கன்றுகள் மற்றும் தேவையான உபகரணங்கள் வழங்குவதற்கு சமநலச்சேவை உதவி ஆணையாளர் திரு. செல்லையா பஞ்சலிங்கம் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

பழுதடைந்த சிறு நீர்ப்பாசனக் குளங்களின் சுருசுகள் அவசர திருத்தவேலைகள் நடைபெறவுள்ளது. கைத்தெளிகருவிகள் விவசாயிகளுக்கு தொடர்ந்தும் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றன. பழுதடைந்த சிறு நீர்ப்பாசன குளங்களை புனரமைப்புச் செய்வதற்கு கனடியன் அரசாங்கம் நிதி வழங்க முன்வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கனடியன் அரசாங்கத்தின் உதவியுடன் அதிக பழுதடைந்த குளங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் புனரமைப்பு செய்யப்படவிருக்கிறது, இம் மாவட்டத்தில் சமநலச்சேவை திணைக்களத்தினுல் அபிவிருத்தி வேலைகள் நடைபெற்று வருகிறது. ஏழு இலட்சம் ரூபா செலவில் ஏழு சமநலச் சேவை நிலையங்கள் திருத்தவேலை முடிந்து காணப்படுகிறது. மற்றும் தண்டுவான், பனை நின்ருன் குளம், ஐயங்குளம், குஞ்சுக் குளம், உயிளங்குளம், புதுக் குளம், ஒலுமடுக்குளம் ஆகிய குளங்கள் திருத்த வேலைகளும் நடைபெற்று வருகிறது. இக் குளங்களின் திருத்த வேலைக்காக 10 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

விவசாயத் தெருக்கள் அட்டவணையில் உள்ள 18 விவசாய தெருக்களில் 11 விவசாயத் தெருக்கள் வேலைகள் 5 இலட்சம் ரூபா செலவில் நடைபெற்று வருகிறது.

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் எடுத்துக்கொண்ட துரித முயற்சியினுல் சமவீதி வேலைகளுக்கென பெட்டி பூட்டிய இரு உழவு இயந்திரங்கள் சமநலச்சேவை அலுவலகத்திற்கு வந்துள்ளது. இவை ஒட்டுசுட்டான் துணுக்காய் சமநலச் சேவை நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் சூடடிக்கும் மேடைகள் நான்கு அமைப்பதற்கான கேள்விப் பத்திரங்களும் கோரப்பட்டிருக்கின்றன. அவைகள் முறையே துணுக்காய், ஒலுமடு, புதுக்குடியிருப்பு கிழக்குஉடையார்கட்டு, ஆகிய இடங்களில் அமைக்கப்படவுள்ளன. இவை இவ்வருடத்திற்கு முன் பூர்த்தியாகி விடுமெனத் தெரியவருகிறது.

இப்பகுதியில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 750 மண்வெட்டிகள் ரெட்பாளுவின் உதவியுடன் வழங்கப்படவுள்ளது. கடந்த வருடத்தைப் போல் இவ்வருடமும் காலபோகத்துடன் வீட்டுத்தோட்டப் போட்டிகள் நடாத்த ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. திருத்தப்பட்ட சமநலசேவை நிலையங்களுக்குப் புதிதாகத் தளபாடங்கள், அந்தோர் உபகரணங்களும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் மூலமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகரால் ஏற்கனவே வழங்கப்பட்ட ஆறு உழவு இயந்திரங்களுக்குரிய பெட்டிகளும் கலப்பைகளும் இம்மாத முடிவுக்குள் அந்த ஸ்தானிகரால் வழங்கப்படவுள்ளது.

# வடமராட்சி கிழக்கு மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படவுள்ளது

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு மக்களுக்கும் மீளக்குடியமர்தல் நிவாரணம் ரூ2,000 உற்பத்தித்திறன்வாய்ந்த தொழில் முயற்சிக்கான நன்கொடை 4000 ரூபா என்பன கிடைக்கவுள்ளன.

யாழ் மாவட்டத்தின் சகல பகுதி மக்களுக்கும் இந்நிவாரணம் நன்கொடைப்பணம் போன்றன வழங்கப்பட்டு வந்தபோதும் வடமராட்சிப் பகுதியில் உள்ள பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர்பிரிவு, கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் மக்களுக்கு மாத்திரம் இக்கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டு வழங்கப்படாமல் இருந்தது.

வடமராட்சிப் பகுதி மக்களின் இக்குறைபாடு பற்றி முரசொலி 29.08 89-ல் செய்தி வெளியிட்டதையடுத்து இப்பகுதி மக்களுக்கு இக்கொடுப்பனவுகளைவழங்கத் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## அமரர்...

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

மார்க்கத்தில் தொடர்ந்தும் செயற்படுவதில் பெருமைப்படுகின்றோம்.

சோசலிச சமூக அமைப்பை நோக்கிய போராட்டமாகியது விரிவடைந்து வளர்ந்து முன்னேறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவரது அரசியல் மாணுக்கரிற் பலர் அவர் காட்டிய புரட்சிகர மார்க்கத்தில் முன்னேறுவது கண்டு நாம் பெருமைப்படுவதோடு அவ்வகையில் நாமும் தொடர்ந்து முன்செல்வோம். அதுவே நாம் அவருக்கு வழங்கும் கௌரவமாகும்.

சொத்துக்கள் சுகங்களை நாடாது அரசியல் வாழ்வுக்கும் சொந்த வாழ்வுக்கும் இடைய நெருக்கமான பிணைப்பை ஏற்படுத்திக் கொண்டு, தனது சொத்த நலனிலும் பார்க்க தேசத்தினதும் மக்களினதும் மக்களினதும் நலனை முழுமையாக நேசித்து, இந்நாட்டு மக்களைமுதாலளித்துவ சமூக அமைப்பிலிருந்து பூரணமாக விடுவிப்பதில் அல்லும் பகலும் ஒய்வு ஒழிச்சலின்றி உழைத்த அமரர் கார்த்திகேசன் இன்று புதிய உணர்வோடு வளர்ந்து வரும் புதிய தலைமுறையினருக்கு ஒரு சிறந்த ஆதர்ச புருஷராக விளங்குவார் என்பது திண்ணம்.

# உதவிப்பொருள் உத்தரவுப்பத்திரம் வழங்கப்படுகிறது

(தாளையடி)

வடமராட்சியிலிருந்து இடம் பெயர்ந்து வந்து வடமராட்சி கிழக்கில் அம்பன், குடத்தனை கிராமசேவை அலுவலர் பிரிவுகளில் தற்காலிக முகாம்களில் தங்கியிருக்கும் குடும்பங்கள் நிவாரணப் பொருள்கள் பெற்றுக்கொள்வதற்குரிய உத்தரவுப்பத்திரம் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபரால் வழங்கப்பட்டுள்ளது இவர்கள் தங்கியிருக்கும் கிராமங்களிலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைகளில் பொருள்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

மருதன்கேணி, உடுத்துறை முள்ளியான் கிராமசேவ அலுவலர் பிரிவுகளில் தற்காலிக முகாம்களில் தங்கியுள்ள வடமராட்சி அகதிக் குடும்பங்களின் பட்டியல்கள் தயாரிப்பதில் இப்பகுதி கிராம சேவை அலுவலர்கள் ஈடுபட்டுள்ளனர்.

# கிளிநொச்சியில் கண்காட்சி

(முள்ளியான்)

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் முறைசாராக் கல்வித்திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட பொருள்களின் கண்காட்சிச் சாலையும், விற்பனை நிலையமும் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் அண்மையில் திறந்து வைக்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# விதைக்கிழங்கு பெறப் பதிவு செய்யலாம்

(சுன்னுகம்)

விதை உருளைக்கிழங்கிற்காக விண்ணப்பித்த உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட விவசாயிகள் விதை உருளைக்கிழங்கிற்கான முற்பணத்தை உடனடியாகச் செலுத்துமாறு கேட்கப்படுகிறது. அந்தர் ஒன்றுக்கு 150 ரூபா வீதம் முற்பணத்தை உடுவில் கமநலச்சேவை நிலைய அலுவலகத்திலும் பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்களிடமும் செலுத்தமுடியும். முற்பணத்தைச் செலுத்தாத விண்ணப்பதாரிகளுக்கு விதை உருளைக்கிழங்கு வழங்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது. விதை உருளைக்கிழங்கு 'ஹொலன்ட்' நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டு விநியோகிக்கப்பட இருக்கின்றது.


# SPOKEN ENGLISH

90 நாட்களில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க நவீன உளவியல் ரீதியில் கற்றுக் கொடுக்கப்படும் எம்மிடம் பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் இப்பயிற்சியில் தபால் மூலம் படித்து பயனடைந்துள்ளனர் ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாக கற்பவர் எவ்வாறு இலகுவில் ஆங்கிலம் அதனை கற்றுக் கொள்ளலாம் எனும் துறையில் London Diploma பெற்றவரின் அனுசரணையுடனே பாடங்கள் யாவும் தயாரிக்கப்பட்டதாகும்.

மேலதிக விபரங்கட்கு முத்திரை யொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

**BRIGHT TRAINING CENTRE**

P. O. BOX 162 COLOMBO

09041



# கம்பியூட்டர் கல்வி

Diploma in Computer Programming
& Data Processing

Basic Language
4 Months
Weekend Classes

**COMMENCEMENT - 16. 9. 89**

Fees only Rs. 300/- per month

- Lectures by members of I.D P M (London)
- Practicals on I.B.M (compatible)
- தமிழிலும் விளக்கங்கள்
- பயிற்சி முடிவில் Diploma சான்றிதழ்
- வெளிநாடு செல்பவர்களுக்கோர் அரியவாய்ப்பு

C.I.M.A., I.D.P.M., I.A.B.
Short - hand & Typing
நடைபெறுகின்றன.

**School of Business Administration**

(Leaders in Computer Education)
16, 3rd Cross Street
(O.L.R. தேவாலய மேற்குப்பக்கம்)
Jaffna

09071



மானிப்பாய் இந்துக் கல்லூரி
பாடசாலை அபிவிருத்திச் சங்க

# வருடாந்தப் பொதுக் கூட்டம்

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 24. 9. 89 ஞாயிற்றுக்கிழமை காலை 10 00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். பெற்றோர்களும், ஆசிரியர்களும் தவறாது சமுகம் அளிக்கும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

அதிபர்
மானிப்பாய் இந்துக் கல்லூரி
மானிப்பாய்

09126



# பிரத்தியேக வகுப்பு

A/L பொருளியல்

திரு மா. சின்னத்தம்பி B.A B.ph (Hons)

A/ L 89 பொருளியல் II ம் வினுவிடையும்

A/L 90, A/L 91

வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

வகுப்புக்கள் ஆரம்பம் 12. 09. 89
செவ்வாய் மாலை 3.00 மணி

விபரங்கட்கு

இரா. செல்வவடிவேல்
2, சீனிவாசகம் வீதி, கொட்டடி
யாழ்ப்பாணம்.

09109



# CITY PHARMACY

சிற்றி பார்மஸி மானிப்பாய்

## பற்சிகிச்சை நிலையம்

பல் வைத்திய நிபுணர் Dr. S. Rajaratnam
(L. D S. H. D. D)

ஞாயிறு, திங்கள், புதன் கிழமைகளில் காலை 9. 00 மணி தொடக்கம் பகல் 12 00 மணிவரை நோயாளர்களைப் பார்வையிடுவார். Extractions, Fillings, Dentures, Orthodoritics மற்றும் பற்கள் சம்பந்தமான சகல சிகிச்சைகளுக்கும் நவீன வசதிகள் கொண்ட

ஒரே இடம்

**சிற்றி பார்மஸி**

பிரதான வீதி, மானிப்பாய்

09115

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவில் பேராசிரியர் சிவத்தம்பி உரை

# கலை, கலாசாரத்துறையில் நாம் முன்னேறவேண்டும்

''கலை கலாசாரத்துறையில் முன்னேற வேண்டுமானால் அதைப்பயில இந்தியாவுக்கே செல்லவேண்டும் என்கிற மனோபாவம் நம் எல்லோர் மத்தியிலும் உண்டு, காரணம் இந்தியாவில் இருப்பது போன்ற பண்பாடு இங்கில்லை, இருப்பினும், நாம் படிப்படியாக வளர்ந்தேயாக வேண்டும். காத்திரமான ஓர் பண்பாட்டுச் சூழலை எம்மத்தியில் ஏற்படுத்த வேண்டும்''

யாழ் பல்கலைக்கழக நுண்கலைப்பிரிவின் கவின் கலைமன்றத்தினரால்நேற்றுக் கைலாசபதி கலைமன்றத்தில் நடாத்தப்பட்ட நாதவாஹினி, மலர் வெளியீட்டு வைபவத்தில் தலைமையுரையாற்றிய நுண்கலைத்துறைத்துறைத் தலைவர் பேராசிரியர் கா சிவத்தம்பி இவ்வாறுகுறிப்பிட்டார் அவர் மேலும்பேசுகையில்;

''1950-60 களில் நாங்கள் பல்கலைக் கழகத்தில் தமிழ் பயின்ற காலத்தில், தமிழ் படிக்க வேண்டுமென்றால் சென்னை அண்ணாமலை பல்கலைக் கழகங்களுக்கே செல்ல வேண்டும் என்ற ஒரு கருத்திருந்தது. ஆனால் இங்கே பயின்றவர்கள் சென்னை அண்ணாமலை பல்கலைக்கழங்களால் தமிழ் ஆராய்ச்சிக்கென இப்போது அழைக்கப்படுகின்ற ஒரு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்'' என்றும் கூறினார்.

''நுண்கலைத்துறையிலும் நாம் வளர்ச்சி பெற்று இவ்வாறான நிலையை எய்த வேண்டும்'' என்று அவர் மேலும் சொன்னார்.

பேராசிரியர் என், பாலகிருஸ்ணன் உரையாற்றுகையில்; பல்கலைக்கழங்கள் சமூகத்திலிருந்து ஒதுங்கியிருப்பது சரியல்ல. சமூகத்தைப் புரிந்து அதனோடு உறவாடும்நிலையை ஏற்படுத்தவேண்டும். கலை, கலாசாரத்துறையின் மூலமே சமூகத்துடனான தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வது சுலபம். பல்கலைக்கழகத்திறகு வெளியேயும் கலைஞர்கள் இருக்கிறார்கள். அவர்களுடனான தொடர்புகள் பல்கலைக்கழக வளர்ச்சிக்கும் சமூகத்துடனான நெருக்கமானதொடர்புகளுக்கும் ஏற்றதாக அமையும்'' என்றார்

உபவேந்தர் திரு அ துரைராசா வெளியீட்டுரைநிகழ்த்துகையில்''இராமநாதன் நுண்கலைப்பிரிவு மாற்றாந்தாய் பிள்ளையாகவே மதிப்பிடப்பட்டு வந்தது. அது இப்போது சொந்தப் பிள்ளையாகி, மூத்த பிள்ளையாகும் நிலையில் வளர்ச்சி பெற்றுள்ளது'' என்று கூறினார்.

மேற்படி நிகழ்வில் மன்றத் தலைவர் செல்வி மதிமாலா அமிர்தநாயகம் அறிமுகவுரையும் பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் ஆசியுரையும் செல்வி பிரியதர்ஷினி சீனிவாசன் நன்றியுரையும் நிகழ்த்தினர்.

நூல் வெளியீட்டு வைபவத்தைத் தொடர்ந்து நுண்கலைப் பிரிவு மாணவ, மாணவிகளின் பண்ணிசை. காயகபிருந்தம், வாத்யபிருந்தம் (மனித புராணம்) நடனம் ஆகிய கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன;

## இந்திய பீடிஇலை இறக்குமதிதடை 5லட்சம் பேர் வேலையிழப்பு

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பீடி இலையின் இறக்குமதியும் இந்திய விரோத நடவடிக்கைகளையடுத்து தடை செய்யப்பட்டதால், ஐந்து லட்சம் பீடித் தொழிலாளர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

இத்தகவலை ஐ சோ.மு. உறுப்பினர் திரு, அத்தாவுட செனவிரத்தின பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து பீடிஇலை இறக்குமதி செய்யப்படாவிட்டால் இத்தொழிலாளர்கள் தொழில்களை இழக்கும் அபாயமும் ஏட்பட்டுள்ளது இத்தொழிலாளர் பிரச்சினையை அரசு உடனடியாக கவனிக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

### வன்செயலில்...

பொது நிர்வாக அமைச்சு இ.த.ஆ. சங்கத்திற்கு இவ்வருட ஆரம்பத்தில் அறிவித்திருந்தது பின்னர் இவ் விடயம் ஏப்பிரல் மாத அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சு, சகல மாவட்டக் கல்விப் பணிப்பாளர்களையும் கோரியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னர் பொது நிர்வாக அமைச்சினால் அனுப்பப்பட்ட நஷ்டஈடு வழங்குதல் தொடர்பான சுற்று நிருபங்கள், அரச ஊழியர் கடமையிலுள்ள போது, ஏற்பட்ட வன்செயலால் பாதிக்கப்பட்டிருந்தால் மாத்திரம் நஷ்டஈடுவழங்கலாமெனத் தெரிவித்திருந்தது.

கடமையில்லாத நேரத்தில் மரணமடைந்த அல்லது காயமடைந்த அல்லது ஊனமடைந்த ஆசிரியர்கள் அல்லது அவரின் உரித்துடையோர், சம்பந்தப்பட்ட கல்விப்பணிப்பாளர்களுக்கு விண்ணப்பித்து விட்டு அதன் பிரதியை இ.த.ஆ. சங்கப் பணிமனைக்கு அனுப்பிவைக்குமாறும் பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

அமைச்சரவையின் இத்தீர்மானத்தால், 1983 ஜூலை 23-ம் திகதிக்குப் பின்னர், இனக்கலவரத்தால், அல்லது வன்செயல் காரணமாக, அல்லது பயங்கரவாதத்திற்கு எதிரான இலங்கை - இந்திய இராணுவ நடவடிக்கைகளினால் மரணமடைந்த அல்லது காயமடைந்த நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரியரின் குடும்பங்கள் காலங் கடந்தாலும் நஷ்ட ஈட்டைப்பெற தகுதி பெறுகின்றன எனவும் மகாசிவம் தெரிவித்துள்ளார்.

### 144 விவசாய..

உத்தியோகத்தர்களையும் கிராம சேவைஅலுவலர்களாக நியமிக்கும் அரசின் திட்டப்படி யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 144 விவசாய உத்தியோகத்தர்களுக்கும் 64 விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்களுக்கும் நீண்டகாலமாக கிராமசேவை அலுவலர் நியமனம் வழங்கப்படாமலிருந்தமை குறிப்பிடத்தக்கது.

64 விரிவாக்க உத்தியோகத்தர்களுக்கும் விரைவில் கடிதங்கள் அனுப்பிவைக்கப்படவுள்ளன.

### ஈட்டி...

மத்திய அரசும் ஒப்பந்தம் செய்துகொண்ட போதிலும் பேர்டோ பிரிவினர் இதை அலட்சியம் செய்து தாக்குதல்களை ஆரம்பித்தனர். இதையடுத்து இப்போது அங்கு இந்திய இராணுவம் அனுப்பப்பட்டுள்ளது.

### திருமலை...

பகுதிகளில் இவ்வாறு நியமனம் பெறவுள்ளனர்,

தேசியரீதியில் நடாத்தப்பட்ட பரீட்சைப் புள்ளிகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டதினாலும், ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் பற்றுக்குறை வடகிழக்குப் பகுதிளில மேலும் அதிகளவு இருப்பதாலும் இந்திய மனத்தை வழங்க மாகாணக் கல்வி அமைச்சு இணங்கியதாக அமைச்சுச் செயலாளர் ஜனாப். எம் எம். மன்சூர் தெரிவித்தார்.

### வன்னி...

பரன் கூறியுள்ளார்.

முகாம் அக்கட்டிடத்தில் அமைக்கப்பட்டதினால்மடுகந்த சமநலசேவைப் பிரிவு இயங்க முடியாது உள்ளதாகவும் இவர் குறிப்பிட்டார்.

## பெல்கிரேட்டில் ரஞ்சன் உரை

உலகில் இருவல்லரசுநாடுகளின் ஆதிக்கம் குறைந்து வரும் அதேசமயம் பிராந்தியத்தில் சில சக்தி வாய்ந்த நாடுகள் உறவுகளில் தமது செல்வாக்கைப்பிரயோகிப்பது குறித்து அங்கத்துவ நாடுகள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன அணிசேரா மாநாட்டில் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

### சர்வகட்சி -

ஆனந்தசங்கரி, திரு. மாவை சேனாதிராஜா ஆகியோர் கூட்டணியின் சார்பில் கலந்து கொள்ளவிருக்கின்றனர். ரெலோ இயக்கமும், ஈரோஸ் இயக்கமும் இம்மாநாட்டில் கலந்து கொள்ள ஏற்கனவே விருப்பம் தெரிவித்துள்ளன.

இருபத்திமூன்று பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளுக்கும் இம்மாநாட்டில் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக சர்வதேச விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

### புலோலியில்..

நடராஜா (வயது 50) 5 பிள்ளைகளின் தந்தையும், பருத்தித்துறை புலோலி கிழக்கைச் சேர்ந்த கார்த்திகேசு, பஞ்சலிங்கம் (வயது 50) ஆகிய இருவருமே துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி பலியானவராவர்.

இதே மாலை புலோலி இந்திய அமைதிகாக்கும் படை முகாமிற்கு அருகாமையில் ஆண்டியாவளவு வயிரவர் ஆலயச்சந்தி வீதியில் நடமாடிக்கொண்டிருந்த புலோலி தெற்கைச் சேர்ந்த நில அளவைப்பகுதியில்கடமையாற்றும் முருகேசு சங்கரலிங்கம்(வயது 27) என்பவரே துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியானார்.

## பராயம் அடையும் வயதை 18 ஆகக்குறைக்கப் பிரேரணை

பராயம் அடையும் வயது இருபத்தியொரு வயதிலிருந்து பதினெட்டுவயதிற்குக் குறைப்பதற்கான சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதற்கான அறிவிப்பு அரச வர்த்தமானியிலும் பிரசுரமாகியுள்ளது.

இச்சட்டம் அமுலுக்கு வந்ததும் பதினெட்டு வயதடைந்தவர்களும் பராயம் அடைந்தவர்களாகக்கணிக்கப்படுவர்.

## வெல்டிங் நெருப்புப் பற்றி எண்ணைக்குதம் எரிந்தது

எண்ணைக் குதமொன்றுக்கு 'வெல்டிங்' செய்து கொண்டிருந்த வேளை திடீரெனத் தீப்பற்றி எரிந்தது சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் கடந்த வெள்ளிக்கிழமையன்று இச்சம்பவம் இடம் பெற்றது.

தீயணைப்புப்படையினரும், பொலிசாரும், பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்களும் கூட்டாக எடுத்த முயற்சியினால் பதினைந்து நிமிடங்களில் தீ அணைக்கப்பட்டது.

## பறக்கும் தட்டுக்கள் பற்றி ஆராய்ச்சி நடத்த புதியகுழு

(மாஸ்கோ)

மற்றக்கிரகங்களில் இருந்து வந்து வானில் பறப்பதாகக் கூறப்படும் பறக்கும் தட்டுகள் பற்றிய ஆராய்ச்சி நடாத்துவதற்காக ரஷ்ய விசேட விஞ்ஞானிகள் குழுவொன்றை அமைத்துள்ளது. பறக்கும் தட்டுகளுடன் நேரடியாக சம்பந்தப்பட்டவர்களைச் சந்தித்து இக்குழு தகவல்களைப்பெற்று ஆராயவுள்ளது.

றக்கும்தட்டு வெறும் கட்டுக்கதை என்பதை பல சோவியத் விஞ்ஞானிகள் மறுத்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

1970-ம்ஆண்டுகளில் அமெரிக்காவும் இத்தகைய விசாரணைக் குழுவொன்றை'புளூபுக்' என்ற பெயரில் நியமித்து விசாரணை நடாத்தி பறக்கும் தட்டுபற்றி முடிவு ஏதும் எடுக்கமுடியாத நிலையில் தனது திட்டத்தைக் கைவிட்டது குறிப்பிடத்தக்கது

## 15 லட்சம் ரூபா செலவில் புதிய அலுவலகம் அமையும்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டத்திற்கு புதிய கட்டிடம் ஒன்று அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் தற்பொழுது கோட்ட அலுவலகம் இயங்கும் கட்டிடம் மிகப்பழைமையானதும் அலுவலகத்திற்குப் பொருத்தமற்றதும் முன்பு மகளிர் கல்லூரியால் பாவனைக்கு உதவாதது என ஒதுக்கி வைக்கப்பட்டதாகும்

இந்த பழைய கட்டிடம் பரிசீலிக்கப்பட்டதை அடுத்து அப்பழைய கட்டிடம் முழுமையாக அழிக்கப்பட்டு அதே இடத்தில் கோட்டக்கல்வி அலுவலகத்திற்கான சகல வசதிகளுடன் கட்டிடம் அமைக்கத்தீர்மானிக்கப்பட்டுள்ளது.

15 லட்சரூபா செலவில் புதிய கட்டிடம் அமைக்க கட்டிட வரைபடம் வரைந்து நிதி ஒதுகீட்டும் அங்கீகாரமும் பெற்று விரைவில் புதிய கட்டிட வேலைகள் தொடங்கப்படும் எனத்தெரிவிக்கப்பட்டது.

### சர்வகட்சி மாநாடு..

பிரதிநிதிகள் இதில் இடம் பெற்றிருந்தனர். இச்சந்திப்பின் பின்னரே சில எதிர்க்கட்சி உறுப்பினர் இவ்வாறு கருத்து தெரிவித்தனர்.

பாராளுமன்றத்தில் இடைக்கால அரசாங்கம் ஒன்று அமைக்கப்படல் வேண்டும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்குப் பதிலாக பிரதம மந்திரியே பாராளுமன்றத்திற்குப் பொறுப்பாக இருக்கவேண்டும். இதனையடுத்து தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பன தூதுக்குழுவின் சில ஆலோசனைகளாகும்.

ஏனைய கட்சிகளிடமிருந்தும் தனக்கு ஆலோசனைகள் கிடைத்துள்ளதாகவும் எனவே எல்லா ஆலோசனைகளையும் கவனமாகப் பரிசிலனை செய்ய வேண்டியுள்ளது எனவும் ஜனாதிபதி தூதுக்குழு விடம் தெரிவித்தார்.

சர்வகட்சி மாநாட்டைக் கூட்டுவதன் பிரதான நோக்கங்களில் இந்த ஆலோசனைகளைப் பரிசீலனை செய்வதும் ஒன்றாகும் என்று ஜனாதிபதி தூதுக்குழுவிடம் சுட்டிக்காட்டினார்.

சர்வகட்சி மாநாட்டில் முதலாவது அமர்வுக்குப் பின் எல்லாக் கட்சிகள், இயக்கங்களுடனும் தொடர்ச்சியாக ஆலோசனை நடத்தத் தாம் எண்ணியுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஒரு மாதகாலத்திற்குள் இந்த ஆலோசனைகளை நடத்தி முடிப்பதற்குத் திட்டமிட்டுள்ளதாகவும் இது முடிவடைந்ததும் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுப்பது குறித்து முடிவு செய்வதற்காக சர்வகட்சி மாநாடு மீண்டும் நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது சர்வகட்சி மாநாடு எதிர்வரும் புதன்கிழமை பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமாகும் என அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

## வன்னி நவீனசந்தை

(வவுனியா)

அறுபது இலட்சம் ரூபாய் செலவில் வவுனியா நவீன சந்தை புனரமைக்கப்படவுள்ளது. இதற்கான கேள்விப்பத்திரம் கோரப்பட்டிருப்பதாக வவுனியா நகர சபைச்செயலாளர் திரு எஸ். இராமலிங்கம் வவுனியா கச்சேரியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கூறினார்.

### இரு வாரத்தில...

எட்வேர்ட் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

காஸ்ரேர்பைன் ஜெனரேட்டர் மூலம் குடாநாட்டுக்கு மின்சாரம் வழங்குவது குறித்து அமைச்சர் அதிகாரிகளுடன் கலந்தாலோசித்தார் மின்சாரசபைஇதனைப்பொறுப்பேற்றுஉடன்நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அமைச்சர் பணித்தார். துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படின் இருவாரங்களில் இதன்மூலம் குடாநாடு மின்சாரம் பெறலாம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 62ஏ இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகப் பிரிவில் 10.09.89 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.